## பிரித்து எழுதுதல் - சேர்த்து எழுதுதல்

### எழுத்து இலக்கண அறிமுகம்:

தமிழ் மொழியில் எழுத்து இலக்கணம் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. எழுத்து இலக்கணத்தில், எழுத்தின் வகைகள், பத இலக்கணம், சந்தி இலக்கணம் ஆகியன முக்கியப் பகுதிகள் ஆகும்.

### எழுத்தின் வகைகள்:

தமிழ் எழுத்து **இரண்டு** வகைகளைக் கொண்டுள்ளது. அவை,

1. **முதல் எழுத்து**
2. **சார்பு எழுத்து**

### 1. முதல் எழுத்து

- மொழிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவை **முதல் எழுத்துகள்** என்று கூறப்படும்.
- உயிர் எழுத்துகள் **குறில், நெடில்** என்றும், மெய் எழுத்துகள் **வல்லினம், மெல்லினம், இடையினம்** என்றும் ஒலி அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன.
- எழுத்துகளின் பயன்பாடு நோக்கிச் சுட்டு எழுத்து, வினா எழுத்து ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2. சார்பு எழுத்து

- முதல் எழுத்துகளைச் சார்ந்து வருபவை சார்பு எழுத்துகள் எனப்படுகின்றன. உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பு எழுத்துகள் ஆகும்.
- எழுத்துகள் ஒலிக்கும் நேரத்தை **மாத்திரை** என்று கூறுவர். எந்த எந்த எழுத்துகள் எவ்வளவு நேரம் ஒலிக்கும் என்பதைத் தெளிவாக வரையறுத்து இலக்கண நூல்கள் கூறுகின்றன.
- மற்ற உயிரினங்களிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுவது மொழி. மொழி, சொற்களால் உருவாகிறது. சொல், எழுத்துகளின் சேர்க்கை. எழுத்தின் அடிப்படை ஒலி. மனித உடலில் இருந்து ஒலி எப்படித் தோன்றுகிறது என்பதைத் தமிழ் இலக்கண நூல்கள் விளக்குகின்றன. மொழியின் அடிப்படை ஒலி என்பதால் ஒவ்வோர் எழுத்தும் எப்படிப் பிறக்கின்றன என்பது பற்றியும் இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. மூக்கு, உதடு, பல், நாக்கு, அண்ணம் ஆகிய உறுப்புகளின் செயல்பாட்டால் உயிர் எழுத்துகளும், மெய் எழுத்துகளும் எவ்வாறு தோன்றுகின்றன என்று இலக்கண நூல்கள் துல்லியமாகக் கூறுகின்றன.

- தமிழில் எல்லா எழுத்துகளும் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. சொல்லின் முதல் எழுத்தாக வரக்கூடிய எழுத்துகள் இவை என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே சொல்லுக்கு இறுதியில் வரக்கூடிய எழுத்துகள் பற்றியும் வரையறை செய்யப்பட்டுள்ளது. சொல்லுக்கு இடையில் ஒரு மெய் எழுத்துக்கு அடுத்து எந்த மெய் எழுத்து வரும் என்ற வரையறையும் தரப்பட்டுள்ளது.

**பதவியல்:**

தமிழ் ஓர் ஒட்டு நிலை மொழியாகும். ஒட்டுநிலை மொழி என்பது ஒரு வேர்ச் சொல்லுடன் விகுதி, இடைநிலை, சாரியை முதலியன சேர்ந்து ஒரு சொல்லாகத் தோன்றுவது ஆகும். (இவற்றைப் பற்றி விரிவாகப் பின்னர் படிக்கலாம்) தமிழில் முன் ஒட்டுகள் இல்லை; பின் ஒட்டுகளே உள்ளன. வேர்ச் சொல்லுடன் பல உருபுகளும் சேர்ந்து சொற்கள் உருவாகும் முறை இலக்கணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**எடுத்துக்காட்டாக:**

போ என்பது ஒரு வேர்ச் சொல்லாகும். இதனுடன் **வ்** என்ற எதிர் கால இடைநிலையும், **ஆன்** என்ற ஆண்பால் ஒருமை வினைமுற்று விகுதியும் இணைந்து,

போ + வ் + ஆன் = போவான் என்று ஒரு சொல் உருவாகிறது. இலக்கணத்தில் இதைப் பற்றிச் சொல்லும் பகுதிக்குப் **பதவியல்** என்று பெயர்.

**சந்தி இலக்கணம்:**

தமிழில் எழுத்திலக்கணத்தில் முக்கியப் பகுதியாகவும் பெரிய பகுதியாகவும் இருப்பது சந்தி இலக்கணம் ஆகும். சந்தி இலக்கணம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய இலக்கணம் ஆகும். இலக்கண நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் சந்தி இலக்கணத்தைப் **புணர்ச்சி இலக்கணம்** என்று கூறுவர்.

**எடுத்துக்காட்டாக:**

ஓடி + போனான் = ஓடிப்போனான் என்று வரும்.

- இங்கு இரண்டு சொற்கள் சேரும்போது, இரண்டுக்கும் இடையில் **ப்** என்ற மெய் எழுத்துத் தோன்றி இருக்கிறது. இவ்வாறு இரண்டு சொற்கள் சேரும்போது பல வகையான மாற்றங்கள் ஏற்படும்.

**சந்தி வகைகள்;**

இரண்டு சொற்கள் சேரும்போது ஏற்படும் மாற்றங்கள் நான்கு வகைகளில் அமையும்.

1. கதவு + மூடியது = கதவுமூடியது - **இயல்பாக** இருக்கிறது.
2. மாலை + பொழுது = மாலைப்பொழுது - ஒரு மெய்எழுத்துத் **தோன்றியது**.

3. மர**ம்** + நிழல் = மரநிழல் - ஓர் எழுத்துக் **கெட்டது** (அழிந்தது).
4. கல் + சிலை = **கற்**சிலை- **ல்** என்ற எழுத்து **ற்** என்ற எழுத்தாகத் **திரிந்தது** (மாறியது).

எனவே, இரண்டு சொற்கள் சேரும்போது இயல்பாக வருதல், தோன்றுதல், திரிதல், கெடுதல் ஆகிய நான்கு வகைகளிலும் வரும் என அறியலாம். இங்கு இரண்டு சொற்கள் இருக்கின்றன. முதல் சொல்லை **நிலைமொழி** என்றும், இரண்டாம் சொல்லை **வருமொழி** என்றும் கூறுவர். இந்த மாற்றங்கள் நிலைமொழியின் இறுதி எழுத்துக்கும், வருமொழியின் முதல் எழுத்துக்கும் ஏற்ப அமையும். எனவே ஒரு சொல்லின் முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் பற்றி அறிய வேண்டியது அவசியம் ஆகிறது.

**புணர்ச்சி விதிகள்:**

- வாழை மரம் - இத்தொடரில் வாழை என்பது நிலையான சொல். இதனை நிலைமொழி என்பர். மரம் என்பது வந்து சேர்ந்த சொல். இதனை, வருமொழி என்பர்.
- நிலைமொழியும் வருமொழியும் சேரும் பொழுது எவ்வித மாறுபாடும் இல்லாமல் சேருவதை இயல்பு புணர்ச்சி என்பர்.
- நிலைமொழியும் வருமொழியும் சேரும் பொழுது, ஏதேனும் ஓர் எழுத்துத் தோன்றுதல், எழுத்துத் திரிதல் அல்லது கெடுதல்ஆகிய மாறுபாடுகள் அடைவதை விகாரப் புணர்ச்சி என்பர்.
- வாழைமரம் - இயல்பு புணர்ச்சி
- வாழைப்பழம் - விகாரப்புணர்ச்சி
- இயல்பு புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு இயல்பு புணர்ச்சி என்ற தொடரே அமையும். இதே போல் விகாரப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக, விகாரப் புணர்ச்சி என்பதே அமைதலையும் காண்க.
- இவ்வாறு தோன்றல், திரிதல், கெடுதல் என்பன யாவும் சில விதிகளின் படியே அமையும். அவ்விதிகளைப் புணர்ச்சி விதிகள் என்பர்.

**பல, சில என்பனவற்றின் புணர்ச்சி**

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | பல | = | பலபல |
| சில | + | சில | = | சிலசில |

இவை இயல்பாகப் புணர்ந்துள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | பல | = | பலப்பல |
| சில | + | சில | = | சிலச்சில |

இவை வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்து மிக்குப் புணர்ந்துள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | பல | = | பலற்பல |

| | | | | |
|---|---|---|---|---|
| சில | + | சில | = | சிலற்சில |

இவற்றில், நிலை மொழியில் ஈற்றில் உள்ள அகரம் கெட்டு, லகரம் றகரமாய்த் திரிந்துள்ளன.

இவ்வாறு, பல, சில என்னும் இரு சொற்களும் தமக்கு முன் தாம் வருமாயின் (பல + பல; சில + சில) இயல்பாகவும், வல்லெழுத்து மிக்கம், நிலைமொழி ஈற்றின் அகரம் கெட்டு லகரம் றகரமாகத் திரிந்தும் புணரும்.

மேலும், பல, சில என்னும் சொற்களின் முன், பின் சொற்கள் வந்தால் நிலைமொழியின் அகரம் கெட்டுப் புணரும்; கெடாமலும் புணரும் என்பதையும் அறிந்து கொள்க.

**இதற்கான சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பல | + | கலை | = | பலகலை; | பல்கலை |
| பல | + | சாலை | = | பலசாலை; | பல்சாலை |
| பல | + | தொடை | = | பலதொடை; | பஃதொடை |
| பல | + | மலர் | = | பலமலர்; | பன்மலர் |
| பல | + | நாடு | = | பலநாடு; | பன்னாடு |
| பல | + | வேண்டி | = | பலவேண்டி; | பல்வேண்டி |
| பல | + | அரண் | = | பலஅரண்; | பல்லரண் |
| சில | + | சொல் | = | சிலசொல்; | சில்சொல் |
| சில | + | மலர் | = | சிலமலர்; | சின்மலர் |
| சில | + | வளை | = | சிலவளை; | சில்வளை |
| சில | + | அணி | = | சிலவணி; | சில்லணி |

**இதற்கான புணர்ச்சி விதி கூறும் நூற்பா:**

**பல சில எனும் இவை தம்முன் தாம்வரின்**
**இயல்பும், மிகலும், அகரம் ஏக**
**லகரம் றகரம் ஆகலும் பிறவரின்**
**அகரம் விகற்பம் ஆகலும் உள பிற.** - (நன்னூல் நூற்பா - 170)

(விகற்பம் ஆகல்- ஒரே புணர்ச்சியில் அகரம் கெட்டுப் புணர்தல்; கெடாது நின்றும் புணர்தல்)

**திசைப் பெயர்ப் புணர்ச்சி**

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்பன திசையை உணர்த்தும் பெயர்களாதலால் இவை திசைப் பெயர்கள் ஆகும் என்பதை நீங்கள் அறிவீர்கள்!

ஒரு திசைப் பெயரோடு மற்றொரு திசைப் பெயரும் (வடக்கு + கிழக்கு = வடகிழக்கு) பிற பெயர்களும் (தெற்கு + நாடு = தென்னாடு) சேருவதைத் திசைப்பெயர்ப் புணர்ச்சி என வழங்குகிறோம்.
திசைப் பெயர்ப் புணர்ச்சிக்கான விதிமுறைகளை இப்பகுதியில் காண்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வடக்கு | + | கிழக்கு | = | வடகிழக்கு |
| வடக்கு | + | மேற்கு | = | வடமேற்கு |
| வடக்கு | + | வேங்கடம் | = | வடவேங்கடம் |
| குடக்கு (மேற்கு) | + | திசை | = | குடதிசை |
| குணக்கு (கிழக்கு) | + | திசை | = | குணதிசை |

இவை நிலைமொழியின் ஈற்றில் உள்ள க் என்னும் மெய்யெழுத்தும், கு என்னும் உயிர்மெய்யெழுத்தும் கெட்டுப் புணர்ந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| தெற்கு | + | கிழக்கு | = | தென்கிழக்கு |
| தெற்கு | + | மேற்கு | = | தென்மேற்கு |
| தெற்கு | + | குமரி | = | தென்குமரி |
| தெற்கு | + | பாண்டி | = | தென்பாண்டி |

இவை, நிலைமொழியீற்றில் உள்ள கு என்னும் உயிர்மெய் கெட்டு, றகர மெய் னகர மெய்யாகத் திரிந்து புணர்ந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| மேற்கு | + | காற்று | = | மேல்காற்று |
| மேற்கு | + | ஊர் | = | மேலூர் |

இத்திசைப் பெயர், திசைப் பெயரல்லாத வேறு பெயர்களோடு சேரும் பொழுது, நிலைமொழியிலுள்ள உயிர்மெய்யெழுத்தான கு கெட்டு, றகர மெய், லகர மெய்யாகத் திரிந்து புணர்ந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| கிழக்கு | + | கடல் | = | கீழ்கடல் |
| கிழக்கு | + | நாடு | = | கீழ்நாடு |

இத்திசைப் பெயர், பிறவற்றோடு சேரும் பொழுது, நிலைமொழியில் உள்ள ககர ஒற்றும், ஈற்றும் உயிர்மெய்யெழுத்தான கு வ்வும்,கிழஎன்பதில் உள்ள அகரம் கெட்டுக் கீழ்என முதல் எழுத்து நீண்டும் புணர்ந்தன.
மேற்காட்டியவாறு, திசைப் பெயர்கள் புணரும் முறைகளைக் கூறும் நூற்பா பின்வருமாறு:

**திசையொடு திசையும் பிறவும் சேரின்**
**நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்**
**றகரம் னலவாகத் திரிதலும் ஆம் பிற. - (நன்னூல் நூற்பா - 186)**

**மையீற்றுப் பண்புப் பெயர்ப் புணர்ச்சி**

நன்மை, தீமை, மென்மை, மேன்மை, வெண்மை, செம்மை போல்வன,மை என்னும் விகுதியைக் கொண்டு முடிந்து பண்பை உணர்த்தும் பெயர்கள். ஆதலால் இவற்றை மையீற்றுப் பண்புப் பெயர்கள் என்பர்.

இதனை அறிய, கீழ்க்காணும் நூற்பாவை அறிந்து கொள்க.

**செம்மை சிறுமை சேய்மை தீமை**
**வெம்மை புதுமை மென்மை மேன்மை**
**திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்**
**இன்னவும் பண்பின் பகாநிலைப் பதமே** - (நன்னூல் நூற்பா - 135)

மேற்காட்டிய மையீற்றுப் பண்புப் பெயர்கள் நிலைமொழியாக நின்று, வருமொழியோடு புணரும் போது அடையும் மாற்றங்களைக் கீழ்வருமாறு அறிந்து கொள்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நல்லன் | = | நன்மை | + | காற்று |
| | வெண்பட்டு | = | வெண்மை | + | பட்டு |
| | வெண்குடை | = | வெண்மை | + | குடை |
| | செம்மலர் | = | செம்மை | + | மலர் |

இவை மை விகுதி மட்டும் கெட்டுப் புணர்ந்தன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | பெரியன் | = | பெருமை | + | அன் |
| | சிறியன் | = | சிறுமை | + | அன் |

பண்புப் பகுதிகளின் மை விகுதி கெடுவதோடு, இடையில் உள்ள உகரம் (ரு, று) இகரமாகத் (ரி, றி) திரிந்துள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | மூதூர் | = | முதுமை | + | ஊர் |
| | பாசி | = | பசுமை | + | இ |

முதுமை என்பதன் ஈறு(மை) போய், ஆதி (முதல்) நீண்டு மூதூர் என்று ஆயிற்று.
பசுமை என்பதில் ஈறு போய் ஆதி நீண்டு பாசி என ஆயிற்று.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | பைங்கொடி | = | பசுமை | + | கொடி |
| | பைந்தார் | = | பசுமை | + | தார் |

இவற்றுள்பசுமை என்பதன் ஈறு போய் முதல் நின்ற அகரம் (ப) ஐகாரமாய்த் திரிந்து (பை) வருமொழியின் முதல் எழுத்து இனவெழுத்தாய் (ங், ந்) மெய் மிகுந்து புணர்ந்துள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | சிற்றூர் | = | சிறுமை | + | ஊர் |
| | வெற்றிலை | = | வெறுமை | + | இலை |

இவற்றின் ஈறு போய் (மை) நடுவில் உள்ள ஒற்று இரட்டித்துப் புணர்ந்துள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | வெவ்வேல் | = | வெம்மை | + | வேல் |
| | வெந்நீர் | = | வெம்மை | + | நீர் |

இவற்றில், வெம்மை என்பதன் ஈறு (மை) போய், முன் ஒற்றாகிய மகர வொற்று வகர ஒற்றாகவும், 'ந'கர ஒற்றாகவும் (வ், ந்) திரிந்து முடிந்தன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | செங்கோல் | = | செம்மை | + | கோல் |
| | செந்தமிழ் | = | செம்மை | + | தமிழ் |

இவற்றில், செம்மை என்பதன் ஈறு (மை) போய், வருமொழி முதல் எழுத்துக்கு இனவெழுத்துகளான (ங், ந்) என்பன மிக்குப் புணர்ந்துள்ளன.

மேற்காட்டிய, மையீற்றுப் பண்புப் பெயர்கள் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களைக் கீழ்க்காணும் நூற்பா விளக்குகின்றது. அதனைப் படித்து, நினைவில் நிறுத்துங்கள்.

**ஈறுபோதல்; இடை உகரம் இய்யாதல்;**
**ஆதி நீடல்; அடியகரம் ஐஆதல்;**
**தன்னொற்று இரட்டல்; முன்னின்ற மெய் திரிதல்;**
**இனம்மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே.** - (நன்னூல் நூற்பா - 136)

மேற்காட்டிய நூற்பாவின் அடிப்படையில் கீழ்க்காணும் முறையில், மையீற்றுப் பண்புப் பெயர்ப் புணர்ச்சியை மீண்டும் நினைவு கூர்க.

| விதி | | | எடுத்துக்காட்டு | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஈறு போதல் | - | வெண்மை | + | குடை | = | வெண்குடை |
| 2. | இடை உகரம் இய்யாதல் | - | பெருமை | + | அன் | = | பெரியன் |
| 3. | ஆதி நீடல் | - | பெருமை | + | ஊர் | = | பேரூர் |
| 4. | அடியகரம் ஐ ஆதல் | - | பசுமை | + | பொழில் | = | பைம்பொழில் |
| 5. | தன்னொற்று இரட்டல் | - | சிறுமை | + | ஊர் | = | சிற்றூர் |
| 6. | முன்னின்ற மெய் திரிதல் | - | வெம்மை | + | நீர் | = | வெந்நீர் |
| 7. | இனம் மிகல் | - | செம்மை | + | தமிழ் | = | செந்தமிழ் |

**உடலும் உயிரும்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் | + | ஆசிரியர் | = | தமிழாசிரியர் |
| கடவுள் | + | அருள் | = | கடவுளருள் |
| பொருள் | + | அனைத்தும் | = | பொருளனைத்தும் |

இவை எவ்வாறு இப்படிப் புணர்ந்தன?

நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாக இருந்து, வருமொழியின் முதல் எழுத்து உயிரெழுத்தாகவும் இருந்தால் அவை தாமே ஒன்று சேர்ந்து விடும். இதற்குரிய விதி,

**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** - (நன்னூல் நூற்பா - 204)

**பூப்பெயர்ப் புணர்ச்சி:**

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | + | கொடி | = | பூங்கொடி |
| பூ | + | சோலை | = | பூஞ்சோலை |
| பூ | + | தோட்டம் | = | பூந்தோட்டம் |
| பூ | + | பாவை | = | பூம்பாவை |

பூ என்னும் சொல் நிலைமொழியாக இருந்து, வருமொழி முதலில் வல்லினம் வந்தால், அதற்கு இனமான மெல்லெழுத்துமிக்குப் புணரும்.

இதற்குரிய விதி,

பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் - (நன்னூல் நூற்பா - 200)

மென்மையும் - என்ற உம்மையால், அதே வல்லெழுத்து வந்து புணரும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (பூ | + | கொடி | = | பூங்கொடி; | பூ | + | கொடி | = | பூங்கொடி |
| பூ | + | கூடை | = | பூக்கூடை) | | | | | |

**தேங்காய் - புணர்ச்சி**

தேங்காய் - இச்சொல்லின் பகுதி என்ன தெரியுமா 'தெங்கு' (தென்னை) என்பதாகும்.

தெங்கு + காய் = தேங்காய்

'தெங்கு' என்பது தேங்கு என நீண்டு, ஈற்றிலுள்ள 'கு' என்னும் உயிர்மெய்யெழுத்துக் கெட்டு, தேங்காய் என ஆனது.

இதற்குரிய விதி,

**தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் காய்வரின் என்பதாகும்.**

**தனிக்குறில் முன் ஒற்று**

| | | | | |
|---|---|---|---|---|
| கண் | + | ஒளி | = | கண்ணொளி |
| பண் | + | ஓசை | = | பண்ணோசை |
| மண் | + | ஓசை | = | மண்ணோசை |

இவ்வாறு, நிலைமொழியில் தனிக்குற்றெழுத்தின் முன் மெய்வந்து வருமொழி முதலில் உயிர் வந்தால், நிலைமொழி இறுதியில் உள்ள மெய்யெழுத்து இரட்டித்துப் புணரும். (கண்ண்+ ஒளி = கண்ணொளி)

இதற்குரிய விதி,

**தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**

என்பதாகும்.

**உடம்படுமெய்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மணி | + | அடித்தது | = | மணியடித்தது. | (இ) |
| தீ | + | எரிந்தது | = | தீயெரிந்தது | (ஈ) |
| வாழை | + | இலை | = | வாழையிலை | (ஐ) |
| நிலா | + | அழகு | = | நிலாவழகு | (வ) |
| சே | + | அழகு | = | சேயழகு | சேவழகு (ய,வ) |

நிலைமொழியில் இகர, ஈகார, ஐகார ஈறுகள் வந்து வருமொழி முதலில் உயிர் வந்தால், இடையில் (ய்) யகர உடம்படுமெய் தோன்றும். பிற உயிர்கள் இருப்பின் (வ்) வகர உடம்படுமெய் தோன்றும். ஏகாரம் இருப்பின் யகரம் வகரம் ஆகிய இரண்டு உடம்படுமெய்களும் தோன்றும்.

உடம்படுமெய் விதியாவது,

**இ, ஈ ஐ வழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும்**
**உயிர்வரின் உடம்படுமெய் யென்றாகும்.**

**உடம்படுமெய் ஒரு விளக்கம்:**

- இரண்டு சொற்கள் புணரும் பொழுது, நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் உயிரெழுத்துகளாக இருப்பின் அவ்விரு சொற்களும் ஒன்றுபடாது விட்டிசைக்கும். அவை சேர்ந்திசைக்க வேண்டி, உடம்படாத அவ்விரண்டும் உடம்படுதற்கு (ஒன்று சேர்வதற்கு) அவற்றின் இடையே யகரமும், வகரமும் தோன்றும். இவ்வாறு, ஒன்றுபடுத்தற்காக வரும் மெய்களை உடம்படுமெய் என்பர்" என்பதறிக.

**லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி விதிகள்:**

- லகர, ளகர மெய்களை ஈற்றிலே கொண்ட சொற்கள், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவின மெய்களை முதலாகக் கொண்ட வருமொழிகளோடு புணரும் முறையைப் பொது விதி கொண்டும், சிறப்பு விதி கொண்டும் நன்னூலார் விளக்குகிறார்.
- மேலும் நெல், செல், கொல், சொல், இல் என்னும் லகர ஈற்றுச் சொற்கள் வல்லினத்தை முதலாகக் கொண்ட வருமொழிகளோடு புணரும் முறையைச் சிறப்பு விதிகள் கொண்டு விளக்குகிறார். அவற்றை ஈண்டுக் காண்போம்.

**லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி பொதுவிதி:**

லகர,ளகர மெய் ஈற்றுப் புணர்ச்சிக்குப் பொதுவிதியாக நன்னூலார் நான்கனைக் குறிப்பிடுகிறார். அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகச் சான்றுடன் காண்போம்.

1. நிலைமொழி இறுதியில் உள்ள லகர, ளகர மெய்கள், வேற்றுமைப் புணர்ச்சியில், வருமொழி முதலில் வல்லினம் (க, ச, த, ப) வந்தால் முறையே றகர மெய்யாகவும், டகர மெய்யாகவும் திரியும். அதாவது லகர மெய் றகர மெய்யாகவும், ளகரமெய் டகர மெய்யாகவும் திரியும்.

   **சான்று:**

   **கல்** + கோயில் = **கற்**கோயில்

   **முள்** + செடி = **முட்**செடி

   (**கற்கோயில்** கல்லால் ஆகிய கோயில். மூன்றாம் வேற்றுமைத் தொகை; **முட்செடி** முள்ளை உடைய செடி. இரண்டாம் வேற்றுமைத் தொகை)

2. அல்வழிப் புணர்ச்சியில், வருமொழி முதலில் வல்லினம் வந்தால், லகர ளகர மெய்கள் முறையே றகர மெய்யாகவும், டகர மெய்யாகவும் திரிந்தும் வரும்; திரியாமல் இயல்பாயும் வரும்.

   **சான்று:**

   **கால்** + பெரிது = கா**ற்**பெரிது, கா**ல்**பெரிது

   **முள்** + சிறிது = மு**ட்**சிறிது, மு**ள்**சிறிது

   (இவை அல்வழியில் எழுவாய்த் தொடர்)

   இச்சான்றுகளில் ஒரே புணர்ச்சியில் லகரம் றகரமாய்த் திரிந்தும், திரியாமல் இயல்பாயும் வந்துள்ளதையும், ளகரம் டகரமாய்த் திரிந்தும், திரியாமல் இயல்பாயும் வந்துள்ளதையும் காணலாம்.

3. அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழி முதலில் மெல்லினம் வந்தால் லகர மெய் னகர மெய்யாகவும், ளகர மெய் ணகர மெய்யாகவும் திரியும்.

   **சான்று:**

| | | |
|---|---|---|
| **கல்** + மனம் | = **கன்**மனம் | அல்வழி |
| **வாள்** + மாண்டது | = **வாண்**மாண்டது | |

   (**கன்மனம்** கல் போன்ற மனம். உவமைத் தொகை; **வாண் மாண்டது** வாள் மாட்சிமைப்பட்டது. எழுவாய்த்தொடர்)

| | | |
|---|---|---|
| **தோல்** + முரசு | = **தோன்**முரசு | வேற்றுமை |
| **முள்** + மலர் | = **முண்**மலர் | |

   (**தோன்முரசு** தோலால் கட்டப்பட்ட முரசு. மூன்றாம் வேற்றுமைத் தொகை; **முண் மலர்** முள்ளை உடைய மலர். இரண்டாம் வேற்றுமைத் தொகை)

4. அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழி முதலில் இடையினம் வந்தால் லகர, ளகர மெய்கள் இயல்பாகும்.

**சான்று:**

| | | |
|---|---|---|
| கொல் + யானை | = கொல்யானை | அல்வழி |
| கள் + வழிந்தது | = கள்வழிந்தது | அல்வழி |

(**கொல் யானை** வினைத்தொகை; **கள் வழிந்தது** எழுவாய்த் தொடர்)

| | | |
|---|---|---|
| வில் + வளைத்தான் | = வில் வளைத்தான் | வேற்றுமை |
| தோள் + வலிமை | = தோள் வலிமை | வேற்றுமை |

- (**வில் வளைத்தான்** வில்லை வளைத்தான். இரண்டாம் வேற்றுமைத் தொகை; **தோள் வலிமை** தோளினது வலிமை ஆறாம் வேற்றுமைத் தொகை.)
- லகர ளகர ஈற்றுப் புணர்ச்சிக்குரிய இந்நான்கு பொதுவிதியையும் நன்னூலார் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

**லள வேற்றுமையில் றடவும், அல்வழி**
**அவற்றோடு உறழ்வும் வலிவரின் ஆம், மெலி**
**மேவின் னணவும், இடைவரின் இயல்பும்,**
**ஆகும் இருவழி யானும் என்ப (நன்னூல், 227)**

- (**உறழ்வும்** ஒரே புணர்ச்சியில் லகர, ளகர மெய்கள் றகர, டகர மெய்களாகத் திரிந்தும், திரியாமல் இயல்பாய் வருதலும் உண்டு; **வலி** வல்லினம்; **மெலி** மெல்லினம்; **மேவின்** - வந்தால்; **இடை** இடையினம்; **இருவழி** அல்வழி, வேற்றுமை)

**லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி சிறப்பு விதி**

- நன்னூலார் லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சிக்கு உரிய சிறப்பு விதிகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.
- **தனிக்குறிலைச் சார்ந்த லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி**
- அல்வழிப் புணர்ச்சியில், தனிக்குறிலின் பின் நின்ற லகர, ளகர மெய்கள் வருமொழி முதலில் தகர மெய் வருமானால் முறையே றகர, டகர மெய்களாகத் திரிவதோடு அல்லாமல் ஆய்தமாகவும் திரியும்.
- **குறில்வழி லளத் தவ்வணையின் ஆய்தம்**
- **ஆகவும் பெறும் அல்வழி யானே (நன்னூல், 228)**
- (**தவ்வணையின்** த அணையின்; **அணையின்** வருமானால்)

**சான்று:**

**கல் + தீது = கற்றீது, கஃறீது**

**முள் + தீது = முட்டீது, முஃடீது**

- இச்சான்றுகளில் வருமொழி முதலில் தகரமெய் வர, தனிக்குறிலின் பின் நின்ற லகர ளகரமெய்கள் பொதுவிதிப்படி முறையே றகர, டகர மெய்களாகத் திரிந்ததோடு மட்டும் அல்லாமல், ஆய்தமாகவும் திரிந்தன.
- வருமொழி முதலில் உள்ள தகரம் லகரத்தை அடுத்து வரும்போது றகரமாகவும், ளகரத்தை அடுத்து வரும்போது டகரமாகவும் திரிவதற்கு விதி **னல முன் றனவும்** என்று தொடங்கும் நூற்பாவில் பின்னர்க் கூறப்படும்.

**தனிக்குறிலைச் சாராத லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி**

தனிக்குறிலைச் சாராத லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி நன்னூலார் மூன்று சிறப்பு விதிகளைத் தருகிறார். கல், முள் போன்ற சொற்களில் தனிக்குறிலைச் சார்ந்து லகர ளகர மெய்கள் ஈறாக வந்தன. வேல், வாள் போன்ற சொற்களில் தனி நெட்டெழுத்தைச் சார்ந்தும், மரங்கள் போன்ற சொற்களில் பல எழுத்துகளை அடுத்தும் ல, ள இரண்டும் ஈறாக வந்தன. இத்தகைய சொற்களின் இறுதியில் வரும் லகர ளகர மெய்களே தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் எனக் கூறப்படுகின்றன.

1. அல்வழிப் புணர்ச்சியில் தனிக்குறிலைச் சார்ந்து வாராத லகர, ளகர மெய்கள், வருமொழியின் முதலில் வந்த தகரம் திரிந்த பின்பு தாமும் கெடும். (லகரத்தின் முன் வரும் தகரம் றகரமாகவும், ளகரத்தின் முன்வரும் தகரம் டகரமாகவும் திரியும்.)

   **சான்று:**

   வேல் + தீது > வேல் + றீது > வே + றீது = வேறீது

   இச்சான்றில் வருமொழி முதலில் உள்ள தகரமெய் றகர மெய்யாகத் திரிந்தபின்பு, நிலைமொழி இறுதியில் உள்ள லகரமெய் கெட்டது.

   வாள் + தீது > வாள் + டீது > வா + டீது = வாடீது

   இச்சான்றில் வருமொழி முதலில் உள்ள தகரமெய் டகரமெய்யாகத் திரிந்தபின்பு, நிலைமொழி இறுதியில் உள்ள ளகரமெய் கெட்டது.

2. அல்வழி, வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழியில் முதலில் வந்த நகரமெய் திரிந்த பின்பு நிலைமொழி இறுதியில் உள்ள லகர ளகர மெய்கள் கெடும். (லகரத்தின் முன் வரும் நகரம் னகரமாகவும், ளகரத்தின் முன்வரும் நகரம் ணகரமாகவும் திரியும். இவ்வாறு திரிவதற்கு விதி 'னல முன் றனவும்' என்ற நூற்பாவில் பின்னர்க் கூறப்படும்.)

**சான்று:**

**அல்வழி**

தோன்றல் + நல்லன் > தோன்றல் + னல்லன் >
தோன்ற + னல்லன் = தோன்றனல்லன்

வேள் + நல்லன் > வேள் + ணல்லன் > வே + ணல்லன் = வேணல்லன்

(**வேள்** வேளிர் குலத் தலைவன்)

**வேற்றுமை**

தோன்றல் + நன்மை > தோன்றல் + னன்மை > தோன்ற + னன்மை
= தோன்றனன்மை

வேள் + நன்மை > வேள் > ணன்மை > வே + ணன்மை = வேணன்மை

(தோன்றல் என்பது ஒருவன் பெயர். தோன்றலி**னது** நன்மை, வேளி**னது** நன்மை ஆறாம் வேற்றுமைத் தொகை)

இச்சான்றுகளில் லகரத்தை அடுத்து வந்த நகரம் னகரமாகவும், ளகரத்தை அடுத்து வந்த நகரம் ணகரமாகவும் திரிந்த பின்பு, நிலைமொழி இறுதியில் உள்ள லகர, ளகர மெய்கள் கெட்டன.

3. வருமொழி முதலில் வல்லின மெய்கள் வந்தால் லகர ளகர மெய்கள் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாதலும், முறையே றகரமெய்யாகவும், டகர மெய்யாகவும் திரிதலும் உண்டு; வேற்றுமைப் புணர்ச்சியில் திரியாமல் இயல்பாதலும் உண்டு.

**சான்று:**

**அல்வழி**

**கால்** + கை = கா**ல்**கை (காலும் கையும்)

பொரு**ள்** + புகழ் = பொரு**ள்**புகழ் (பொருளும் புகழும்)

இவை உம்மைத் தொகை. இச்சான்றுகளில் வல்லினம் வர அல்வழியில் லகர ளகர மெய்கள் இயல்பாயின.

**வேல்** + படை = வே**ற்**படை (வேல் ஆகிய படை)

வா**ள்** + படை = வா**ட்**படை (வாள் ஆகிய படை)

இவை இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இச்சான்றுகளில் வல்லினம் வர அல்வழியில் லகர ளகர மெய்கள் முறையே றகர மெய்யாகவும், டகர மெய்யாகவும் திரிந்தன.

**வேற்றுமை**

**கால்** + பிடித்தான் = **கால்** பிடித்தான் (காலைப் பிடித்தான்)

**வாள்** + பிடித்தான் = **வாள்** பிடித்தான் (வாளைப் பிடித்தான்)

இவை இரண்டாம் வேற்றுமைத்தொகை. இச்சான்றுகளில் வேற்றுமையில் வல்லினம் வர லகர ளகர மெய்கள் இயல்பாயின.

**குறில் செறியா லள அல்வழி வந்த**
**தகரம் திரிந்தபின் கேடும், ஈரிடத்தும்**
**வரும் நத் திரிந்தபின் மாய்வும், வலிவரின்**
**இயல்பும் திரிபும் ஆவன உள பிற (நூற்பா, 229)**

இந்நூற்பாவின் இறுதியில் பிற எனக் கூறப்படுவது கொண்டு பின்வருவனவற்றையும் கொள்ளவேண்டும்.

1. பொதுவிதிப்படி அல்வழியில் லகர, ளகர மெய்கள் **கல்**சிறிது, **கற்**சிறிது, **முள்**சிறிது, **முட்**சிறிது என உறழ்ந்தே வரவேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால்,

   **வில்** + படை = வி**ற்**படை

   எனப் பொதுவிதிப்படி உறழாது. லகரமெய் றகரமெய்யாகத் திரிந்தது காணலாம்.
2. தனிக்குறிலைச் சாராத ல, ள ஆகிய இரண்டும் அல்வழியில் இயல்பாகும் எனக் கூறப்பட்டது. சான்று: கா**ல்**கை, பொரு**ள்**புகழ். ஆனால் தனிக்குறிலைச் சார்ந்த ல, ள ஆகிய இரண்டும் அல்வழியில் இயல்பாக வருதலும் உண்டு.

   **சான்று:**

   கொ**ல்** + களிறு = கொ**ல்**களிறு

   கொ**ள்** + பொருள் = கொ**ள்**பொருள்

   இவை வினைத்தொகை.

**நெல், செல், கொல், சொல் என்னும் சொற்களுக்குச் சிறப்புவிதி**

நெல், செல், கொல், சொல் என்னும் நான்கு சொற்களின் இறுதியில் உள்ள லகரமெய் அல்வழிப் புணர்ச்சியில் பொதுவிதிப்படி உறழாது, வேற்றுமைப் புணர்ச்சியைப் போல றகர மெய்யாகத் திரியும்.

**நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்**
**அல்வழி யானும் றகரம் ஆகும் (நன்னூல், 232)**

(**செல்** மேகம்; **கொல்** கொல்லனது தொழில்)

**சான்று:**

நெ**ல்** + சிறிது = நெ**ற்**சிறிது

செ**ல்** + கரிது = செ**ற்**கரிது

கொ**ல்** + கடிது = கொ**ற்**கடிது

சொ**ல்** + புதிது = சொ**ற்**புதிது

**இல் என்னும் சொல்லுக்குச் சிறப்பு விதி**

இல் என்னும் சொல்லுக்கு வீடு, இன்மை (இல்லாமை) எனப் பல பொருள் உண்டு. இங்கு இன்மைப் பொருளை உணர்த்தும் இல் என்ற சொல்லினது புணர்ச்சிக்குரிய சிறப்புவிதி பின்வருமாறு நன்னூலாரால் கூறப்படுகிறது.

1. இல் என்னும் சொல்லோடு ஐகாரச் சாரியை வந்து சேர்ந்தால், வருமொழி வல்லினம் விகற்பமாகும்.(அதாவது மிக்கும், மிகாமல் இயல்பாயும் புணர்தல்)

   **சான்று:**

   **இல்** + பொருள் > இல் + **ஐ** + பொருள் > இல்**லை** + பொருள்

   = இல்**லைப்**பொருள், இல்லை பொருள்

2. இல் என்னும் சொல்லோடு ஆகாரச் சாரியை வந்து சேர்ந்தால் வருமொழி வல்லினம் மிகும்.

   **சான்று:**

   **இல்** + பொருள் > இல் + **ஆ** + பொருள் = இல்**லாப்** பொருள்

3. இல் என்னும் சொல், மேலே கூறிய ஐகாரச் சாரியையோ, ஆகாரச் சாரியையோ பெறாமல் வல்லினத்தோடு இயல்பாகப் புணர்வதும் உண்டு.

   **சான்று:**

   **இல்** + பொருள் = இல்பொருள்

**இல் என் இன்மைச் சொற்கு ஐ அடைய**
**வன்மை விகற்பமும், ஆகா ரத்தோடு**
**வன்மை யாகலும், இயல்பும் ஆகும் (நன்னூல், 233)**

**எடுத்துக்காட்டுகள்:**

புணர்ச்சி என்பது என்ன சான்று தருக.

**விடைகள்:**

இருவேறு சொற்களான, நிலைமொழியும் வருமொழியும் இணையும் சேர்க்கை புணர்ச்சி எனப்படும்.

எ.கா: வாழை + மரம் = வாழைமரம் (இயல்பு புணர்ச்சி)

பாழை + பழம் = வாழைப்பழம் (தோன்றல் விகாரப் புணர்ச்சி)

பால் + குடம் = பாற்குடம் (திரிதல் விகாரப் புணர்ச்சி)

மரம் + வேர் = மரவேர் (கெடுதல் விகாரப் புணர்ச்சி)

**எடுத்துக்காட்டு 2:**

புணர்ச்சி விதிகளை விளக்குக.

**விடைகள்:**

சொற்களில் புணர்ச்சியின்போது, நிலைமொழி இறுதியிலும், வருமொழி முதலிலும் ஏற்படக்கூடிய மாற்றங்களைச் சுருக்கமாகச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் எனக் கூறுவர்.

**எடுத்துக்காட்டு 3:**

புணர்ச்சி விதிகளை அறிவதன் பயன்களைக் கூறுக.

**விடைகள்:**

தமிழ் மொழியைப் பிழையின்றிக் கையாளவும், பாடல் அடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் பிரித்து அறியவும், மொழியின் அமைப்பைப் புரிந்து கொள்ளவும் புணர்ச்சி விதிகள் பெரிதும் பயன்படும்.

**எடுத்துக்காட்டு 4:**

உடம்படு மெய்யெழுத்துகள் எவை?

**விடைகள்:**

ய், வ் என்னும் இரண்டும் உடம்படு மெய்யெழுத்துகளாகும்.

**எடுத்துக்காட்டு 5:**

உடம்படு மெய் எங்குத் தோன்றும்? ஏன்?

**விடைகள்:**

நிலைமொழி ஈற்று உயிரோடு, வருமொழி முதல் உயிர் (உயிர் + உயிர்) புணரும்போது, அவை பொருந்தா. அவற்றைப் பொருந்தச் செய்ய இடையில் ய், வ் என்னும் மெய்களுள் ஒன்று தோன்றும். அதுவே, ‘உடம்படுமெய்’ எனப்படும்.

எ.கா: கலை + அழகு = கலை + ய் + அழகு = கலையழகு (யகர உடம்படுமெய்)

பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு (வகர உடம்படுமெய்)

**எடுத்துக்காட்டு 6:**

யகர (ய்) உடம்படுமெய் எங்குத் தோன்றும்? எடுத்துகாட்டுத் தருக.

**விடைகள்:**

நிலைமொழி ஈற்றில், ‘இ, ஈ, ஐ’ என்னும் உயிர் ஒன்று இருந்து, வருமொழி முதலில் வேறு உயிர் வரும்போது, இடையே யகர (ய்) உடம்படுமெய் தோன்றும்.

எ.கா: காட்சி + அழகு = காட்சி + ய் + அழகு = காட்சியழகு

தீ + அணை = தீ + ய் + அணை = தீயணை

கலை + அறிவு = கலை + ய் + அறிவு = கலையறிவு

**எடுத்துக்காட்டு 7:**

வகர (வ்) உடம்படுமெய் எங்குத் தோன்றும்? எடுத்துக்காட்டுத் தருக.

**விடைகள்:**

உயிர் எழுத்துகளுள் இ, ஈ, ஐ அல்லாத பிற உயிரெழுத்துகளுள் ஒன்றை இறுதியில் பெற்ற நிலைமொழியோடு, வருமொழிமுதல் உயிர் சேரும்போது, 'வகர' உடம்படு பய (வ்) தோன்றிப் புணரும்.

எ.கா: மா + இலை = மா + வ் + இலை = மாவிலை

கோ + இல் = கோ + வ் + ல் = கோவில்

பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு

**எடுத்துக்காட்டு 8:**

'ஏ முன் இவ்விருமையும்' விளக்கி உதாரணம் தருக.

**விடைகள்:**

நிலைமொழி ஈற்றில் 'ஏ' என்னும் உயிர் நின்று, வருமொழி உயிருடன் புணரும்போது, யகர உடம்படுமெய்யோ (ய்), வகர உடம்படுமெய்யோ (1) தோன்றும் என்பதாகும்.

எ.கா: சே + இழை = சே + ய் + இழை சேயிழை

சே + அடி = சே + வ் + அடி = சேவடி

**எடுத்துக்காட்டு 9:**

குற்றியலுகரப் புணர்ச்சியாவது யாது?

**விடைகள்:**

கு, சு, டு, து, பு, று என்பவற்றுள் இன்றை, நிலைமொழியின் இறுதியில் பெற்றுவரும் சொல்லுடன் வருமொழிமுதல் சேருவது குற்றியலுகரப் புணர்ச்சி எனப்படும்.

எ.கா: மாசு + அற்றார் மாசற்றார், மாசு + யாது = மாசியாது

**எடுத்துக்காட்டு 10:**

குற்றியலுகரத்துடன் உயிர் எவ்வாறு புணரும்?

**விடைகள்:**

வருமொழி முதலில் யிரெழுத்து வந்தால், நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரத்திலுள்ள உகரம், மெய்யை விட்டு நீங்கும். (உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்)

மாசு + அற்றார் = 'மாச் + அற்றார்'. பின்னர் நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழிமுதல் உயிர் சேர்ந்து மாசார்' எனப் புணரும். (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே).

**எடுத்துக்காட்டு 11:**

'வரவறிந்தான்' பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.

**விடைகள்:**

வாழைத்தான் = வரவு + அறிந்தான். ‘வரவு’ என்னும் நிலைமொழி ஈற்று முற்றியலுகரம், வருமொழியுடன் (அறிந்தான்) புணரும்போது, முதலில் உயிரெழுத்து வந்ததனால், (குற்றியலுகரம் போல்) குற்றியலுகரம் நீங்கியது. வரவ் + அறிந்தான்.

(**விதி:** முற்றும் அற்று ஒரோவழி). பின்னர், நிலைமொழி ஈற்று (வரவ்) மெய்யுடன் வருமொழி முதல் உயிர் சேர்ந்து (விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே) ‘வரவறிந்தான்’ எனப் புணர்ந்தது.

**எடுத்துக்காட்டு 12:**

காடு + மரம் புணர்ச்சி விதி கூறுக.

**விடைகள்:**

நெடில்தொடர்க் குற்றியலுகரமான ‘காடு’ என்பது ‘மரம்’ என்னும் வருமொழியுடன் புணரும்போது (நிலைமொழியின் இடையே) ‘ட்’ மெய் இரட்டித்து, ‘காட்டு’ என்றாகிக் ‘காட்டுமரம்’ எனப் புணர்ந்தது.

**விதி:** நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

**எடுத்துக்காட்டு 13:**

வீடு + தோட்டம் = புணர்ச்சி விதி கூறுக.

**விடைகள்:**

நெடில்தொடர்க் குற்றியலுகரமான ‘வீடு’ என்பது, தோட்டம்’ என்னும் வருமொழியுடன் புணரும்போது, (சொல்லின் இடையில்) ‘ட்’ மெய் இரட்டித்து, ‘வீட்டு + தோட்டம்’ என்றானது. வன்தொடர்க் குற்றியலுகரத்தின்முன் வருமொழிமுதல் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி, ‘வீட்டுத் தோட்டம்’ எனப் புணர்ந்தது.

விதி: நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

**எடுத்துக்காட்டு 14:**

‘ஆற்றுநீர்’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

ஆற்றுநீர் = ஆறு + நீர்.

- நீர் என்னும் வருமொழியுடன், ‘ஆறு’ என்னும் நெடில்தொடர்க் குற்றியலுகர நிரைமொழி புணரும்போது, (அச்சொல் இடையே) ‘ற்’ என்னும் மெய் (ஒற்று) இரட்டித்து, ‘ஆற்று+ நீர் = ஆற்றுநீர்’ எனப் புணர்ந்தது.

- விதி: நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள், ட, ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

**எடுத்துக்காட்டு 15:**

‘வயிற்றுப்பசி’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

வயிற்றுப்பசி = வயிறு + பசி. ‘பசி’ என்னும் வருமொழி, ‘வயிறு’ என்னம் உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்துடன் புணரும்போது, (சொல்லின்) இடையே ‘ற்’ ஒன்று இரட்டித்து ‘வயிற்று + பசி’ என்றானது. பின்னர் ‘வயிற்று’ என்னும் வன்தொடர்க் குற்றியலுகரத்துடன் வருமொழி (பசி) வல்லினமெய் (ப்) மிக்கு, வயிற்றுப்பசி’ எனப் புணர்ந்தது.

விதி: நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் ட ற ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

**எடுத்துக்காட்டு 16:**

‘பள்ளித் தோழன்’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

பள்ளித் தோழன் = பள்ளி + தோழன். ‘பள்ளி’ என்னும் ரிலைமொழியின் இறுதியில் உயிர் நின்றதால், வருமொழி முதலின் (தோழன்) வல்லினமெய் (த்விக்கு, பள்ளித் தோழன்’ எனப் புணர்ந்தது.

**எடுத்துக்காட்டு 17:**

‘நிலத்தலைவர்’ பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுது

**விடைகள்:**

நிலத் தலைவர் = நிலம் + தலைவர். ‘நிலம் எகானும் நிலைமொழியின் மகர ஈறு (ம்), ‘தலைவர்’ என்னும் வருமொழியுடன் புணரும்போது மவஈறு ஒற்று அழியும்’ என்னும் விதிப்படி கெட்டு ‘நில’ என்னும் உயிர் ஈற்றுச் சொல்லானது. பின்னர்த் ‘தலைவர்’ வருமொழிமுதல் வல்லின மெய் ‘த்’ மிக்கு ‘நிலத்தலைவர்’ எனப் புணர்ந்தது.

விதி: இயல்பினும் விதியினும் என்ற உயிர்முன் வலிமிகும்.

**எடுத்துக்காட்டு 18:**

‘திரைப்படம்’ பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

**விடைகள்:**

திரைப்படம் = திரை + படம்

- ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’ என்னும் விதிப்படி, ‘திரைப்படம்’ எனப் புணர்ந்தது.

**எடுத்துக்காட்டு 19:**

‘மரக்கலம்’ பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

**விடைகள்:**

மரக்கலம் = மரம் + கலம்.

- ‘மவ்வீ ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்பவும் ஆகும்’ என்னும் விதிப்படி ‘மர + கலம்’.
- இயினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’ விதிப்படி ‘மரக்கலம்’ எனப் புணர்ந்தது.

**எடுத்துக்காட்டு 20:**

பூப்பெயர்ப் புணர்ச்சி விளக்குக.

**விடைகள்:**

பூ’ என்னும் நிலைமொழியுடன் வருமொழி வல்லினம் புணரும்போது, அந்த வல்லினம் மிகுந்து புணரும்.

(பூ + செடி பூச்செடி); அன்றி, வருமொழி வல்லின மெய்க்கு இனமாக மெல்லின மெய் மிகுந்தும் புணரும். (பூஞ் + செடி).

விதி: பூப்பெயர்முன் இன மென்மையும் தோன்றும்.

**எ.கா:**

1. பூ + கொடி = பூக்கொடி / பூங்கொடி
2. பூ + சோலை = பூச்சோலை / பூஞ்சோலை
3. பூ + தொட்டி = பூத்தொட்டி / பூந்தொட்டி
4. பூ + பந்தல் = பூப்பந்தல் / பூம்பந்தல்

**எடுத்துக்காட்டு 21:**

‘மண்மகள்’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

‘மண்மகள் = மண் + மகள்’.

‘மண்’ என்னும் நிலைமொழி ஈற்றில் மெய் (ன்) நின்றது; ‘மகள்’ என்னும் வருமொழி முதலில் (ம் + அ = ம) மெய்வந்தது. எனவே, ‘மண்மகள்’ என இயல்பாகப் புணர்ந்தது.

**எடுத்துக்காட்டு 22:**

‘வானொலி’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

வானொலி = வான் + ஒலி

‘வான்’ என்னும் நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யுடன் (ன்) (ஒ) ‘ஒலி’ என்னும் வருமொழி முதலில் நின்ற உயிர் இயல்பாகப் புணர்ந்து, (ன் + ஒ = னொ) ‘வானொலி’ என்றானது.

விதி: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

**எடுத்துக்காட்டு 23:**

‘கல்லதர்’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

கல்லதர் = கல் + அதர்

‘கல்’ என்னும் சொல்லில், தனிக்குறிலை அடுத்த ஒற்று, வருமொழி முதலில் உயிர் வந்ததனால் இரட்டித்தது. கல்ல் + அதர். பின் நிலைமொழி ஈற்று மெய்யுடன் வருமொழி முதல் உயாம் புணர்ந்து, (ல் + அ = ல) ‘கல்லதர்’ என்றானது.

விதி: தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் / உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

**எடுத்துக்காட்டு 24:**

‘பாடவேளை’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

பாடவேளை = பாடம் + வேளை

‘பாடம்’ என்னும் நிலைமொழி ஈற்று மகரமெய் (ம்) கெட்டு, ‘வேல்கள) என்னும் வருமொழியுடன் ‘பாடவேளை’ எனப் புணர்ந்தது.

**எடுத்துக்காட்டு 25:**

‘பழத்தோல்’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

பழத்தோல் = பழம் + தோல்

‘பழம்’ என்னும் நிலைமொழி ஈற்று மகரமெய் (ம்) கெட்டு, ‘பழ’ என உயிர் ஈறு ஆகி, ‘தோல்’ என்னும் வருமொழி முதலின் வல்லினம் (த்) மிக்கப் புணர்ந்து, ‘பழத்தோல்’ என்றானது.

**எடுத்துக்காட்டு 26:**

‘காலங்கடந்தவன்’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக

**விடைகள்:**

காலங் கடந்தவன் = காலம் + கடந்தவன்

‘காலம்’ என்னும் நிலைமொழி ஈற்று மகாகாய் (ம்) கெட்டு, ‘கால’ என உயிர் ஈறாகி, ‘கடந்தான்’ என்னும் வருமொழி முதல் வல்லின மெய்க்கு (க்) இனமான மெல்லின மெய் (ங்) பெற்றுப் புணர்ந்து, ‘காலங் கடந்தவன்’ என்றானது.

விதி: மவ்ஈறு ஒற்று அழிந்து உயிராறு ஒப்பவும்

வன்மைக்கு இனித் திரிபவும் ஆகும்.

**எடுத்துக்காட்டு 27:**

‘பெருவழி’ பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

**விடைகள்:**

பெருவழி = பெருமை + வழி

‘பெருமை’ என்னும் பண்புச் சொல்லின் நிலைமொழி ‘மை’ விகுதி ‘ஈறுபோதல்’ என்னும் விதிப்படி கெட்டு, பெருழி’ எனப் புணர்ந்தது.

**எடுத்துக்காட்டு 28:**

‘கரியன்’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

கரியன் = கருமை + அன்.

ஈறுபோதல் கரு + அன்

இடை உகரம் இய்யாதல் கரி + அன்

உயிர்வரின் ...... இ, ஈ, ஐ வழி யவ்வும் கரிய் + அன்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே கரியன்.

**எடுத்துக்காட்டு 29:**

‘மூதூர்’ பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

**விடைகள்:**

மூதூர் = முதுமை + ஊர்

ஈறுபோதல் முது + ஊர்; ஆதிநீடல் மூது + ஊர்

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் மூத் + ஊர்;
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே மூதூர்.

**எடுத்துக்காட்டு 30:**

**‘பைந்தமிழ்’ பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**விடைகள்:**

பைந்தமிழ் = பசுமை + தமிழ்

“ஈறுபோதல்” (பசு + தமிழ்)

“அடி அகரம் ஐ ஆதல்” (பைசு + தமிழ்)

“இனையவும் பண்பிற்கு இயல்பே” (பை + தமிழ்)

“இனம் மிகல்” (பைந் +தமிழ் ‘பைந்தமிழ்’ எனப் புணர்ந்தது.)

**எடுத்துக்காட்டு 31:**

‘வெற்றிலை’ பிரித்துப் புணர்ச்சிவிதி தருக.

**விடைகள்:**

வெற்றிலை = வெறுமை + இலை

“ஈறுபோதல்” (வெறு + இலை)

“தன் ஒற்று இரட்டல்” (வெற்று + இலை)

“உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்” (வெற்ற் + இலை)

“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” (வெற்றிலை.)

**எடுத்துக்காட்டு 32:**

‘நல்லாடை’ பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக.

**விடைகள்:**

நல்லாடை = நன்மை + ஆடை

“ஈறுபோதல்” (நன் + ஆடை)

“முன்நின்ற மெய் திரிதல்” (நல் + ஆடை)

“தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்” (நல்ல் + ஆடை)

“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” (நல்லாடை)

**எடுத்துக்காட்டு 33:**

‘தன்னொற்றிரட்டல்’ விதியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**விடைகள்:**

வெற்றிலை = வெறுமை + இலை

“ஈறுபோதல்” (வெறு + இலை); “தன்னொற்றிடல் (வெற்று + இலை)

“உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்” வெற்ற் + இலை)

“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (வெற்றிலை)

**பிரித்தெழுதுக:**

**பழைய புத்தகம்**

| 6 ஆம் வகுப்பு | |
|---|---|
| வன்பாற்கண் | வன்பால் + கண் |
| அன்பகத்து இல்லா | அன்பு + அகத்து + இல்லா |

| | |
|---|---|
| நாற்றிசை | நான்கு + திசை |
| ஆற்றுணா | ஆறு + உணா |
| அறிவுடையார் | அறிவு + உடையார் |
| அஃதுடையார் | அஃது + உடையார் |
| நாடில்லை | நாடு + இல்லை |
| தளிர்த்தற்று | தளிர்த்து + அற்று |
| தமக்குரியர் | தமக்கு உரியர் |
| அன்பீனும் | அன்பு + ஈனும் |
| நிழலருமை | நிழல் + அருமை |
| வழக்கென்ப | வழக்கு + என்ப |
| புறத்துறுப்பு | புறம் + உறுப்பு |
| தரமில்லை | தரம் + இல்லை |
| பருப்புணவு | பருப்பு + உணவு |
| கரும்பெங்கே | கரும்பு + எங்கே |
| அவனழுதான் | அவன் + அழுதான் |
| அவளெங்கே | அவள் + எங்கே |
| திருவருட்பா | திரு + அருள் + பா |
| என்பிலதனை | என்பு +இலதனை |
| நாய்க்கால் | நாய் + கால் |
| நன்கணியர் | நன்கு + அணியர் |
| நட்பென்னாம் | நட்பு + என்னாம் |
| வேறில்லை | வேறு + இல்லை |
| தொழிலனைத்தும் | தொழில் + அனைத்தும் |
| இரண்டொழிய | இரண்டு + ஒழிய |
| தமிழழகு | தமிழ் + அழகு |
| மலரடி | மலர் + அடி |
| தேனருவி | தேன் + அருவி |
| மணமுண்டு | மணம் + உண்டு |
| சிலரழுவார் | சிலர் + அழுவார் |
| புகழிழந்தேன் | புகழ் + இழந்தேன் |
| நாற்றிசை | நான்கு + திசை |
| ஆற்றுணா | ஆறு + உணா |
| பலரில் | பலர் + இல் |
| ஓலைச்சுவடி | ஓலை + சுவடி |
| தமிழ்ப்பணி | தமிழ் + பணி |

| | |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | குறிஞ்சி + பாட்டு |
| எழுத்தாணி | எழுத்து + ஆணி |
| பத்துப்பாட்டு | பத்து + பாட்டு |
| இனிதீன்றல் | இனிது + ஈன்றல் |
| இரட்டுற மொழிதல் | இரண்டு + உற + மொழிதல் |

| 7ஆம் வகுப்பு | |
|---|---|
| புறநானூறு | புறம் + நான்கு + நூறு |
| நான்மணிமாலை | நான்கு + மணிமாலை |
| செவ்விதழ் | செம்மை + இதழ் |
| உடற்குண்டாம் | உடற்கு + உண்டாம்(உடல் + கு + உண்டாம்) |
| நின்னடி | நில் + அடி |
| எண்ணென்ப | எண் + என்ப |
| கசடற | கசடு + அற |
| யாதெனின் | யாது + எனின் |
| பொய்யாதொழுகின் | பொய்யாது + ஒழுகின் |
| புறந்தூய்மை | புறம் + தூய்மை |
| தன்நெஞ்சு | தன் + நெஞ்சு |
| புகழில்லை | புகழ் + இல்லை |
| யாதொன்றும் | யாது + ஒன்றும் |
| மணற்கேணி | மணல் + கேணி |
| கற்றறிந்தார் | கற்று + அறிந்தார் |
| கண்ணுடையார் | கண் + உடையார் |
| என்பணிந்த | என்பு + அணிந்த |
| பயக்குமெனின் | பயக்கும் + எனின் |
| மக்கட்கெல்லாம் | மக்கள் + எல்லாம் |
| பிணியின்மை | பிணி + இன்மை |
| குலனுடைமை | குலன் + உடைமை |
| பூங்கோயில் | பூ + கோயில் |
| புடைத்தென்னார் | புடைத்து + என்னார் |
| என்றுருகுவார் | என்று + உருகுவார் |
| அழுக்கில்லா | அழுக்கு + இல்லா |
| அறிவுண்டாம் | அறிவு + உண்டாம் |
| அணிவதாலல்லவோ | அணிவதால் + அல்லவோ |
| விலையில்லா | விலை + இல்லா |

| | |
|---|---|
| நேரிங்கே | நேர் + இங்கே |
| சேமமுற | சேமம் + உற |
| தேசமெல்லாம் | தேசம் + எல்லாம் |
| பருவப்பெண் | பருவம் + பெண் |
| நெற்கதிர் | நெல் + கதிர் |
| மண்ணுண்டோ | மண் + உண்டோ |

| 8 ஆம் வகுப்பு | |
|---|---|
| 1. ஆறுய்த்து | ஆறு + உய்த்து |
| 2. சதுரகராதி | சதுரம் + அகராதி |
| 3. குற்றியலிகரம் | குறுமை + இயல் + இகரம் |
| 4. வீடியாது | வீடு + யாது |
| 5. என்பதியாது | என்பது + யாது |
| 6. வரகியாது | வரகு + யாது |
| 7. மன்னுயிர் | மன் + உயிர் |
| 8. சொற்பிழை | சொல் + பிழை |
| 9. தொண்ணூற்றாறு | தொண்ணூறு + ஆறு |
| 10. இலக்கியம் | இலக்கு + இயம் |
| 11. ஈரிருவர் | இரண்டு + இருவர் |
| 12. பைங்குவளை | பசுமை + குவளை |
| 13. தாய்மையன் பிறனை | தாய்மை + அன்பின் + தனை |
| 14. தாய்மையன்பு | தாய்மை + அன்பு |
| 15. மெய்ஞ்ஞானம் | மெய் + ஞானம் |
| 16. உடம்பார் | உடம்பு + ஆர் |
| 17. நூற்றாண்டு | நூறு + ஆண்டு |
| 18. நாடகம் | நாடு + அகம் |
| 19. அஃறிணை | அல் + திணை |
| 20. போதவிழ் | போது + அவிழ் |
| 21. சிற்றாறு | சிறுமை + ஆறு |
| 22. ஐம்பூதங்கள் | ஐந்து + பூதங்கள் |
| 23. நேருற | நேர் + உற |
| 24. பொற்சிலை | பொன் + சிலை |
| **9 ஆம் வகுப்பு** | |
| 1. அற்குற்ற | அல்+ கு + உற்ற |
| 2. செவிக்குணவு | செவிக்கு + உணவு |
| 3. தந்துய்ம்மின் | தந்து + உய்ம்மின் |

| | |
|---|---|
| 4. வாயினீர் | வாயின் + நீர் |
| 5. கருமுகில் | கருமை + முகில் |
| 6. நாத்தொலைவில்லை | நா + தொலைவு + இல்லை |
| 7. பிணிநோயுற்றோர் | பிணி + நோய் + உற்றோர் |
| 8. இயல்பீராறு | இயல்பு + ஈர்(இரண்டு) + ஆறு |
| 9. நல்லறம் | நன்மை + அறம் |
| 10. ஒருவற்கு | ஒருவன் + கு |
| 11. காட்டுக்கோழி | காடு + கோழி |
| 12. ஆற்றுப்பாலம் | ஆறு + பாலம் |
| 13. கிணற்றுத்தவளை | கிணறு + தவளை |
| 14. செப்புக்குடம் | செம்பு + குடம் |
| 15. சிலப்பதிகாரம் | சிலம்பு + அதிகாரம் |
| 16. இருப்பாணி | இரும்பு + ஆணி |
| 17. நாட்டுப்பண் | நாடு + பண் |
| 18. ஆற்றுமணல் | ஆறு + மணல் |
| 19. ஈண்டினியான் | ஈண்டு + இனி + யான் |
| 20. சேவடி | செம்மை + அடி |
| 21. வெவ்விருப்பாணி | வெம்மை + இரும்பு + ஆணி |
| 22. குருசேற்றி | குருசு + ஏற்றி |
| 23. இத்தகைய | இ + தகைய |
| 24. இருப்புமுளை | இரும்பு + முளை |
| 25. என்றாகடியமான | என்று + ஆகடியம் + ஆன |
| **10 ஆம் வகுப்பு** | |
| 1. அவ்வூர் | அ + ஊர் |
| 2. ஓரிரவு | ஒன்று + இரவு |
| 3. எவ்விடம் | எ + இடம் |
| 4. நெடுநாவாய் | நெடுமை + நாவாய் |
| 5. அங்கண் | அம் + கண் |
| 6. பற்பல | பல + பல |
| 7. புன்கண் | புன்மை + கண் |
| 8. அருவிலை | அருமை + விலை |
| 9. எம்மருங்கும் | எ + மருங்கும் |
| 10. தேங்காய் | தெங்கு + காய் |
| 11. இன்னமுது | இனிமை + அமுது |
| 12. அங்கை | அகம் + கை |

| | |
|---|---|
| 13. விதிர்ப்புற்றஞ்சி | விதிர்ப்பு + உற்று + அஞ்சி |
| 14. பாவிசை | பா + இசை |
| 15. நாற்கரணம் | நான்கு + கரணம் |
| 16. கரணத்தேர் | கரணத்து + ஏர் |
| 17. நாற்பொருள் | நான்கு + பொருள் |
| 18. பொற்குடம் | பொன் + குடம் |
| 19. பெரியன் | பெருமை + அன் |
| 20. பாசிலை | பசுமை + இலை |
| 21. பைங்கூழ் | பசுமை + கூழ் |
| 22. சேதாம்பல் | செம்மை + ஆம்பல் |
| 23. அறனறிந்து | அறன் + அறிந்து |
| 24. திறனறிந்து | திறன் + அறிந்து |
| 25. எந்நாளும் | எ + நாளும் |
| 26. தேவாரம் | தே + வாரம் / தே + ஆரம் |
| 27. தெண்டிரை | தெண்மை + திரை |
| 28. நெடுநீர் | நெடுமை + நீர் |
| 29. அவ்வழி | அ + வழி |
| 30. இருவிழி | இரண்டு + விழி |
| 31. வெள்ளெயிறு | வெண்மை + எயிறு |
| 32. எண்கினங்கள் | எண்கு + இனங்கள் |
| 33. மாதிரத்துறை | மாதிரத்து + உறை |
| 34. செங்கதிர் | செம்மை + கதிர் |
| 35. தண்டளிர்ப்பதம் | தண்மை + தளிர் + பதம் |
| 36. திண்டிறல் | திண்மை + திறல் |
| 37. சிரமுகம் | சிரம் + முகம் |
| 38. பணிந்திவர் | பணிந்து + இவர் |
| 39. அன்பெனப்படுவது | அன்பு + எனப்படுவது |
| 40. கண்ணிரண்டு | கண் + இரண்டு |
| 41. தற்குறிப்பேற்ற அணி | தன் + குறிப்பு + ஏற்றம் + அணி |
| 42. ஈரொன்பது | இரண்டு + ஒன்பது |
| 43. உடற்குண்டாம் | உடல் + கு + உண்டாம் |
| 44. கலநெல் | கலம் + நெல் |
| 45. பூஞ்சோலை | பூ + சோலை |
| 46. பதினெண் | பதின் + எண் |
| 47. பாண்டவரைவர் | பாண்டவர் + ஐவர் |

| | |
|---|---|
| 48. வேறோர் | வேறு + ஓர் |
| 49. நிற்பதொன்றில்லை | நிற்பது + ஒன்று + இல்லை |
| 50. கயிற்றுக்கட்டில் | கயிறு + கட்டில் |
| 51. மருத்துப்பை | மருந்து + பை |
| 52. கொத்துக்கறி | கொந்து + கறி |
| 53. கட்பார்வை | கண் + பார்வை |
| 54. நாண்மலர் | நாள் + மலர் |
| 55. கற்றூணன்று | கல் + தூண் + நன்று |
| 56. முண்ணன்று | முள் + நன்று |
| 57. வேறீது | வேல் + தீது |
| 58. தேங்காய் | தெங்கு + காய் |
| 59. பனாட்டு | பனை + அட்டு |
| 60. பண்டைக்காலம் | பண்டு + காலம் |
| 61. புத்தூர் | புதுமை + ஊர் |
| 62. அஞ்செவி | அகம் + செவி |
| 63. அங்கயற்கண்ணி | அம் + கயல் + கண்ணி |
| 64. அரியாசனமுனக்கே | அரி + ஆசனம் + உனக்கே |
| 65. ஆருயிர் | அருமை + உயிர் |
| 66. ஈராறு | இரண்டு + ஆறு |
| 67. ஊற்றுக்கோல் | ஊன்று + கோல் |
| 68. கற்றார் | கல் + தார் |
| 69. ஐயைந்தாய் | ஐந்து + ஐந்து+ஆய் |
| 70. கொக்கொக்க | கொக்கு + ஒக்க |
| 71. சீறடி | சிறுமை + அடி |
| 72. இன்சொல் | இனிமை + சொல் |
| 73. தம்மிற்பெரியார் | தம் + இன் + பெரியார் |
| 74. திருவருட்பா | திரு + அருள் + பா |
| 75. தீந்தமிழ் | தீம் + தமிழ் |
| 76. தெண்ணீர் | தெள் + நீர் (அ) தெண்மை + நீர் |
| 77. நம்மூர் | நம் + ஊர் |
| 78. தீச்செயல் | தீமை + செயல் |
| 79. உள்கருத்து | உண்மை + கருத்து |
| 80. நாண்மதி | நாள் + மதி |
| 81. பாடாண்திணை | பாடு + ஆண் + திணை |
| 82. புன்கண்ணஞ்சும் | புன்மை + கண் + அஞ்சும் / புன்கண் + அஞ்சும் |

| | |
|---|---|
| 83. மல்லலம்குருத்து | மல்லல் + அம் + குருத்து |
| 84. முந்நீர் | மூன்று + நீர் |
| 85. மெய்ப்பொருள் | மெய்மை + பொருள் |
| 86. தொண்ணூற்றாறு | ஒன்பது + பத்து + ஆறு / தொண்ணூறு + ஆறு |
| 87. நற்கறிகள் | நன்மை + கறிகள் |
| 88. பேராசிரியர் | பெருமை + ஆசிரியர் |
| 89. முத்தமிழ் | மூன்று + தமிழ் |
| 90. மக்கட்கெல்லாம் | மக்கட்கு + எல்லாம் / மக்கள் + கு + எல்லாம் |
| 91. விழிப்புணர்வு | விழிப்பு + உணர்வு / விழி + உணர்வு |
| 92. இருப்புப்பாதை | இரும்பு + பாதை |
| 93. வெற்றிடம் | வெறுமை + இடம் |
| 94. ஓரிடம் | ஒன்று + இடம் |
| 95. ஏட்டிலக்கியம் | ஏடு + இலக்கியம் |
| 96. முத்தொள்ளாயிரம் | மூன்று + தொள்ளாயிரம் |
| 97. அகராதி | அகரம் + ஆதி |
| 98. தன்னெஞ்சு | தன் + நெஞ்சு |
| 99. மின்னணுவியல் | மின் + அணு + இயல் |
| 100. வழியொழுகி | வழி + ஒழுகி |
| 101. பாவிசை | பா + இசை |
| 102. எண்கினங்கள் | எண்கு + இனங்கள் |
| 103. அச்செல்வம் | அ + செல்வம் |
| 104. இல்பொருள் | இன்மை + பொருள் |
| 105. பதிற்றுபத்து | பத்து + இற்று + பத்து/ பதிற்று + பத்து |
| 106. கீழ்ச்செயல் | கீழ்மை + செயல் |
| 107. மேதகு | மேன்மை + தகு |
| 108. மேல்திசை | மேற்கு + திசை |
| 109. கீழ்த்திசை | கிழக்கு + திசை |
| **11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு** | |
| 1. பொருளனைத்தும் | பொருள் + அனைத்தும் |
| 2. எம்முயிர் | எம் + உயிர் |
| 3. வலியறியார் | வலி + அறியார் |
| 4. தீயெறிந்தது | தீ + எறிந்தது |
| 5. நின்றவொன்றே | நின்ற + ஒன்றே |
| 6. சேவழகு | சே + அழகு |
| 7. கருத்ததனுள் | கருத்து + அதனுள் |

| | |
|---|---|
| 8. கொக்கியாது | கொக்கு + யாது |
| 9. கதவடைப்பு | கதவு + அடைப்பு |
| 10. செலவயர்ந்திசன் | செலவு + அயர்ந்திசன் |
| 11. கோட்டுகிர் | கோடு + உகிர் |
| 12. வயிற்று வலி | வயிறு + வலி |
| 13. கானப்பறவை | கானம் + பறவை |
| 14. வடமேற்கு | வடக்கு + மேற்கு |
| 15. மேல்நாடு | மேற்கு + நாடு |
| 16. நற்பயன் | நன்மை + பயன் |
| 17. தொல்கவின் | தொன்மை + கவின் |
| 18. பூங்கொடி | பூ + கொடி |
| 19. மட்கலம் | மண் + கலம் |
| 20. பொற்குடம் | பொன் + குடம் |
| 21. மரவேர் | மரம் + வேர் |
| 22. கழற்காள் | கழல் + கால் |
| 23. பொன்றீது | பொன் + தீது |
| 24. கற்றீது | கல் + தீது |
| 25. கண்ணீர் | கண் + நீர் |
| 26. மண்டீது | மண் + தீது |
| 27. முட்டீது | முள் + தீது |
| 28. பற்பல | பல + பல |
| 29. சிலச்சில | சில + சில |
| 30. பல்பணி | பல + பணி |
| 31. சில்வலை | சில + வலை |
| 32. ஆரிருள் | அருமை + இருள் |
| 33. செறிவறிந்து | செறிவு + அறிந்து |
| 34. பொருளெல்லாம் | பொருள் + எல்லாம் |
| 35. பேரறிவாளன் | பெருமை + அறிவாளன் |
| 36. அச்சிறும் | அச்சு + இறும் |
| 37. கொக்கொக்க | கொக்கு + ஒக்க |
| 38. தீச்சொல் | தீமை + சொல் |
| 39. சிலைத்தொழில் | சிலை + தொழில் |
| 40. தேனினம் | தேன் + இனம் |
| 41. பசும்பொன் | பசுமை + பொன் |
| 42. பூந்தோடை | பூ + தொடை |

| | |
|---|---|
| 43. அருமறை | அருமை + மறை |
| 44. உனக்கியாது | உனக்கு + யாது |
| 45. புகழுடம்பு | புகழ் + உடம்பு |
| 46. முந்நூல் | மூன்று + நூல் |
| 47. முன்னாள் | முந்தைய + நாள் |
| 48. முந்நாள் | மூன்று + நாள் |
| 49. செங்கீரை | செம்மை + கீரை |
| 50. சித்தரெல்லாம் | சித்தர் + எல்லாம் |
| 51. அருந்தவம் | அருமை + தவம் |
| 52. ஈனமுள்ள | ஈனம் + உள்ள |
| 53. பெருந்தமிழ் | பெருமை + தமிழ் |
| 54. செங்கதிர் | செம்மை + கதிர் |
| 55. குறையின்றி | குறை + இன்றி |
| 56. நீரூற்று | நீர் + ஊற்று |
| 57. மனப்பறவை | மனம் + பறவை |
| 58. பெருங்குணம் | பெருமை + குணம் |
| 59. உலகனைத்தும் | உலகு + அனைத்தும் |
| 60. தினந்தினம் | தினம் + தினம் |
| 61. நானென்று | நான் + என்று |
| 62. கருத்தோடிசைத்து | கருத்தோடு + இசைத்து |
| 63. களிற்றியானை | களிறு + யானை |
| 64. நாட்டுப்பற்று | நாடு + பற்று |
| 65. ஆற்றுக்கரை | ஆறு + கரை |
| 66. பச்சூன் | பசுமை + ஊன் |
| 67. பைந்நிணம் | பசுமை + நிணம் |
| 68. வெஞ்சினம் | வெம்மை + சினம் |
| 69. பெருங்களிறு | பெருமை + களிறு |
| 70. கடுந்திறல் | கடுமை + திறல் |
| 71. தமிழன்னை | தமிழ் + அன்னை |
| 72. முள்ளிலை | முள் + இலை |
| 73. மரவிலை | மரம் + இலை |
| 74. பகலுறை | பகல் + உறை |
| 75. முதுமரம் | முதுமை + மரம் |
| 76. வண்டினம் | வண்டு + இனம் |
| 77. அருந்துயர் | அருமை + துயர் |

| | |
|---|---|
| 78. குருகுமுண்டு | குருகும் + உண்டு |
| 79. யாருமில்லை | யாரும் + இல்லை |
| 80. மாசற்றார் | மாசு + அற்றார் |
| 81. நிறையுடைமை | நிறை + உடைமை |
| 82. அறனல்ல | அறன் + அல்ல |
| 83. அறிவில்லார் | அறிவு + இல்லார் |
| 84. விருந்தொரால் | விருந்து + ஒரால் |
| 85. பெருந்தேர் | பெருமை + தேர் |
| 86. நன்றன்று | நன்று + அன்று |
| 87. முண்ணன்று | முள் + நன்று |

**புதிய புத்தகம்**

| 6 ஆம் வகுப்பு | |
|---|---|
| 1. நிலவென்று | நிலவு + என்று |
| 2. தமிழெங்கள் | தமிழ் + எங்கள் |
| 3. அமுதென்று | அமுது + என்று |
| 4. செம்பயிர் | செம்மை + பயிர் |
| 5. செந்தமிழ் | செம்மை + தமிழ் |
| 6. பொய்யகற்றும் | பொய் + அகற்றும் |
| 7. பாட்டிருக்கும் | பாட்டு + இருக்கும் |
| 8. எட்டுத்திசை | எட்டு + திசை |
| 9. மணமென்று | மணம் + என்று |
| 10. இடப்புறம் | இடம் + புறம் |
| 11. சீரிளமை | சீர்மை + இளமை |
| 12. சிலப்பதிகாரம் | சிலம்பு + அதிகாரம் |
| 13. கணினித்தமிழ் | கணினி + தமிழ் |
| 14. வெண்குடை | வெண்மை + குடை |
| 15. பொற்கோட்டு | பொன் + கோட்டு |
| 16. கொங்கலர் | கொங்கு + அலர் |
| 17. அவனளிபோல் | அவன் + அளிபோல் |
| 18. நன்மாடங்கள் | நன்மை + மாடங்கள் |
| 19. நிலத்தினிடையே | நிலத்தின் + இடையே |
| 20. முத்துச்சுடர் | முத்து + சுடர் |
| 21. நிலாவொளி | நிலா + ஒளி |
| 22. தட்பவெப்பம் | தட்பம் + வெப்பம் |
| 23. வேதியுரங்கள் | வேதி + உரங்கள் |

| | |
|---|---|
| 24. தரையிறங்கும் | தரை + இறங்கும் |
| 25. வழித்தடம் | வழி + தடம் |
| 26. கண்டறி | கண்டு + அறி |
| 27. ஓய்வற | ஓய்வு + அற |
| 28. ஏனென்று | ஏன் + என்று |
| 29. ஔடதமாம் | ஔடதம் + ஆம் |
| 30. ஆழக்கடல் | ஆழம் + கடல் |
| 31. விண்வெளி | விண் + வெளி |
| 32. நீலவான் | நீலம் + வான் |
| 33. இல்லாதியங்கும் | இல்லாது + இயங்கும் |
| 34. நின்றிருந்த | நின்று + இருந்த |
| 35. அவ்வுருவம் | அ + உருவம் |
| 36. மருத்துவத்துறை | மருத்துவம் + துறை |
| 37. செயலிழக்க | செயல் + இழக்க |
| 38. இடமெல்லாம் | இடம் + எல்லாம் |
| 39. மாசற | மாசு + அற |
| 40. குற்றமில்லாதவர் | குற்றம் + இல்லாதவர் |
| 41. சிறப்புடையார் | சிறப்பு + உடையார் |
| 42. கைப்பொருள் | கை + பொருள் |
| 43. மானமில்லா | மானம் + இல்லா |
| 44. பசியின்றி | பசி + இன்றி |
| 45. படிப்பறிவு | படிப்பு + அறிவு |
| 46. காட்டாறு | காடு + ஆறு |
| 47. அறிவுடைமை | அறிவு + உடைமை |
| 48. இவையெட்டும் | இவை + எட்டும் |
| 49. நன்றியறிதல் | நன்றி + அறிதல் |
| 50. பொறையுடைமை | பொறை + உடைமை |
| 51. பாட்டிசைத்து | பாட்டு + இசைத்து |
| 52. கண்ணுறங்கு | கண் + உறங்கு |
| 53. வாழையிலை | வாழை + இலை |
| 54. கையமர்த்தி | கை + அமர்த்தி |
| 55. பொங்கலன்று | பொங்கல் + அன்று |
| 56. போகிப்பண்டிகை | போகி + பண்டிகை |
| 57. உள்ளுவதெல்லாம் | உள்ளுவது + எல்லாம் |
| 58. பொருளுடைமை | பொருள் + உடைமை |

| | |
|---|---|
| 59. பயனிலா | பயன் + இலா |
| 60. கல்லெடுத்து | கல் + எடுத்து |
| 61. நானிலம் | நான்கு + நிலம் |
| 62. நாடென்ற | நாடு + என்ற |
| 63. கலமேறி | கலம் + ஏறி |
| 64. கதிர்ச்சுடர் | கதிர் + சுடர் |
| 65. மூச்சடக்கி | மூச்சு + அடக்கி |
| 66. பெருவானம் | பெருமை + வானம் |
| 67. அடிக்குமலை | அடிக்கும் + அலை |
| 68. வணிகச்சாத்து | வணிகம் + சாத்து |
| 69. பண்டமாற்று | பண்டம் + மாற்று |
| 70. மின்னணு | மின் + அணு |
| 71. விரிவடைந்த | விரிவு + அடைந்த |
| 72. நூலாடை | நூல் + ஆடை |
| 73. எதிரொலிக்க | எதிர் + ஒலிக்க |
| 74. தம்முயிர் | தம் + உயிர் |
| 75. இன்புற்றிருக்க | இன்புற்று + இருக்க |
| 76. தானென்று | தான் + என்று |
| 77. எளிதாகும் | எளிது + ஆகும் |
| 78. பாலையெல்லாம் | பாலை + எல்லாம் |
| 79. இன்னுயிர் | இனிமை + உயிர் |
| 80. மலையெலாம் | மலை + எலாம் |
| **ஏழாம் வகுப்பு** | |
| 1. காடெல்லாம் | காடு + எல்லாம் |
| 2. கிழங்கெடுக்கும் | கிழங்கு + எடுக்கும் |
| 3. பெயரறியா | பெயர் + அறியா |
| 4. மனமில்லை | மனம் + இல்லை |
| 5. நேற்றிரவு | நேற்று + இரவு |
| 6. தானிருந்து | தான் + இருந்து |
| 7. கருநீலம் | கருமை + நீலம் |
| 8. நாடுறி | நாழி + உறி |
| 9. நிலவொளி | நிலவு + ஒளி |
| 10. பழந்தின்னி | பழம் + தின்னி |
| 11. நேற்றிரவு | நேற்று + இரவு |
| 12. மனமில்லை | மனம் + இல்லை |

| | |
|---|---|
| 13. குரலாகும் | குரல் + ஆகும் |
| 14. வானொலி | வான் + ஒலி |
| 15. ஒன்றல்ல | ஒன்று + அல்ல |
| 16. இரண்டல்ல | இரண்டு + அல்ல |
| 17. செங்கனி | செம்மை + கனி |
| 18. பெருஞ்செல்வம் | பெருமை + செல்வம் |
| 19. காட்டாறு | காடு + ஆறு |
| 20. அனைத்துண்ணி | அனைத்து + உண்ணி |
| 21. நேரமாகி | நேரம் + ஆகி |
| 22. வேட்டையாடிய | வேட்டை + ஆடிய |
| 23. நினைவாற்றல் | நினைவு + ஆற்றல் |
| 24. இரண்டல்ல | இரண்டு + அல்ல |
| 25. தந்துதவும் | தந்து + உதவும் |
| 26. ஒப்புமையில்லாத | ஒப்புமை + இல்லாத |
| 27. பண்புள்ள | பண்பு + உள்ள |
| 28. அருட்செல்வம் | அருள் + செல்வம் |
| 29. யாதொன்றும் | யாது + ஒன்றும் |
| 30. வலிமையுடையவர் | வலிமை + உடையவர் |
| 31. பூட்டுங்கதவுகள் | பூட்டும் + கதவுகள் |
| 32. தோரணமேடை | தோரணம் + மேடை |
| 33. வாசலலங்காரம் | வாசல் + அலங்காரம் |
| 34. வாழைக்காய் | வாழை+ காய் |
| 35. வாழைப்பழம் | வாழை + பழம் |
| 36. குருவிக்கூடு | குருவி + கூடு |
| 37. குருவிக்கூட்டம் | குருவி + கூட்டம் |
| 38. விளையாட்டுத்திடல் | விளையாட்டு + திடல் |
| 39. விளையாட்டுப்போட்டி | விளையாட்டு + போட்டி |
| 40. தயிர்ச்சோறு | தயிர் + சோறு |
| 41. கொய்யாக்காய் | கொய்யா + காய் |
| 42. கொய்யாப்பழம் | கொய்யா + பழம் |
| 43. அவரைக்காய் | அவரை + காய் |
| 44. பாட்டுப்போட்டி | பாட்டு + போட்டி |
| 45. பறவைக்கூடு | பறவை + கூடு |
| 46. பறவைக்கூட்டம் | பறவை + கூட்டம் |
| 47. பொருட்செல்வம் | பொருள் + செல்வம் |

| | |
|---|---|
| 48. யாதனில் | யாது + எனில் |
| 49. தன்னெஞ்சு | தன் + நெஞ்சு |
| 50. தீதுண்டோ | தீது + உண்டோ |
| 51. பொறாமையில்லா | பொறாமை + இல்லாத |
| 52. மதிலோடை | மதில் + ஓடை |
| 53. முனையுள்ள | முனை + உள்ள |
| 54. வரந்தருவாளே | வரம் + தருவாளே |
| 55. வாக்கருள் | வாக்கு + அருள் |
| 56. வளர்ந்தேறும் | வளர்ந்து + ஏறும் |
| 57. யாண்டுளனோ | யாண்டு + உளனோ |
| 58. கல்லளை | கல் + அளை |
| 59. மரக்கலங்கள் | மரம் + கலங்கள் |
| 60. பத்துப்பாட்டு | பத்து + பாட்டு |
| 61. முல்லைப்பாட்டு | முல்லை + பாட்டு |
| 62. பெருங்கடல் | பெருமை + கடல் |
| 63. இன்றாகி | இன்று + ஆகி |
| 64. புலவுத்திரை | புலவு + திரை |
| 65. அகநானூறு | அகம் + நானூறு |
| 66. உயர்வடைவோம் | உயர்வு +அடைவோம் |
| 67. இவையெல்லாம் | இவை + எல்லாம் |
| 68. எழுத்தென்ப | எழுத்து + என்ப |
| 69. இவ்விரண்டும் | இ + இரண்டும் |
| 70. தொட்டனைத்து | தொட்டு +அனைத்து |
| 71. கற்றனைத்து | கற்று + அனைத்து |
| 72. நன்னாற்றல் | நன்று + ஆற்றல் |
| 73. கரைந்துண்ணும் | கரைந்து + உண்ணும் |
| 74. புறநானூறு | புறம் + நானூறு |
| 75. ஏடெடுத்தேன் | ஏடு + எடுத்தேன் |
| 76. துயின்றிருந்தார் | துயின்று + இருந்தார் |
| 77. என்றுரைக்கும் | என்று + உரைக்கும் |
| 78. எழுதென்று | எழுது + என்று |
| 79. என்றுரைக்கும் | என்று + உரைக்கும் |
| 80. பெண்களெல்லாம் | பெண்கள் + எல்லாம் |
| 81. மேற்றிசை | மேற்கு + திசை |
| 82. வெற்பென்று | வெற்பு + என்று |

| | |
|---|---|
| 83. வாய்த்தியின் | வாய்த்து + ஈயின் |
| 84. கேடில்லை | கேடு + இல்லை |
| 85. எவனொருவன் | எவன் + ஒருவன் |
| 86. பண்பறிந்து | பண்பு + அறிந்து |
| 87. கற்றனைத்தூறும் | கற்றனைத்து + ஊறும் |
| 88. கரைந்துண்ணும் | கரைந்து + உண்ணும் |
| 89. எழுத்தென்ப | எழுத்து + என்ப |
| 90. கோட்டோவியம் | கோடு + ஓவியம் |
| 91. செப்பேடு | செப்பு + ஏடு |
| 92. எழுத்தாணி | எழுத்து + ஆணி |
| 93. வனப்பில்லை | வனப்பு + இல்லை |
| 94. வார்ப்பெனில் | வார்ப்பு + எனில் |
| 95. கலையுலகம் | கலை + உலகம் |
| 96. ஈரமண் | ஈரம் + மண் |
| 97. சித்திரமாக்கினால் | சித்திரம் +ஆக்கினால் |
| 98. வழித்தெடுக்குமாறு | வழித்து + எடுக்குமாறு |
| 99. முகப்பொலிவு | முகம் + பொலிவு |
| 100. உயிர்ப்பில்லை | உயிர்ப்பு + இல்லை |
| 101. நீருலையில் | நீர் + உலையில் |
| 102. மாரியொன்று | மாரி + ஒன்று |
| 103. வறந்திருந்த | வறந்து + இருந்த |
| 104. ஒன்றாகு | ஒன்று + ஆகு |
| 105. முன்றிலோ | முன்று + இலோ |
| 106. தேர்ந்தெடுத்து | தேர்ந்து + எடுத்து |
| 107. ஓடையெல்லாம் | ஓடை + எல்லாம் |
| 108. தாண்டிப்போயி | தாண்டி + போயி |
| 109. ஒண்ணரைக்குழி | ஒண்ணரை + குழி |
| 110. சீலையெல்லாம் | சீலை + எல்லாம் |
| 111. ஞானச்சுடர் | ஞானம் + சுடர் |
| 112. இன்புருகு | இன்பு + உருகு |
| 113. ஞானத்தமிழ் | ஞானம் + தமிழ் |
| 114. இன்சொல் | இனிமை + சொல் |
| 115. அறக்கதிர் | அறம் + கதிர் |
| 116. நாடென்ப | நாடு + என்ப |
| 117. நாடல்ல | நாடு + அல்ல |

| | |
|---|---|
| 118. பிறப்பொக்கும் | பிறப்பு + ஒக்கும் |
| 119. கண்ணில்லது | கண் + இல்லது |
| 120. மலையளவு | மலை + அளவு |
| 121. தன்னாடு | தன் + நாடு |
| 122. இவையில்லாது | இவை + இல்லாது |
| 123. முதுமொழி | முதுமை + மொழி |
| 124. எதிரொலித்தது | எதிர் + ஒலித்தது |
| 125. நாத்தெல்லாம் | நாத்து + எல்லாம் |
| 126. வண்கீரை | வண்மை + கீரை |
| 127. கட்டியடித்தல் | கட்டி + அடித்தல் |
| 128. தானொரு | தான் + ஒரு |
| **எட்டாம் வகுப்பு** | |
| 1. என்றென்றும் | என்று + என்றும் |
| 2. வானமளந்தது | வானம் + அளந்தது |
| 3. அறிந்ததனைத்தும் | அறிந்தது + அனைத்தும் |
| 4. வானமறிந்த | வானம் + அறிந்த |
| 5. இருதிணை | இரண்டு + திணை |
| 6. ஐம்பால் | ஐந்து + பால் |
| 7. நன்செய் | நன்மை + செய் |
| 8. நீளுழைப்பு | நீள் + உழைப்பு |
| 9. சீருக்கேற்ப | சீருக்கு + ஏற்ப |
| 10. வேகமுடன் | வேகம் + உடன் |
| 11. ஓடையாட | ஓடை + ஆட |
| 12. இன்னோசை | இனிமை + ஓசை |
| 13. பாலூறும் | பால் + ஊறும் |
| 14. ஊசியிலை | ஊசி + இலை |
| 15. மறப்பதேயில்லை | மறப்பதே + இல்லை |
| 16. உணவளிக்கின்றனர் | உணவு + அளிக்கின்றனர் |
| 17. நீரானது | நீர் + ஆனது |
| 18. நிலத்திலிருந்து | நிலத்தில் + இருந்து |
| 19. உங்களுடைய | உங்கள் + உடைய |
| 20. பாழாக்கி | பாழ் + ஆக்கி |
| 21. காட்சிகளெல்லாம் | காட்சிகள் + எல்லாம் |
| 22. விழுந்ததங்கே | விழுந்தது + அங்கே |
| 23. செத்திறந்த | செத்து + இறந்த |

| | |
|---|---|
| 24. பருத்தியெல்லாம் | பருத்தி + எல்லாம் |
| 25. வீடுகளெல்லாம் | வீடுகள் + எல்லாம் |
| 26. தென்னம்பிள்ளை | தென்னம் + பிள்ளை |
| 27. ஒன்றாகும் | ஒன்று + ஆகும் |
| 28. சொந்தமானவை | சொந்தம் + ஆனவை |
| 29. சுவரெல்லாம் | சுவர் + எல்லாம் |
| 30. தானடைந்து | தான் + அடைந்து |
| 31. நாடெல்லாம் | நாடு + எல்லாம் |
| 32. செத்திறந்து | செத்து + இறந்து |
| 33. பனித்துளி | பனி + துளி |
| 34. புனிதமானது | புனிதம் + ஆனது |
| 35. தண்ணீரன்று | தண்ணீர் + அன்று |
| 36. தேவையானவை | தேவை + ஆனவை |
| 37. வல்லுருவம் | வன்மை + உருவம் |
| 38. நெடுந்தேர் | நெடுமை + தேர் |
| 39. போலாதும் | போல் + ஆதும் |
| 40. உய்ப்பனவும் | உய்ப்பன + உம் |
| 41. கூற்றவா | கூற்று + அவா |
| 42. ஐம்பெருங்காப்பியம் | ஐந்து + பெருமை + காப்பியம் |
| 43. அரும்பிணி | அருமை + பிணி |
| 44. தெளிவோடு | தெளிவு + ஓடு |
| 45. பிணியுள் | பிணி + உள் |
| 46. இன்பமுற்றே | இன்பம் + உற்றே |
| 47. இவையுண்டார் | இவை + உண்டார் |
| 48. தாமினி | தாம் + இனி |
| 49. கலனல்லால் | கலன் + அல்லால் |
| 50. கோயிலப்பா | கோயில் + அப்பா |
| 51. பகைவனென்றாலும் | பகைவன் + என்றாலும் |
| 52. எண்ணிப்பாரு | என்னி + பாரு |
| 53. தெளிவாகும் | தெளிவு + ஆகும் |
| 54. கரும்பியானை | கரும்பு + யானை |
| 55. போகுமப்பா | போகும் + அப்பா |
| 56. கனகச்சுனை | கனகம் + சுனை |
| 57. நலமெல்லாம் | நலம் + எல்லாம் |
| 58. இடமெங்கும் | இடம் + எங்கும் |

| | |
|---|---|
| 59. மருந்தென | மருந்து + என |
| 60. உடற்கூறுகள் | உடல் + கூறுகள் |
| 61. தங்களுக்கென | தங்களுக்கு + என |
| 62. வந்துள்ளோம் | வந்து + உள்ளோம் |
| 63. பழந்தமிழர் | பழமை + தமிழர் |
| 64. கண்டறிந்து | கண்டு + அறிந்து |
| 65. முழவுதிர | முழவு + அதிர |
| 66. பாடறிந்து | பாடு + அறிந்து |
| 67. முறையெனப்படுவது | முறை + எனப்படுவது |
| 68. மட்டுமல்ல | மட்டும் + அல்ல |
| 69. கயிற்றுக்கட்டில் | கயிறு + கட்டில் |
| 70. ஒத்தாங்கு | ஒத்து + ஆங்கு |
| 71. இன்னாச்சொல் | இன்னா + சொல் |
| 72. கேளாடும் | கேள் +ஆடும் |
| 73. கற்றறிந்தார் | கற்று + அறிந்தார் |
| 74. தொகையறிந்த | தொகை + அறிந்த |
| 75. என்றாய்ந்து | என்று + ஆய்ந்து |
| 76. கசடற | கசடு + அற |
| 77. கண்ணோடாது | கண் + ஓடாது |
| 78. அக்கதிர் | அ + கதிர் |
| 79. உருகெழும் | உருகு + எழும் |
| 80. அகன்றலை | அகன்ற + அலை |
| 81. அக்களத்து | அ + களத்து |
| 82. கதிரீன | கதிர் + ஈன |
| 83. பெடையோடு | பெடை + ஓடு |
| 84. அக்கிளை | அ +கிளை |
| 85. இற்றைக்கூலி | இன்று + கூலி |
| 86. பாதையெலாம் | பாதை + எலாம் |
| 87. முருங்கைச்செடி | முருங்கை + செடி |
| 88. வேலியிலே | வேலி + இலே |
| 89. பெற்றெடுத்தோம் | பெற்று + எடுத்தோம் |
| 90. காலிறங்கி | கால் + இறங்கி |
| 91. உலகமெங்கும் | உலகம் + எங்கும் |
| 92. வெங்கரி | வெம்மை + கரி |
| 93. என்றிருள் | என்று + இருள் |

| | |
|---|---|
| 94. போலுடன்றன | போல் + உடன்றன |
| 95. சிதைந்தோடல் | சிதைந்து + ஓடல் |
| 96. என்றிருள் | என்று + இருள் |
| 97. முற்றுகையிட்ட | முற்றுகை + இட்ட |
| 98. சீவனில்லாமல் | சீவன் + இல்லாமல் |
| 99. முட்காட்டை | முள் + காட்டை |
| 100. மூச்சுக்காற்றை | மூச்சு + காற்றை |
| 101. இதந்தரும் | இதம் + தரும் |
| 102. தமிழால் | தமிழ் + ஆல் |
| 103. நேற்றையப் பொழுது | நேற்று + பொழுது |
| 104. வாய்ப்பளித்த | வாய்ப்பு + அளித்த |
| 105. அரக்கராகி | அரக்கர் + ஆகி |
| 106. விலங்கொடித்து | விலங்கு + ஒடித்து |
| 107. காட்டையெரித்து | காட்டை + எரித்து |
| 108. அடுத்தடுத்து | அடுத்து + அடுத்து |
| 109. அக்களித்து | அ + களித்து |
| 110. அழுக்காறுடையான் | அழுக்காறு + உடையான் |
| 111. மேதகு | மேன்மை + தகு |
| 112. குறைவற | குறைவு + அற |
| 113. குணங்களெல்லாம் | குணங்கள் + எல்லாம் |
| 114. நமனில்லை | நமன் + இல்லை |
| 115. நம்பர்க்கங்கு | நம்பர்க்கு + அங்கு |
| 116. ஆனந்தவெள்ளம் | ஆனந்தம் + வெள்ளம் |
| 117. உள்ளிருக்கும் | உள் + இருக்கும் |
| 118. பெருஞ்செல்வம் | பெருமை + செல்வம் |
| 119. ஊராண்மை | ஊர் + ஆண்மை |
| 120. திரிந்தற்று | திரிந்து + அற்று |
| 121. பேராண்மை | பேர் + ஆண்மை |
| 122. பூத்தேலோ | பூத்து + ஏலோ |
| 123. பெண்ணரசி | பெண் + அரசி |
| 124. விழித்தெழும் | விழித்து + எழும் |
| 125. போவதில்லை | போவது + இல்லை |
| 126. படுக்கையாகிறது | படுக்கை +ஆகிறது |
| 127. தூக்கிக்கொண்டு | தூக்கி + கொண்டு |
| 128. விழித்தெழும் | விழித்து + எழும் |

| | |
|---|---|
| 129. மட்டுமல்ல | மட்டும் + அல்ல |
| 130. போவதில்லை | போவது + இல்லை |
| 131. உனக்கொரு | உனக்கு + ஒரு |
| 132. தூக்கிக்கொண்டு | தூக்கி + கொண்டு |
| 133. கைக்குழந்தைகள் | கை + குழந்தைகள் |
| 134. பண்புடையாளர் | பண்பு + உடையாளர் |
| 135. மிகுதிக்கண் | மிகுதி + கண் |
| 136. மேற்சென்று | மேல் + சென்று |
| 137. பண்பிலான் | பண்பு + இலான் |
| 138. திரிந்தற்று | திரிந்து + அற்று |
| 139. நற்பண்பு | நல்ல + பண்பு |
| 140. குழந்தைகளல்ல | குழந்தைகள் + அல்ல |
| 141. மலையளவு | மலை + அளவு |
| 142. இன்பதுன்பம் | இன்பம் + துன்பம் |
| 143. ஒருவருமில்லையா | ஒருவரும் + இல்லையா |
| 144. குணங்களெல்லாம் | குணங்கள் + எல்லாம் |
| 145. அறிவருள் | அறிவு + அருள் |
| 146. வெற்றிலை | வெறுமை + இலை |
| 147. சிறுந்தொகை | சிறுமை + தொகை |
| 148. படிப்பறிவு | படிப்பு + அறிவு |
| 149. போகிப்பண்டிகை | போகி + பண்டிகை |
| 150. போதில்லை | போது + இல்லை |
| 151. தந்நூல் | தன் + நூல் |
| **9ஆம் மற்றும் 10 ஆம் வகுப்பு - புதிய புத்தகம்** | |
| மணியடி | மணி + அடி |
| பனிக்காற்று | பனி + காற்று |
| ஆலிலை | ஆல் + இலை |
| மரக்கிளை | மரம் + கிளை |
| நுழைவுத்தேர்வு | நுழைவு + தேர்வு |
| கல்லூரிச்சாலை | கல்லூரி + சாலை |
| பற்பசை | பல் + பசை |
| புறநானூறு | புறம் + நான்கு + நூறு |
| மணியழகு | மணி + அழகு |
| தீயெரி | தீ + எரி |
| ஓடையோரம் | ஓடை + ஓரம் |

| | |
|---|---|
| பாவினம் | பா + இனம் |
| இவனேயவன் | இவனே + அவன் |
| சேயடி | சே + அடி |
| சேவடி | சே + அடி |
| தேவாரம் | தே + ஆரம் |
| வட்டாடினான் | வட்டு + ஆடினான் |
| உறவழகு | உறவு + அழகு |
| பொன்வளை | பொன் + வளை |
| கபிலபரணர் | கபிலர் + பரணர் |
| பூக்கூடை | பூ + கூடை |
| கற்சிலை | கல் + சிலை |
| குருவருள் | குரு + அருள் |
| தேயிலை | தே + இலை |
| எனதுயிர் | எனது + உயிர் |
| நாடியாது | நாடு + யாது |
| நிலவொளி | நிலவு + ஒளி |
| வேய்ங்குழல் | வேய் + குழல் |
| புளியஞ்சோறு | புளி + அம் + சோறு |
| பாழ்ங்கிணறு | பாழ் + கிணறு |
| மாம்பழம் | மா + பழம் |
| விளங்காய் | விள + காய் |
| பூஞ்சோலை | பூ + சோலை |
| பூங்கொடி | பூ + கொடி |
| பூந்தொட்டி | பூ + தொட்டி |
| பூவினம் | பூ+ இனம் |
| இசையினிக்கிறது | இசை + இனிக்கிறது |
| திருவருட்பா | திரு + அருள் + பா |
| கோலாட்டம் | கோல் + ஆட்டம் |
| தொன்மையான | தொன்மை + ஆன |
| **9ஆம் மற்றும் 10 ஆம் வகுப்பு** | |
| 1. அறிய முடிகிறது | அறிய + முடிகிறது |
| 2. தமிழ்பேசு | தமிழ் + பேசு |
| 3. கைகள் | கை + கள் |
| 4. பூக்கள் | பூ + கள் |
| 5. கண்டெடுக்கப்பட்டுள்ளன | கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன |

| | |
|---|---|
| 6. மாவடி | மா + அடி |
| 7. தனியாள் | தனி + ஆள் |
| 8. தொன்மையான | தொன்மை + ஆன |
| 9. நூலாகிய | நூல் + ஆகிய |
| 10. அவரவர் | அவர் + அவர் |
| 11. சிற்பக்கலை | சிற்பம் + கலை |
| 12. அக்கல்லில் | அ + கல்லில் |
| 13. தமிழகச் சிற்பக்கலை | தமிழக + சிற்பம் + கலை |
| 14. இதனைக்கொள்ளலாம் | இதனை + கொள்ளலாம் |
| 15. எந்தமிழ்நா | எம் + தமிழ் + நா |
| 16. அருந்துணை | அருமை + துணை |
| 17. கல்வியென்ற | கல்வி + என்ற |
| 18. பாடாண்திணை | பாடு + ஆண் + திணை |
| **11ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு புதிய புத்தகம்** | |
| அணிந்துரை | அணிந்து + உரை |
| பொதுச்சிறப்பு | பொது + சிறப்பு |
| செங்கயல் | செம்மை + கயல் |
| திருப்புகழ் | திரு + புகழ் |
| உயர்ந்தோங்கும் | உயர்ந்து + ஓங்கும் |
| தண்டுடை | தண்டு + உடை |
| இயைவதாயினும் | இயைவது + ஆயினும் |
| புகழெனின் | புகழ் + எனின் |
| சிறுதோல் | சிறுமை + தோல் |
| பொற்சிலம்பு | பொன் + சிலம்பு |
| இழுக்கின்றி | இழுக்கு + இன்றி |
| முறையறிந்து | முறை + அறிந்து |
| அரும்பொருள் | அருமை + பொருள் |
| மனையென | மனை + என |
| பயமில்லை | பயம் + இல்லை |
| கற்பொடி | கல் + பொடி |
| உலகனைத்தும் | உலகு + அனைத்தும் |
| திருவடி | திரு + அடி |
| நீரோடை | நீர் + ஓடை |
| சிற்றூர் | சிறுமை + ஊர் |
| கற்பிளந்து | கல் + பிளந்து |

| | |
|---|---|
| மணிக்குலம் | மணி + குலம் |
| அமுதென்று | அமுது + என்று |
| புவியாட்சி | புவி + ஆட்சி |
| மண்ணுடை | மண் + உடை |
| புறந்தருதல் | புறம் + தருதல் |
| காலத்தச்சன் | காலம் + தச்சன் |
| உழுதுழுது | உழுது + உழுது |
| பேரழகு | பெருமை + அழகு |
| செம்பரிதி | செம்மை + பரிதி |
| வானமெல்லாம் | வானம் + எல்லாம் |
| உன்னையல்லால் | உன்னை + அல்லால் |
| செந்தமிழே | செம்மை + தமிழே |
| ஆங்கவற்றுள் | ஆங்கு + அவற்றுள் |
| தனியாழி | தனி + ஆழி |
| செய்ந்நன்றி | செய் + நன்றி |
| வெங்கதிர் | வெம்மை + கதிர் |
| இனநிரை | இனம் + நிரை |
| புதுப்பெயல் | புதுமை + பெயல் |
| அருங்கானம் | அருமை + கானம் |
| எத்திசை | எ + திசை |
| உள்ளொன்று | உள் + ஒன்று |
| ஒருமையுடன் | ஒருமை + உடன் |
| பூம்பாவாய் | பூ + பாவாய் |
| பெருங்கடல் | பெருமை + கடல் |
| தலைக்கோல் | தலை + கோல் |
| முன்னுடை | முன் + உடை |
| ஏழையென | ஏழை + என |
| நன்மொழி | நன்மை + மொழி |
| உரனுடை | உரன் + உடை |
| கற்சிலை | கல் + சிலை |
| கடற்கரை | கடல் + கரை |
| பன்முகம் | பல் + முகம் |
| மக்கட்பேறு | மக்கள் + பேறு |
| நாண்மீன் | நாள் + மீன் |
| சொற்றுணை | சொல் + துணை |

| | |
|---|---|
| பன்னூல் | பல் + நூல் |
| அஃறிணை | அல் + திணை |
| பஃறுளி | பல் + துளி |
| காப்பியம் | காப்பு + இயம் |
| சுடராழி | சுடர் + ஆழி |
| காட்சியழகு | காட்சி + அழகு |
| தீயணைப்பான் | தீ + அணைப்பான் |
| கலையறிவு | கலை + அறிவு |
| மாவிலை | மா + இலை |
| பூவழகு | பூ + அழகு |
| சேயிழை | சே + இழை |
| சேவடி | சே + அடி |
| மாசற்றார் | மாசு + அற்றார் |
| வீட்டுத்தோட்டம் | வீடு + தோட்டம் |
| காட்டுமரம் | காடு + மரம் |
| முரட்டுக்காளை | முரட்டு + காளை |
| பகட்டுவாழ்க்கை | பகடு + வாழ்க்கை |
| சோற்றுப்பானை | சோறு + பானை |
| ஆற்றுநீர் | ஆறு + நீர் |
| வயிற்றுப்பசி | வயிறு + பசி |
| கயிற்றுவண்டி | கயிறு + வண்டி |
| வரவறிந்தான் | வரவு + அறிந்தான் |
| பள்ளித்தோழன் | பள்ளி + தோழன் |
| நிலத்தலைவர் | நிலம் + தலைவர் |
| திரைப்படம் | திரை + படம் |
| மரக்கலம் | மரம் + கலம் |
| வாயொலி | வாய் + ஒலி |
| மண்மகள் | மண் + மகள் |
| கல்லதர் | கல் + அதர் |
| பாடவேளை | பாடம் + வேளை |
| பழத்தோல் | பழம் + தோல் |
| காலங்கடந்தவன் | காலம் + கடந்தவன் |
| பெருவழி | பெருமை + வழி |
| பெரியன் | பெருமை + அன் |
| மூதூர் | முதுமை + ஊர் |

| | |
|---|---|
| பைந்தமிழ் | பசுமை + தமிழ் |
| நெட்டிலை | நெடுமை + இலை |
| வெற்றிலை | வெறுமை + இலை |
| செந்தமிழ் | செம்மை + தமிழ் |
| கருங்கடல் | கருமை + கடல் |
| பைந்தளிர் | பசுமை + தளிர் |
| மேலவை | மேல் + அவை |
| புத்துணர்வு | புதுமை + உணர்வு |
| ஞாயிற்றொளி | ஞாயிறு + ஒளி |
| கூழாங்கல் | கூழ் + ஆம் + கல் |
| செவ்வியல் | செம்மை + இயல் |
| **11 ஆம் வகுப்பு** | |
| ஒற்றியெடுத்த | ஒற்றி + எடுத்த |
| காற்றிலேறி | காற்றில் + ஏறி |
| பல்லாண்டு | பல + ஆண்டு |
| உரமெலாம் | உரம் + எலாம் |
| கவரெலாம் | கவர் + எலாம் |
| கண்ணகிக்குச் சிலை | கண்ணகிக்கு + சிலை |
| அணிந்துரை | அணிந்து + உரை |
| பொதுச்சிறப்பு | பொது + சிறப்பு |
| செம்பரிதி | செம்மை + பரிதி |
| வானமெல்லாம் | வானம் + எல்லாம் |
| உன்னையல்லால் | உன்னை + அல்லால் |
| செந்தமிழே | செம்மை + தமிழே |
| ஆங்கவற்றுள் | ஆங்கு + அவற்றுள் |
| தனியாழி | தனி + ஆழி |
| வெங்கதிர் | வெம்மை + கதிர் |
| கற்சிலை | கல் + சிலை |
| கடற்கரை | கடல் + கரை |
| பன்முகம் | பல் + முகம் |
| மக்கட்பேறு | மக்கள் + பேறு |
| நாண்மீன் | நாள் + மீன் |
| சொற்றுணை | சொல் + துணை |
| பன்னூல் | பல் + நூல் |
| அஃறிணை | அல் + திணை |

| | |
|---|---|
| பஃறுளி | பல் + துளி |
| கலங்கி | கலங்கு + இ |
| இனநிரை | இனம் + நிரை |
| புதுப்பெயல் | புதுமை + பெயல் |
| அருங்கானம் | அருமை + கானம் |
| எத்திசை | எ + திசை |
| நகை | நகு + ஐ |
| மருட்கை | மருள் + கை |
| வெகுளி | வெகுள் + இ |
| முன்னுடை | முன் + உடை |
| ஏழையென | ஏழை + என |

**சிறப்புத்தமிழில் இடம்பெற்றுள்ள பிரித்தெழுதுக:**

| | |
|---|---|
| விடவரா | விட + அரா |
| கான்றெரி | கான்று + எரி |
| கோவில் | கோ + இல் |
| நல்லை | நல் + ஐ |
| நீவந்தவாசனம் | நிவந்த + ஆசனம் |
| பயந்தவெற்கு | பயந்த + என் + கு |
| பராவரும் | பரா + அரும் |
| பாரகம் | பார் + அகம் |
| தண்டுளி | தண்மை + துளி |
| காரைக்குடி | கார் + ஐ + குடி |
| வானதி | வான் + நதி |
| ஆய்ந்தாய்ந்து | ஆய்ந்து + ஆய்ந்து |
| ஆற்றறுப்பார் | ஆறு + அறுப்பார் |
| கேண்மை | கேள் + மை |
| இழிவறிந்து | இழிவு + அறிந்து |
| அகலுள் | அகல் + உள் |
| அவண | அவண் + அ |
| ஒண்ணுதல் | ஒள் + நுதல் |

## குறில் - நெடில் மாற்றம் பொருள் வேறுபாடு

- தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.
- (எ.கா.) வலஞ்சுழி எழுத்துகள் – அ, எ, ஔ, ண, ஞ
- இடஞ்சுழி எழுத்துகள் – ட, ய, ழ
- தமிழ் வரிவடிவ எழுத்துகள் அறிவியல்
- தொழில்நுட்ப நோக்கிலும் பயன்படுத்தத் தக்கவையாக உள்ளன.
- மூத்த மொழியான தமிழ் – கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் புது மொழியாகவும் திகழ்கிறது.

தமிழ் மொழியின் இலக்கண வகைகள் **ஐந்து**.

- எழுத்து இலக்கணம்
- சொல் இலக்கணம்
- பொருள் இலக்கணம்
- யாப்பு இலக்கணம்
- அணி இலக்கணம்

**எழுத்து:**

ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

**உயிர் எழுத்துகள்:**

உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது **உயிர் எழுத்துகள்** பிறக்கின்றன.

வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள **பன்னிரண்டு உயிர் எழுத்துகளும்** பிறக்கின்றன.

**ஒலித்துப் பார்த்து உணர்வோம்!**

அ, இ, உ, எ, ஒ – ஆகிய **ஐந்தும்** குறுகி ஒலிக்கின்றன.

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.**

ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு.

எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் என வகைப்படுத்துகிறோம்.

**மாத்திரை:**

- மாத்திரை என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது.
- ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.
- குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 1 மாத்திரை.
- நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு – 2 மாத்திரை.

**மெய்யெழுத்துகள்:**

மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல். இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.

- வல்லினம் – **க், ச், ட், த், ப், ற்**
- மெல்லினம் – **ங், ஞ், ண், ந், ம், ன்**
- இடையினம் – **ய், ர், ல், வ், ழ், ள்**

**உயிர்மெய்:**

மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றும் 216 எழுத்துகளும் உயிர்மெய் எழுத்துகள் ஆகும்.

மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தா ல் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் **உயிர்மெய்க் குறில்**, **உயிர்மெய் நெடில்** என இருவகைப்படுத்தலாம்.

**ஆய்த எழுத்து:**

தமிழ் மொழியில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி எழுத்து ஒன்றும் உள்ளது. அது ஃ என்னும் ஆய்த எழுத்தாகும்.

ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு **அரை மாத்திரை**.

கபிலர் - 1 + 1 + 1 + ½ = 3½

- தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் **ஒரு மாத்திரை** அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.
- குறில் எழுத்துகளைக் குறிக்க ‘**கரம்**’ (எ.கா.) அகரம், இகரம், உகரம், ககரம், மகரம்.

- நெடில் எழுத்துகளைக் குறிக்க ‘**கான்**’ (எ.கா.) ஐகான், ஔகான்.
- குறில், நெடில் எழுத்துகளைக் குறிக்க ‘**காரம்**’ (எ.கா.) மகாரம், ஏகாரம், ஐகாரம், ஔகாரம்.
- எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.
- எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக **எ*து** என எழுதப்பட்டால் எது என்றும் எது என எழுதப்பட்டால் ஏது என்றும் ஒலித்தனர்.
- அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டா ல் அவை நெடிலாகக் கருதப்பட்டன. (**க.** = **கா**, **த.** = **தா**).
- ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின்முன் இரட்டைப் புள்ளி இட்டனர். (..**க** = **கை**).
- எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன. (**கெ**.= **கௌ**, **தெ**.. = **தௌ**).
- மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி (ப*) இட்டனர். குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.
- ஓரெழுத்து ஒருமொழிகளில் உள்ள குறில் எழுத்துக்கள் – **நொ**, **து**
- குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் **நேரசையாகும்**. (எ.கா.) ந, நம், நா, நாம்.
- இரண்டு குறில்எழுத்துகள் அல்லது குறில், நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்துவந்தாலும் **நிரையசையாகும்**.(எ.கா.) கட, கடல், கடா, கடாம்.

**குறில், நெடில் வேறுபாடு:**

அடி – குறில்

ஆடி – நெடில்

வளி – குறில்

வாளி – நெடில்

**எழுத்து:**

யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் **குறில்**, **நெடில்**, **ஒற்று** என மூவகைப்படும்.

**அசை:**

எழுத்துகளால் ஆனது 'அசை' எனப்படும். ஓரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

| **நேரலை** | |
|---|---|
| தனிக்குறில் | ப |
| தனிக்குறில், ஒற்று | பல் |
| தனிநெடில் | பா |
| தனிநெடில், ஒற்று | பால் |
| **நிரையசை** | |
| இருகுறில் | அணி |
| இருகுறில், ஒற்று | அணில் |
| குறில், நெடில் | விழா |
| குறில், நெடில், ஒற்று | விழார் |

**எழுத்துகளின் ஒலி அளவு:**

1. குறில
2. நெடில்

என உயிர் எழுத்துகளையும், உயிர்மெய் எழுத்துகளையும் பிரிக்கிறோம். குறுகிய ஓசை, நெடிய ஓசை என்பதை எதை வைத்து அளவு செய்வது?

| | |
|---|---|
| அ | ஆ |
| க | கா |
| கொ | கோ |
| குறில் | நெடில் |

இந்த எழுத்துகளைச் சொல்லிப் பாருங்கள். ஒலி அளவில் நீங்கள் வேறுபாட்டை உணர முடியும்.

எழுத்துகள் ஒலிக்கும் அளவை மாத்திரை எனக் குறிப்பிடுவர் இலக்கண ஆசிரியர்கள்.

| | |
|---|---|
| இது ஒரு கை நொடி அளவு: | (அதாவது கட்டை விரலையும் நடுவிரலையும் சேர்த்துச் சுண்டும் அளவு) |
| | (அல்லது) |
| கண்ணிமை அளவு | - (அதாவது கண் இமைக்கும் அளவு) |
| குறில் எழுத்துகள் | - 1 மாத்திரை அளவின. (அ, க, ச, சி, து) |
| நெடில் எழுத்துகள் | - 2 மாத்திரை அளவின. (ஆ, கா, சா, சீ, தூ) |
| மெய் எழுத்துகள் | - 1/2 மாத்திரை அளவின. (க், ங், ச், ஞ்...ன்) |

**உயிர்மெய் எழுத்துகளின் வகைகள்:**

- உயிர்மெய் எழுத்துகளை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை குறில், நெடில் ஆகியன.
- குறுகிய ஒலிகளுடைய எழுத்துகள் குறில் எழுத்துகள் எனப்படும்.
- நெடிய ஒலிகளுடைய எழுத்துகள் நெடில் எழுத்துகள் எனப்படும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே.
- அ, இ, உ, எ, ஒ என்ற குறில் உயிர் எழுத்துச் சார்பாகப் பிறக்கும் உயிர்மெய் எழுத்துகள் குறில் எழுத்துகள் ஆகும்.
- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற நெடில் எழுத்துகளின் சார்பாகப் பிறக்கும் உயிர்மெய் எழுத்துகள் நெடில் எழுத்துகள் எனப்படும்.
- உயிர்மெய் குறில் எழுத்துகள் 90 (உயிர்க் குறில் 5 x 18 மெய் எழுத்துகள்) ஒலிக்கும் மாத்திரை அளவு ஒன்று.
- உயிர்மெய் நெடில் எழுத்துகள் 126 (உயிர் நெடில் 7 x 18 மெய் எழுத்துகள்) ஒலிக்கும் மாத்திரை அளவு இரண்டு.

| **குறில் எழுத்துக்கள்** | **நெடில் எழுத்துக்கள்** |
|---|---|
| கரம் | காரம் |
| படம் | பாடம் |
| மடம் | மாடம் |
| சதம் | சாதம் |
| மதம் | மாதம் |
| மனம் | மானம் |
| பதம் | பாதம் |
| கல் | கால் |
| பல் | பால் |
| நகம் | நாகம் |

| | |
|---|---|
| வனம் | வானம் |
| குடை | கூடை |
| மலை | மாலை |
| நிலம் | நீலம் |
| தொடு | தோடு |
| கடை | காடை |
| கொடு | கோடு |
| பட்டு | பாட்டு |
| முடி | மூடி |
| சொம்பு | சோம்பு |
| வரம் | வாரம் |
| **குறில் எழுத்துக்கள்** | **நெடில் எழுத்துக்கள்** |
| வசி | வாசி |
| அடி | ஆடி |
| அணி | ஆணி |
| தடி | தாடி |
| படி | பாடி |
| விதி | வீதி |
| மிதி | மீதி |
| நிதி | நீதி |
| நிலம் | நீலம் |
| குடி | கூடி |
| படு | பாடு |
| நடு | நாடு |
| விடு | வீடு |
| சுடு | சூடு |
| குடம் | கூடம் |
| புட்டு | பூட்டு |
| பட்டு | பாட்டு |

**எடுத்துக்காட்டு: 1**

1. கொள்-கோள்

   கொள்-தெரிந்து கொள்ளுதல்

   கோள்-ஒன்பது கோள்கள்

   தொடர் - தெரிந்து கொள் பூமியும் ஒரு கோள்தான்.

2. சிறு - சீறு
   சிறு-அளவு
   சீறு-கோபம்
   தொடர் - திருவிழாக்களில் சிறு சிறு வியாபாரிகளிடம் ஊரார் சீறி விழுந்தனர்.
3. கொடு- கோடு
   கொடு-இரவல் கொடுத்தல்
   கோடு-நேர்க்கோடு
   தொடர் - அகிலன் எழுதுகோல் கொடுத்ததால் நான் குறிப்பேட்டில் கோடு போட்டேன்.
4. விதி - வீதி
   விதி - முன்னரே தீர்மானிக்கப்பட்டது
   வீதி - தெரு
   தொடர் - சிலம்பில் கண்ணகி தன் விதிப்படி மதுரை வீதியில் நின்றாள்.

**எடுத்துக்காட்டு: 2**

1. சிலை-சீலை
   சிலை - இறைவன் திருவுருவம்
   சீலை - துணி
   தொடர் - இறைவன் சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தனர்.
2. தொடு-தோடு
   தொடு - தொடுதல்
   தோடு - அணிகலன்
   தொடர் - தோடு அணிந்த சிறுமியர் தொட்டு விளையாடுகின்றனர்.
3. மடு-மாடு
   மடு-நீர்நிலை
   மாடு - விலங்கு
   தொடர் - மாடு மடுவில் தண்ணீர் குடித்தது.
4. மலை-மாலை
   மலை - சிகரம்
   மாலை - சிறுபொழுது
   தொடர் - மலையில் மேய்ந்த மாடுகள் மாலையில் வீடு திரும்பின.
   செயல்பாடு: 3

5. வளி-வாளி

   வளி - காற்று

   வாளி - பாத்திரம்

   தொடர் - வளியை வாளியால் நிரப்பி அடைக்க முடியாது.

6. விடு - வீடு

   விடு - விட்டொழித்தல்

   வீடு-மனை

   தொடர் - கவலைகளை விட்டு வாழ்வதுதான் வீடு

7. நடு - நாடு

   நடு - இடைப்பட்டது

   நாடு - தேசம்.

மனித நேயம் வளர்ப்போம் • மானுடம் மீட்போம் • சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை

## சந்திப்பிழை, எழுத்துப்பிழை ஒற்றுப்பிழை அறிதல்

### வல்லின எழுத்துகள் மிகும் இடங்கள்

1. **அந்த, இந்த - முதலான சுட்டுத் திரிபுகளுக்குப் பின் வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அந்த | + | பையன் | = | அந்தப்பையன் |
| இந்த | + | பெட்டி | = | இந்தப்பெட்டி |

2. **அத்துணை, இத்துணை, எத்துணை என்னுஞ் சொற்களுக்குப் பின்வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அத்துணை | + | புகழ் | = | அத்துணைப் புகழ் |
| இத்துணை | + | செழுமை | = | இத்துணைச் செழுமை |
| எத்துணை | + | கொடுமை | = | எத்துணைக் கொடுமை |

3. **அவ்வகை, இவ்வகை, எவ்வகை என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அவ்வகை | + | காடு | = | அவ்வகைக்காடு |
| இவ்வகை | + | தோப்பு | = | இவ்வகைத்தோப்பு |
| எவ்வகை | + | பெயர் | = | எவ்வகைப்பெயர் |

4. **மற்ற, மற்று, மற்றை - என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| மற்ற | + | கலைகள் | = | மற்றக்கலைகள் |
| மற்று | + | சிலை | = | மற்றுச்சிலை |
| மற்றை | + | பயன் | = | மற்றைப்பயன் |

5. **"இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில்" வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| மோர் | + | குடம் | = | மோர்க்குடம் |
| மலர் | + | கூந்தல் | = | மலர்க்கூந்தல் |
| தயிர் | + | பானை | = | தயிர்ப்பானை |
| தண்ணீர் | + | தொட்டி | = | தண்ணீர்த்தொட்டி |

6. **"மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில்" வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | + | குடம் | = | மரப்பெட்டி |
| இரும்பு | + | தூண் | = | இரும்புத்தூண் |

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் | + | தாலி | = | தங்கத்தாலி |

7. "நான்காம் வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்க தொகையில்" வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| குடை | + | கம்பி | = | குடைக்கம்பி |
| சட்டை | + | தூண் | = | சட்டைத்துணி |

8. "ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில்" வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அடுப்பு | + | புகை | = | அடுப்புப்புகை |
| விழி | + | புனல் | = | விழிப்புனல் |

9. "பண்புத் தொகையில்' வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| புது | + | குடம் | = | புதுக்குடம் |
| வட்டம் | + | பலகை | = | வட்டப்பலகை |
| பொய் | + | செய்தி | = | பொய்ச்செய்தி |

10.'இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில்' வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வேழம் | + | கரும்பு | = | வேழக்கரும்பு |
| தாமரை | + | பூ | = | தாமரைப்பூ |
| மார்கழி | + | திங்கள் | = | மார்கழித்திங்கள் |

11.'உவமைத் தொகையில்' வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| தாமரை | + | கண்ணன் | = | தாமரைக்கண்ணன் |
| பவளம் | + | செவ்வாய் | = | பவளச்செவ்வாய் |
| மலை | + | தோள் | = | மலைத்தோள் |

12."அரை, பாதி என்னும் எண்ணுப்பெயர்ச் சொற்களின்" பின்வரும் வல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அரை | + | காணி | = | அரைக்காணி |
| அரை | + | படி | = | அரைப்படி |
| பாதி | + | பங்கு | = | பாதிப்பங்கு |
| அரை | + | தொட்டி | = | அரைத்தொட்டி |
| பாதி | + | செலவு | = | பாதிச்செலவு |

**13.‘முற்றிலுகரச் சொற்களின் பின்’ வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| திரு | + | கோவில் | = | திருக்கோவில் |
| புது | + | புது | = | புதுப்புது |
| பொது | + | சாலை | = | பொதுச்சாலை |

**14.“தனிக்குறிலை அடுத்து வரும் ‘ஆ’காரத்தின் பின்வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| வினா | + | குறி | = | வினாக்குறி |
| பலா | + | பழம் | = | பலாப்பழம் |

**15.‘ஆய், போய் என்னும் வினை எச்சங்களுக்குப்’ பின்வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| கருத்தாய் | + | கேட்டாள் | = | கருத்தாய்க்கேட்டாள் |
| அன்பாய் | + | சொன்னார் | = | அன்பாய்ச்சொன்னார் |
| போய் | + | பார் | = | போய்ப்பார் |

**16.முன்னர், பின்னர் என்னும் இடைச்சொற்களுக்குப் பின்வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| முன்னர் | + | கண்டோம் | = | முன்னர்க்கண்டோம் |
| பின்னர் | + | காண்போம் | = | பின்னர்க்காண்போம் |
| முன்னர் | + | செல்க | = | முன்னர்ச்செல்க |
| பின்னர் | + | பணிந்தார் | = | பின்னர்ப்பணிந்தார் |

**17.வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வரும் வல்லினம் மிகும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| பட்டு | + | சேலை | = | பட்டுச்சேலை |
| பத்து | + | பாட்டு | = | பத்துப்பாட்டு |

## வல்லின எழுத்துகள் மிகா இடங்கள்

வல்லின எழுத்துகளாகிய க், ச், த், ப் என்பன மிக்கு வரக்கூடிய இடங்கள் எவையென முன்பகுதியில் படித்தீர்கள். அல்லவா? இனி, இப்பதியில் அவ்வெழுத்துகள் மிகா இடங்கள் எவை என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் காண்போம்.

**1. ‘அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு’ - என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகாது.**

| | | | | |
|---|---|---|---|---|
| அவ்வளவு | + | பெரிது | = | அவ்வளவுபெரிது |
| இவ்வளவு | + | கனிவா | = | இவ்வளவு கனிவா? |
| எவ்வளவு | + | தொலைவு | = | எவ்வளவு தொலைவு? |

2. **'அத்தனை, இத்தனை, எத்தனை' - என்னும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது.**

| | | | | |
|---|---|---|---|---|
| அத்துணை | + | புத்தகங்களா | = | அத்தனை புத்தகங்களா? |
| இத்துணை | + | தொழில்களா | = | இத்தனை தொழில்களா? |
| எத்துணை | + | கருவிகள் | = | எத்தனை கருவிகள்? |

3. **வினாப் பொருள் உணர்த்தும் ஆ, ஓ, ஏ என்னும் வினா எழுத்துகளின் பின்வரும் வல்லினம் மிகாது.**

| | | | | |
|---|---|---|---|---|
| அவனா | + | கேட்டான் | = | அவனா கேட்டான்? |
| அவளா | + | சொன்னாள் | = | அவளா சொன்னாள்? |
| யாரே | + | கண்டார் | = | யாரே கண்டார்? |

4. **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் தவிர, மற்றப் பெயரெச்சங்களுக்குப் பின்வரும் வல்லினம் மிகாது.**

| | | | | |
|---|---|---|---|---|
| பெரிய | + | பெண் | = | பெரிய பெண் |
| கற்ற | + | சிறுவன் | = | கற்ற சிறுவன் |
| நில்லாத | + | செல்வம் | = | நில்லாத செல்வம் |
| அழியாத | + | கல்வி | = | அழியாத கல்வி |

5. **'எட்டு, பத்து' ஆகியவை தவிர மற்ற எண்ணுப்பெயர்களின் பின்வரும் வல்லினம் மிகாது.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | கேள் | = | ஒன்று கேள் |
| ஒரு | + | பொருள் | = | ஒரு பொருள் |
| இரண்டு | + | புத்தகம் | = | இரண்டு புத்தகம் |
| இரு | + | பறவை | = | இரு பறவை |
| மூன்று | + | குறிக்கோள் | = | மூன்று குறிக்கோள் |
| நான்கு | + | பேர் | = | நான்கு பேர் |
| ஐந்து | + | கதைகள் | = | ஐந்து கதைகள் |
| ஆறு | + | கோவில் | = | ஆறு கோவில் |
| அறு (ஆறு) | + | சீர் | = | அறுசீர் |
| ஏழு | + | சான்றுகள் | = | ஏழு சான்றுகள் |
| ஏழு | + | பிறப்பு | = | எழு பிறப்பு |
| ஒன்பது | + | சுவைகள் | = | ஒன்பது சுவைகள் |

6. 'இரட்டைக் கிளவியிலும், அடுக்குத் தொடரிலும்' வல்லினம் மிகாது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கல | + | கல | = | கலகல | - இரட்டைக் கிளவிகள் |
| சட | + | சட | = | சடசட | |
| பள | + | பள | = | பளபள | |
| தீ | + | தீ | = | தீதீ | - அடுக்குத்தொடர்கள் |
| பார் | + | பார் | = | பார்பார் ! | |

7. வியங்கோள் வினைமுற்றுகளின் பின் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| கற்க | + | கசடற | = | கற்க கசடற |
| வெல்க | + | தமிழ் | = | வெல்க தமிழ் |
| வீழ்க | + | தண்புனல் | = | வீழ்க தண்புனல் |

8. 'அஃறிணைப் பன்மை' முன்வரும் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | பசு | = | பல பசு |
| சில | + | கலை | = | சில கலை |
| அவை | + | தவித்தன | = | அவை தவித்தன |

9. 'ஏவல் வினை' முன் வரும் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| வா | + | கலையரசி | = | வா கலையரசி |
| எழு | + | தம்பி | = | எழு தம்பி |
| போ | + | செல்வி | = | போ செல்வி |
| பார் | + | பொண்ணே | = | பார் பெண்ணே ! |

10. 'மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஒடு, ஓடு' ஆகியவற்றின் பின் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| கோவலனோடு | + | கண்ணகி வந்தாள் | = | கோவலனோடு கண்ணகி வந்தாள். |
| துணிவோடு | + | செல்க | = | துணிவோடு செல்க |
| அண்ணனோடு | + | தங்கை வந்தாள் | = | அண்ணனோடு தங்கை வந்தாள். |

11.‘செய்யிய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| காணிய | + | சென்றேன் | = | காணிய சென்றேன் |
| உண்ணிய | + | சென்றாள் | = | உண்ணிய சென்றாள் |
| மலை | + | தோள் | = | மலைத்தோள் |

12.“பொதுப் பெயர், உயர்திணைப் பெயர்களுக்குப்” பின்வரும் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| தாய் | + | கண்டாள் | = | தாய் கண்டாள். |
| கண்ணகி | + | சீறினாள் | = | சீறினாள் |

13.‘ஐந்தாம் வேற்றுமையின் சொல் உருபுகளான இருந்து, நின்று’ என்பவைகளின் பின் வரும் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| மாடியிலிருந்து | + | கண்டேன் | = | மாடியிலிருந்து கண்டேன். |
| மரத்திலிருந்து | + | பறித்தேன் | = | மரத்திலிருந்து பறித்தேன். |
| மலையினின்று | + | சரிந்தது | = | மலையினின்று சரிந்தது. |

14.“வினைத் தொகையில்” வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| விரி | + | சுடர் | = | விரிசுடர் |
| பாய் | + | புலி | = | பாய்புலி |

15.“உம்மைத் தொகையில்” வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| காய் | + | கனி | = | காய்கனி |
| தாய் | + | தந்தை | = | தாய்தந்தை |

16.‘அது, இது’ என்னும் சுட்டுகளின் பின் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| அது | + | பறந்தது | = | அது பறந்தது. |
| இது | + | கடித்தது | = | இது கடித்தது. |

17.எது, யாது என்னும் வினாச்சொற்களின் பின் வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| எது | + | பறந்தது | = | எது பறந்தது? |
| யாது | + | தந்தார் | = | யாது தந்தார்? |

18.‘விளித் தொடரில்’ வல்லினம் மிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| கண்ணா | + | பாடு | = | கண்ணா பாடு. |
| அண்ணா | + | கேள் | = | அண்ணா கேள் ! |

**19.வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் 'கள், தல்' என்னும் விகுதிகள் வரும்பொழுது வல்லினம் மிகாது.**

| | | | | |
|---|---|---|---|---|
| எழுத்து | + | கள் | = | எழுத்துகள் |
| கருத்து | + | கள் | = | கருத்துகள் |
| வாழ்த்து | + | கள் | = | வாழ்த்துகள் |
| போற்று | + | தல் | = | போற்றுதல் |
| நொறுக்கு | + | தல் | = | நொறுக்குதல் |

**20.'இரண்டு வட சொற்கள்' சேரும் பொழுது வல்லினம் மிகாது.**

| | | | | |
|---|---|---|---|---|
| கோஷ்டி | + | கானம் | = | கோஷ்டி கானம் |
| சங்கீத | + | சபா | = | சங்கீத சபா |

## எழுத்துப் பிழை

### பகுதி -1 ஒற்று மிகும் இடங்கள் – பொது விதி

- க, ச, ட, த, ப, ற என்கிற வல்லின எழுத்துக்களோடு துவங்கும் வார்த்தைகளுக்கு முன்பு மட்டுமே ஒற்றெழுத்து வரும். இதில் ட, ற என்கிற எழுத்துக்களோடு பொதுவாக வார்த்தைகள் துவங்காது என்பதால் க, ச, த, ப மட்டுமே கவனிக்கவேண்டியவை.
- ஆகவே ஒற்று என்றால் க,ச,த,ப என்கிற வல்லின எழுத்துக்களின் வேர்களான க், ச், த், ப் என்ற நான்கு மெய்யெழுத்துகள் மட்டுமே.
- எனவே ஒற்று மிகும் இடங்கள் என்று இந்தப் பகுதியில் நாம் விவாதிக்கப்போவது இரண்டு வார்த்தைகளுக்கு இடையே (முதல் வார்த்தை, இரண்டாம் வார்த்தை) க்,ச்,த்,ப் வரும் இடங்களை மட்டுமே.
- க, ச, த, ப என்ற எழுத்துக்களில் துவங்கும் சொல் வருமொழியாக இருந்தால் மட்டுமே முறையே க், ச், த், ப், ஆகிய ஒற்றெழுத்துகள் மிகும். க என்றால் – 'க' முதல் 'கௌ' வரை, இவ்வாறே ச, த, ப என்னும் எழுத்துகளுக்கும்.

**விதி: 1**

"ஓரெழுத்துச் சொற்களுக்குப் பின் ஒற்று மிகும்."

அதாவது முதல் வார்த்தை ஓரெழுத்துச் சொல்லாய் இருந்து, இரண்டாம் வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துக்களில் ஆரம்பித்தால் இரண்டுக்கும் இடையே க், ச், த், ப் ஆகிய ஒற்று மிகும்.

**உதாரணங்கள்:**

- பூ+பறித்தாள் – பூப்பறித்தாள்
- தீ+ பிடித்தது – தீப்பிடித்தது
- கை+ குழந்தை – கைக்குழந்தை

**விதி: 2**

- "அரை, பாதி, எட்டு, பத்து ஆகிய எண்களுக்குப் பின்னல் மட்டும் ஒற்று மிகும்." மற்ற எண்களுக்கு மிகாது.
- அதாவது முதல் வார்த்தை அரை, பாதி, எட்டு, பத்து என்று முடிந்து அடுத்த வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துடன் துவங்கினால், இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- **உதாரணம்:** அரைப்பக்கம், பாதித் துணி, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, எட்டுக்கட்டுகள், பத்துச்செய்யுள்கள்.

**விதி: 3**

- தமிழ் மாதங்களின் பெயர்கள் பின்னால் ஒற்று மிகும்.
- அதாவது முதல் வார்த்தை தமிழ் மாதங்களின் பெயராய் இருந்து அடுத்த வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துடன் துவங்கினால், இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- **உதாரணம்:** தைப் பொங்கல், ஆடிப் பட்டம், மார்கழித் திங்கள்.

**விதி: 4**

- தனி எழுத்தும் (குற்றெழுத்து) அதனுடன் இணைந்து "ஆ" என்ற ஓசையுடன் முடிகிற வார்த்தையின் பின்னால் ஒற்று மிகும்.
- அதாவது ஒரு தனி எழுத்தும் ஆ என்கிற ஓசையுள்ள எழுத்தும் கொண்ட வார்த்தை முதலில் வந்து, அடுத்த வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துடன் துவங்கினால், இரண்டுக்கும் இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- **உதாரணங்கள்:** கனாக்கண்டேன், (கனா + கண்டேன்) சுறாத்தலை (சுறா + தலை) நிலாப்பயணம் (நிலா + பயணம்)

**விதி: 5**

- அ, இ, எ, அந்த, இந்த, எந்த, அங்கு இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி, அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அத்துணை, இத்துணை, எத்துணை முதலிய சொற்கள் முதல் சொல்லாக இருந்து "க, ச, த, ப" ஆகிய எழுத்துக்கள் கொண்ட சொல் பின்னால் வந்தால் இரண்டுக்கும் இடையே க், ச், த், ப் ஆகிய ஒற்று மிகும்.

**உதாரணங்கள்:**

- அக்குடம், இச்செடி, எப்பக்கம்.
- அந்தச் செடி, இந்தக் குழந்தை, எந்தப் பாடம்.
- அங்குச் சென்றான், இங்குப் போகாதே, எங்குக் கேட்டாய்.
- அப்படிப் பேசு, இப்படிச் சொல், எப்படித் தந்தாய்.

**பகுதி – 2 ஒற்று மிகும் இடங்கள்**

**விதி: 6**

- திரு, நடு, முழு, விழு, பொது, அணு, புது, ஆகிய இச்சொற்களுக்குப் பின் ஒற்று மிகும்.

- அதாவது முதல் வார்த்தை மேற்கண்ட வார்த்தைகளா இருந்து, அடுத்த வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துக்களுடன் துவங்கினால், இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- உதாரணங்கள்: திருக்கோயில், நடுத்தெரு, முழுப்பேச்சு, விழுப்பொருள், பொதுப்பணி, புதுக்கல்வி, அணுக்குண்டு.
- முழுவதுமாக 'உ' என்கிற ஓசையோடு முடியற இந்த வார்த்தைகளுக்கு இலக்கண ரீதியான பெயர் முற்றியலுகரம்.

**விதி – 7**

- சொல்லின் இறுதியில் குறுக்கப்பட்ட 'உ' ஓசையுடைய வார்த்தைகள் வந்தால் ஒற்று மிகும். இந்தச் சொற்கள் – கு,சு,டு,து,பு,று ஆகிய எழுத்துக்களில் முடியும். இதற்கு குற்றியலுகரம் என்று பெயர்.
- இந்த கு,சு,டு,து,பு,று என்கிற இறுதி எழுத்தின் முன்னால் வல்லின மெய் எழுத்துக்களான க்,ச்,ட்,த்,ப்,ற் வரவேண்டும் என்பது இரண்டாவது அவசியம். இப்படி வந்தால் அதற்கு வன் தொடர்க் குற்றியலுகரம் என்பது பெயர்.

**உதாரணங்கள்:**

- மக்கு, தச்சு, செத்து, உப்பு, கற்று போன்ற சொற்கள்.
- ஆக, இந்த விதியை இலக்கண முறையில் சொல்லவேண்டுமென்றால்;
- "வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் முதலில் வந்து, 'க, ச, த, ப எழுத்துகளோடு துவங்கும் சொற்கள் பின்னால் வந்தால் இரண்டுக்கும் இடையே ஒற்று மிகும்."

**உதாரணங்கள்:**

- மக்குப் பையன்.
- தச்சுத் தொழில்.
- உப்புக் கடை.
- விட்டுச் சென்றார்.

**விதி – 8**

- ஏழாம் விதியின் விதிவிலக்கு இது.
- வன்தொடர்க் குற்றியலுகரம் மட்டுமல்லாமல் விதிவிலக்காய் ஒரு சில மென் தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்னும் ஒற்று மிகும்.
- அதாவது சொல்லின் இறுதியில் குறுக்கப்பட்ட 'உ' ஓசையுடைய வார்த்தைகள் வரும். இந்தச் சொற்கள் – கு,சு,டு,து,பு,று ஆகிய எழுத்துக்களில் முடியும்.

- இந்த கு,சு,டு,து,பு,று என்கிற இறுதி எழுத்தின் முன்னால் மெல்லின மெய் எழுத்துக்கள் வந்தால் அதற்கு மென் தொடர்க் குற்றியலுகரம் என்பது பெயர்.
- அதைத் தொடர்ந்து பின்னால் வரும் வார்த்தை க,ச,த,ப ஆகிய வல்லின எழுத்துக்களில் துவங்கினால் முறையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- **உதாரணங்கள்:** பாம்புத் தோல், குரங்குக் கூட்டம், கன்றுக்குட்டி, மருந்துக்கடை.

**விதி – 9**

- 'அ' அல்லது 'இ' ன்னு முடியற வார்த்தைக்குப் பின்னால் ஒற்று மிகும்.
- **உதாரணம் –** தேடிப் போனார், மெல்லச் சொன்னார், தேடிச் சென்றார், வாடிப் போயிற்று.
- அதாவது முன்னால் வரும் வார்த்தை 'அ' அல்லது 'இ' ஒலியுடன் முடிந்து அதன் பின்னால் வரும் வார்த்தை க, ச, த, ப என்ற எழுத்துக்களோட ஆரம்பித்தால் இடையில் க்,ச்,த்,ப் என்ற ஒற்று மிகும்.

**விதி – 10**

- "ஆய், போய், ஆக, போக," அப்படின்னு முடியற வார்த்தைகளுக்குப்பின்னால் ஒற்று மிகும்.
- **உதாரணம்:** கேட்பதாய்க் கூறினான், (கேட்பதாய் + கூறினான்) சொன்னதாய்ச்சொல்,(சொன்னதாய் + சொல்) போய்த்தேடினார், (போய் + தேடினார்) இருப்பதாகக்கூறு. (இருப்பதாக + கூறு).

**விதி – 11**

- ய், ர், ழ் என்கிற எழுத்துகளோடு முதல் வார்த்தை முடிந்து இரண்டாவது வார்த்தை க,ச, த, ப என்கிற எழுத்துக்களில் துவங்குகிற பெயர்ச்சொல்லாக (Noun) இருந்தால் இரண்டுக்கும் இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- **உதாரணங்கள்:** மோர்க்குழம்பு, (மோர் + குழம்பு) தாய்ப் பாசம், (தாய் + பாசம்) போர்க் களம், (போர் + களம்) தமிழ்ச் செயலி, தமிழ்த் தாய். (தமிழ் + தாய்)

**விதி – 12**

- முதலில் உதாரணத்தைப் பார்க்கலாம்: தங்கத் தாமரை, வெள்ளைப் புறா
- தங்கம், வெள்ளை இதெல்லாம் என்ன? தாமரை, புறா இவற்றின் பண்புகள்.
- தங்கத்தால் ஆகிய தாமரை, வெள்ளையான புறா.
- அதனால இதுக்கு 'பண்புத் தொகை' ன்னு பெயர்.

- அதாவது முதல் வார்த்தை ஒரு பண்பை உணர்த்தி, இரண்டாம் வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துக்களில் துவங்கினால் இரண்டுக்கும் இடையில் க்,ச்,த்,ப் ஆகிய ஒற்றெழுத்து மிகும்

**விதி – 13**

- **உதாரணம்** – மல்லிகைப்பூ (மல்லிகை + பூ)
- பூ என்பது பொதுப்பெயர். மல்லிகை சிறப்புப்பெயர். இரண்டும் 'பூ' வுடன் தொடர்புடையதுதான். மல்லிகைன்னு சொன்னாலே பூ தான். இப்படி இரண்டு பண்புகளைக் கொண்ட சொற்களுக்கு இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
- இங்கே இரண்டாம் வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துக்களில் துவங்கினால் க், ச் த், ப், ஆகிய ஒற்று மிகும்.
- **இன்னும் சில உதாரணங்கள்:** கோடைக்காலம், மல்லிகைப்பூ, மழைக்காலம், செவ்வந்திப்பூக்கள்

**விதி – 14**

- உவமைகள் வரும் இடங்களிலே ஒற்று மிகும்
- **உதாரணம்:** தாமரைக்கண் (தாமரை + கண்), முத்துப்பல் (முத்து + பல்) தாமரையைப் போல இருக்கும் கண், முத்து மாதிரி இருக்கும் பல்.
- அதாவது முதல் வார்த்தை ஒரு உவமையா இருந்து இரண்டாவது வார்த்தையா க,ச,த,ப ஆகிய வல்லின எழுத்து வந்தா இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- உவமை மறையாமல் வந்தாலும் ஒற்று மிகும்
- **உதாரணம்:** மயில் போலப் பொண்ணு ஒண்ணு.

**விதி - 15**

- ட, ற என்று முடியும் சொற்களுக்குப் பின் ஒற்று மிகும்.
- முதல் வார்த்தை ட, டு ஆகிய எழுத்துக்களுடன் முடிந்து, அடுத்த வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துக்களுடன் துவங்கினால், இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.

**உதாரணங்கள்:**

- தமிழ்நாடு + கலை = தமிழ்நாட்டுக்கலை
- வீடு + சோறு = வீட்டுச் சோறு
- ஆறு + தண்ணீர் = ஆற்றுத்தண்ணீர்
- கிணறு + தவளை = கிணற்றுத் தவளை

## விதி – 16

- ஊர்ப்பெயர்களை அடுத்து கட்டாயம் ஒற்று மிகும்.
- அதாவது ஊர்ப்பெயர் முதல் வார்த்தையாய் இருந்து இரண்டாம் வார்த்தை க,ச,த,ப ஆகிய வல்லின எழுத்துக்களோடு துவங்கினால் இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்றெழுத்துகள் மிகும்.
- சென்னைக் கடற்கரை. குமரிக்கடல். திருச்சிக் காவிரி.

## விதி – 17

- பெயரெச்சங்களின் பின் ஒற்று மிகாது.
- **உதாரணம்:** உறங்கிய பையன் – உறங்கிய என்பது குறைந்த வினைச்சொல். அதனால் அது எச்சம் எனப்படும். உறங்கிய என்னும் எச்சம் பையன் என்ற பெயரைச் சார்ந்திருப்பதால் அது பெயரெச்சம் எனப்படும்.
- **மேலும் உதாரணங்கள்:** படித்த பையன், ஓடுகிற குதிரை, பெரிய பெட்டி, நல்ல பாம்பு, நல்ல குழந்தை.

## விதி – 18

- "ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் ஒற்று மிகும்."
- **ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** – சொல்லின் இறுதியில் கடைசி எழுத்து மறைந்திருக்கும் பெயரெச்ச சொற்கள் வந்து, இரண்டாவது வார்த்தை க,ச,த,ப ஆகிய வல்லின எழுத்தோடு ஆரம்பித்தால் இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.

**உதாரணம்:**

- அறியா + பிள்ளை = இந்த வார்த்தையின் முழுவடிவம் "அறியாத பிள்ளை" ஆனால் அறியாததவின் இறுதியில் "த" மறைந்திருக்கிறது. அதனால் இங்கே ஒற்று மிகுந்து அறியாப்பிள்ளை என்று வரும்
- தீரா + துன்பம் = தீராத என்பது முழுமையான சொல். அதில் த கெட்டிருக்கிறது. அதனால் தீராத்துன்பம் என்று ஒற்றுமிகும்.

## விதி – 19

- அது, இது, எது, அவை, இவை, எவை, அன்று, இன்று, என்று, அத்தனை, இத்தனை, எத்தன, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு போன்ற சொற்களுக்குப் பின் ஒற்றெழுத்து மிகாது.
- **உதாரணங்கள்:** அது பெரியது, இவை சென்றன, எத்தனை பூக்கள், அவ்வளவு பருப்பு, இவ்வாறு கூறினான்.

**விதி - 20**

- இரு வட மொழிச் சொற்கள் சேர்ந்து வரும்தொடர்களில் ஒற்று மிகாது
- ஆதிபகவன், தேசபக்தி

**விதி – 21**

- ஆ, ஓ, யா என்னும் கேள்வி கேட்கும் வினாக்களுக்குப் பின் ஒற்று மிகாது.
- **உதாரணங்கள்:** அவனா போனான்? அவனா சொன்னான் இருக்காது? தம்பியோ கேட்கிறான்.

**விதி – 22**

- வினைத்தொகையில் ஒற்று மிகாது.
- **உதாரணம்:** சுடுகாடு
- வினைச் சொல்லின் பகுதியும்(சுடு- சுடுகின்ற) பெயர்ச்சொல்லும் (காடு) சேர்ந்து பெயரெச்சத் தொடர் போல வருவது வினைத்தொகை
- இன்னும் சில உதாரணங்கள்: உரைகல், குடிதண்ணீர்,

**விதி – 23**

- வெற்றிலை பாக்கு
- சொல்லிப்பாத்தா வெற்றிலைப் பாக்கு ன்னு வரணும் போல தோணுதில்ல ? ஆனா இங்க ஒற்று மிகாது.
- வெற்றிலை பாக்கு அப்படிங்கறதை முழுமையாகச் சொன்னால் வெற்றிலையும் பாக்கும் அப்படின்னு வரும். இங்கே 'உம்' மறைந்திருக்கிறது. அப்படி மறைந்தால் அங்கே ஒற்று மிகாது. அதாவது இரண்டு பொருள்களை பட்டியலிட்டு அதில் உம் என்ற வார்த்தை வராமல் மறைந்தால் அங்கே ஒற்று மிகாது.
- **உதாரணங்கள்:** இட்லி சாம்பார், யானை குதிரை

**விதி – 24**

- அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி இரண்டிலேயும் ஒற்று மிகாது.
- அடுக்குத் தொடர் உதாரணம் – மெல்ல மெல்ல, தாவி தாவி – இந்த தொடரில் இருக்கும் இரண்டு வார்த்தைகளை பிரித்தாலும் பொருள் வரும்.
- இரட்டைக் கிளவி அப்படி இல்ல. பிரித்தால் பொருள் வராது.
- **உதாரணம்**: சல சல என்று ஓடிய தண்ணீர், விறு விறு என்று நடந்தான்,
- அடுக்குத் தொடரோ இரட்டைக் கிளவியோ இரண்டிலும் ஒற்று மிகாது.

**விதி – 25**

- சிறு, சிறிய, பெரிய ஆகிய சொற்களுக்குப் பின் ஒற்று மிகாது
- சிறு துரும்பு, சிறிய சிக்கல், பெரிய கொடுமை

**விதி – 26**

- (வன்தொடர்க் குற்றியலுகரச்) சொற்களின் பின் "கள்" என்னும் விகுதி சேரும்போது 'க்' என்கிற ஒற்று மிகுதல் அவசியமில்லை.
- **உதாரணங்கள்:** வாக்குகள், வாழ்த்துகள், தோப்புகள், எழுத்துகள்,

**விதி 27**

- கூப்பிடுகின்ற விளிப்பெயரின் பின் (விளித்தொடர்) ஒற்று மிகாது
- **உதாரணம்:** தம்பி போ.! தம்பி பார்.
- ஏவல் வினைமுற்றின் (Imperative Verb) பின்னும் ஒற்று மிகாது
- **உதா:** போ தம்பி
- வியங்கோள் வினைமுற்று (optative verb) பின் ஒற்று மிகாது. இது மரியாதையாய் கட்டளையிட, சபிக்க, வாழ்த்த, வேண்டிக்கொள்ள பயன்படும்.
- **உதா:** வீழ்க கொடுமை
- வினைமுற்றுத் தொடரின் பின் ஒற்று மிகாது
- **உதா:** பாடியது பறவை
- முற்றுவினைக்குப் பின் பின் வலி மிகாது-
- வாரா குதிரைகள்.

**பகுதி – 3 – ஒற்று மிகும்/மிகா இடங்கள் – வேற்றுமை உருபுகள்:**

**விதி – 28**

எழுவாய்த் தொடரில் ஒற்று மிகாது. (முதலாம் வேற்றுமை உருபு)

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புகள் இணைந்து தொடர் அமையும். எழுவாய் என்பது பெயர்ச்சொல். தொடரில் எழுவாய் பெரும்பாலும் முதலில் வரும். பயனிலை என்பது வினைச்சொல், பெயர், வினை என்ற கூறுகள் தாம் எழுவாய், பயனிலை ஆகிய செயல்களை நிகழ்த்துகின்றன. பயனிலை பெரும்பாலும் தொடரின் இறுதியில் வரும். எழுவாய்க்கும், பயனிலைக்கும் இடையில் செயப்படுபொருள் வரும். ஒரு தொடரில் எழுவாய், பயனிலை தவறாது இருக்கும். செயப்படுபொருள் அமையலாம். செயப்படுபொருள் இல்லாமலும் தொடர் அமைவது உண்டு.

**கண்ணன் வந்தான் – இத்தொடரில்:**

| | |
|---|---|
| கண்ணன் | எழுவாய் (பெயர்ச்சொல்) |
| வந்தான் | பயனிலை (வினைச்சொல்) |
| செயப்படுபொருள் | இடம் பெறவில்லை என்பது குறிக்கத் தக்கது. |

**முருகன் வள்ளியை மணந்தான் - இத்தொடரில்**

| | |
|---|---|
| முருகன் | எழுவாய் |
| வள்ளியை | செயப்படுபொருள் |
| மணந்தான் | பயனிலை |

பெயருக்கு முன்னும், வினைக்கு முன்னும் அடைகள் அமைவது உண்டு. அவை பெயரடை, வினையடை எனப்படும்.

**நல்ல பையன்:**

| | |
|---|---|
| நல்ல | - பெயரடை |
| பையன் | - பெயர் |

**மெல்ல வந்தான்:**

| | |
|---|---|
| மெல்ல | - வினையடை |
| வந்தான் | - வினை |

இது போன்ற எழுவாய்த் தொடரில், இரண்டாம் வார்த்தை க,ச,த,ப என்று துவங்கினாலும் ஒற்று மிகாது.

**உதாரணங்கள்:**

- துணி கிழிந்தது
- கிளி பேசியது
- கோழி கூவியது
- நாய் தின்றது

**விதி – 29**

- ‘ஐ’ என்கிற ஓசையோடு முடிகிற வார்த்தைகளின் பின் ஒற்று மிகும். (இரண்டாம் வேற்றுமை உருபு)
- அதாவது முதல் வார்த்தை ’ஐ’ என்கிற ஓசையுடன் முடிந்து, அடுத்த வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துக்களுடன் துவங்கினால், இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- உதாரணங்கள் பூனையைப் பார்த்தான், உன்னைக் கேட்டால், அவனைப் பிடித்தால்.

- விதிவிலக்கு:‘ஐ’ மறைஞ்சி வந்தா ஒற்று மிகாது.
- உதாரணம் – மான் கண்டேன். மானை+ கண்டேன் அப்படின்னு எழுதாம, மான் கண்டேன்னு எழுதினா அப்ப ஒற்று வராது. அதே போல மயிலைக் கண்டேன், மயில் கண்டேன்.

**உருபும் பயனும் உடன் தொக்க தொகை:**

- சில சமயம் ‘ஐ’ மறைந்து அதோட சில வார்த்தைகளும் கூட மறைந்து வரும். உதாரணம் தண்ணீர்த் தொட்டி. அதாவது தண்ணீரை உடைய தொட்டி. இங்க ஐ மட்டும் இல்லாம ‘உடைய’ அப்படிங்கற வார்த்தையும் மறைந்திருக்கு. அப்படி மறைஞ்சிருந்தா அங்க ஒற்று மிகும்.
- **இன்னொரு உதாரணம்:**
  - யானை + பாகன் அதாவது யானையை ஓட்டும் பாகன் = யானைப் பாகன்
  - இங்க ஐ மறைஞ்சிருக்கு கூடவே ஓட்டும் என்கிற வார்த்தையும் மறைஞ்சிருக்கு பாருங்க.
- **இன்னும் சில உதாரணங்கள்:**
  - தேர்ப் பாகன் (தேரை ஓட்டும் பாகன்) தயிர்க்குடம், (தயிரை உடைய குடம்) காய்கறிக்கடை, சிற்றுண்டிச்சாலை.

**விதி – 30**

- ‘கு’ என்கிற ஓசையோடு முடிகிற வார்த்தைகளின் பின் ஒற்று மிகும். (நான்காம் வேற்றுமை உருபு.)
- அதாவது முதல் வார்த்தை ’கு’ என்கிற ஓசையுடன் முடிந்து, அடுத்த வார்த்தை க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்துக்களுடன் துவங்கினால், இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்.
- **உதாரணங்கள்:** அவனுக்குத் தா, கடைக்குப் போனான்
- ’கு’ மறைஞ்சு வந்தா, அஃறினைப் பெயர்கள் முதல் வார்த்தையா இருந்தா மட்டும்தான் ஒற்று மிகும். உயர்திணைப் பெயர்களின் பின் ஒற்று மிகாது.
- **உதாரணம்:** வேலி+ கால் = வேலிக்கால்
- இங்கே வேலிக்குக் கால். ‘கு’ மறைஞ்சு வந்திருக்கு. வேலி அஃறிணைப் பெயர். அதனால ஒற்று மிகும்
- **உயர்திணை உதாரணம்:** பொன்னி + கணவன் அதாவது பொன்னிக்குக் கணவன் என்பதை பொன்னி கணவன் என்று எழுதினால் ஒற்று மிகாது

- ’கு’ என்கிற உருபும் மறைந்து, அதனுடன் இணைந்து வரவேண்டிய வார்த்தையும் மறைந்தால் ஒற்று மிகும் (உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)
- **உதாரணம்:** குழந்தை+பால் = குழந்தைப் பால் கோழி+தீனி = கோழித் தீனி

**விதி – 31**

- ஆல், ஆன், ஒடு ஓடு என்கிற வார்த்தைகள் ஒரு சொல்லின் இறுதியில் வந்தால் ஒற்று மிகாது (மூன்றாம் வேற்றுமை உருபு)
- **உதாரணம் –** கத்தியால் குத்தினான், அவனோடு சுத்தினான்.
- ஆனால் ஆல், ஆன், ஒடு ஓடு என்கிற உருபுகள் மறைந்து, அதனுடன் இணைந்து வரவேண்டிய வார்த்தையும் மறைந்தால் ஒற்று மிகும் (உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)
- **உதாரணம்:** வெள்ளித் தட்டு, பட்டுச் சேலை (வெள்ளியால் செய்யப்பட்ட தட்டு, பட்டால் நெய்யப்பட்ட சேலை) பித்தளைக் குடம், மோர்க்குழம்பு

**விதி – 32**

- இல், இன், இருந்து ஆகிய வார்த்தைகள் ஒரு சொல்லின் இறுதியில் வந்தால் ஒற்று மிகாது (ஐந்தாம் வேற்றுமை உருபு)
- **உதாரணம்:** தாய்மொழியில் கூறு
- இல்,இன் இரண்டும் மறைந்து வந்தாலும் ஒற்று மிகாது
- தாய்மொழி கூறு
- ஆனால் இல், இன், இருந்து ஆகிய உருபுகள் மறைந்து, அதனுடன் இணைந்து வரவேண்டிய வார்த்தையும் மறைந்தால் ஒற்று மிகும் (உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)
- **உதாரணம்:** பழச்சாறு (பழத்தில் பிழிந்த சாறு)

**விதி – 33**

- ‘அது, ஆது, உடைய ஆகிய வார்த்தைகள் முதல் வார்த்தையின் இறுதியில் வந்தால் ஒற்று மிகாது (ஆறாம் வேற்றுமை உருபு)
- **உதாரணங்கள்:** நண்பனது கட்டில், என்னுடைய கைகள்
- இந்த உருபுகள் மறைந்து வந்து (வேற்றுமைத் தொகை) முதலில் வரும் சொல் அஃறிணையாய் இருந்தால் மட்டும் வலி மிகும். அதாவது- முதலில் வரும் சொல், உருபுகள் மறைந்திருக்கும் அஃறிணைச் சொல்லாய் இருந்து பின் வரும் சொல் க,ச,த,ப ஆகிய வல்லின எழுத்துக்களின் துவங்கினால், இடையே க்,ச்,த்,ப் ஆகிய ஒற்று மிகும்

- **உதாரணம்:** கிளிப்பேச்சு (கிளியினது பேச்சு) குருவித்தலை, கிளிக்கூடு, நாய்க்குட்டி

**விதி – 34**

- கண், இடம்- என்று முடியும் வார்த்தைகளுக்குப் பிறகு ஒற்று மிகாது (ஏழாம் வேற்றுமை உருபுகள்)
- **உதாரணம்:** மலையின்கண் திரிவோர்.
- இந்த உருபுகள் மறைந்து வந்தாலும் ஒற்று மிகாது
- உதாரணம்: மலை திரிவோர்
- ஆனால் இந்த உருபுகள் மறைந்து, இதனுடன் இணைந்து வரவேண்டிய வார்த்தையும் மறைந்து வந்தால் ஒற்று மிகும் (உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை)
- **உதாரணம்:** மலைக்கோவில் (மலையின் கண் எழுந்த கோவில்)

**விதி – 35**

- அழைப்பது அல்லது விளிப்பது போல வரும் சொல் இது. இந்த ”விளி வேற்றுமை” க்கு ஒற்று மிகாது. (எட்டாம் வேற்றுமை உருபு)
- **உதாரணம்:** தலைவா போதும், அம்மா பாடு

**குறிப்பு – 36**

- பழக்கம், வழக்கம் இரண்டுக்கும் என்ன வித்தியாசம் ?
- ஒருவர் தன் அளவில் தனி மனிதனாய் ஏற்படுத்திக்கொள்வது- ’பழக்கம்’
- ஒரு சமுதாயமாய், ஊராய் நாடாய் செய்வது வழக்கம்

**குறிப்பு - 37**

- முதலிய, ஆகிய, போன்ற – இந்தச் சொற்களின் பயன்பாட்டில் வித்தியாசம் என்ன ?
- எதையாவது பட்டியல் இடும்போது அது முழுமையான பட்டியலாக இல்லாவிட்டால் முதலிய என்கிற வார்த்தைப் பிரயோகம் வரும்.
- பட்டியல் முழுமையானதாய் இருந்தால் ‘ஆகிய’ வரும்.
- போன்ற என்ற வார்த்தை, அதற்கு முன்னால் சொல்லப்பட்டவை அதன் உவமையாகவோ, நிகரானவைகளைச் சுட்டிக்காட்டப் பயன்படும்.
- **உதாரணம்:** மன்மோகன் சிங், நரசிம்ம ராவ், வாஜ்பாய் முதலியோர் இந்தியாவின் திறமையான பிரதம மந்திரிகளாய் இருந்தார்கள். (இவர்களைத்

தவிர இன்னும் சிலரும் திறமையான பிரதமர்களாய் இருந்தார்கள் என்று அர்த்தம்)

**குறிப்பு - 38**

- ஒரு & ஓர் சொல் உயிரெழுத்தில் துவங்கினால் ஓர் வரவேண்டும்.
- இல்லையென்றால் ஒரு.
- **உதாரணங்கள்:** ஓர் உதவி, ஓர் அழைப்பு, ஒரு விண்ணப்பம், ஒரு வீடு

**குறிப்பு - 39**

**வினாயகரா விநாயகரா?**

- வி+நாயகர் அதாவது தமக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்பது இதன் பொருள். அதன்படி விநாயகர் என்பதே சரி. வினாயகர் என்ற எழுதினால் அதன் அர்த்தம் சிதைந்து விடும்.
- அதே முறையில் இராமன் + நாதன், தேவன்+நாதன் என்றே பெயர்களைப் பிரிக்கவேண்டும். (இராம + நாதன் என்று பிரிப்பது வடமொழி முறை என்கிறார் அ.கி.பரந்தாமனார்)
- அதனால் இராமனாதன் என்பது தவறு. இராமநாதன், தேவநாதன் என்பதே சரி.

**இயக்குனர்? இயக்குநர்?**

**ஓட்டுனர்? ஓட்டுநர்?**

**எது சரி?**

- ஒரு வினைச்சொல், அதைச் செய்பவர் இவர் என்கிற அர்த்தத்தில் பெயர்ச்சொல்லாக மாறும்போது 'நர்' விகுதி வரும்.
- உதாரணமாக, அனுப்புதல் என்பது வினைச்சொல் (Verb), அதை அனுப்புகிறவர் என்ற பொருளில் சொல்லும்போது 'அனுப்புநர்' என்று மாறும்.
- இன்னும் சரியாகச் சொல்வதென்றால், வினைச் சொல் ==> கட்டளைச் சொல் (அது உகரத்தில் இருக்கவேண்டும்) + நர்.

**இன்னும் சில உதாரணங்கள்:**

- ஆட்சி செய்தல் ==> ஆள் / ஆளு ==> ஆளுநர்
- பெறுதல் ==> பெறு ==> பெறுநர்
- ஓட்டுதல் ==> ஓட்டு ==> ஓட்டுநர்
- இயக்குதல் ==> இயக்கு ==> இயக்குநர்

**எடுத்துக்காட்டு:**

- அறிஞர், பொறிஞர், கலைஞர், கவிஞர், வலைஞர்.
- இயக்குநர், அனுப்புநர், பெறுநர், ஓட்டுநர்.
- உறுப்பினர், பொறுப்பினர், படையினர், அணியினர்.
- ஞர்-க்கு முன்னொட்டுவது பெரும்பாலும் பெயர்ச்சொல்லாக இருக்கிறது.
- நர்-க்கு முன்னொட்டுவது அச்செயலுக்குரிய வினைவேர்ச்சொல்லாக இருக்கிறது. கட்டளையிடுகிறது.
- னர்-க்கு முன்னொட்டுவது பெயர்ச்சொல்லாக இருந்து இன்+அர் சேர்வதால் பலர்பால் பெயர்ச்சொல்லாகிறது.
- நர் சேர்க்குமிடங்களில் 'உகர' ஈற்றில் முடியும் வினைவேர்ச்சொல்லாக இருப்பதையும் கவனிக்கவும் (இயக்கு, அனுப்பு, பெறு, ஓட்டு).

**குறிப்பு எண் – 40**

"ற்", ட் ஆகிய எழுத்துக்குப்பிறகு இன்னொரு மெய்யெழுத்து வரக்கூடாது.

- பயிற்ச்சி, முயற்ச்சி, வேட்க்கை, மீட்ப்பு – தவறு
- பயிற்சி, முயற்சி, வேட்கை, மீட்பு – சரி

**குறிப்பு எண் – 41**

இருவகையாய் எழுதக்கூடிய சொற்களில் சில:

- பவளம் – பவழம்
- கோவில் – கோயில்
- மதில் – மதிள்
- உழுந்து – உளுந்து
- மங்கலம் – மங்களம்

**குறிப்பு எண் – 42**

- தண்ணீர் என்பது தண் (குளிர்ச்சிபொருந்திய) + நீர். எனவே தண்ணீர் என்றாலே குளுமையான நீர் என்றுதான் பொருள். இதற்கு எதிர்ப்பதமான சூடான நீர் – வெந்நீர் என்பதே. சுடுதண்ணீர் என்பது தவறான பிரயோகம். தண்ணீர், வெந்நீர் என்பதே சரியானது.

**குறிப்பு எண் – 43**

Oil என்பது எண்ணெய். எண்ணை என்று எழுதுவது தவறு.

- எண்ணெய் என்பது எள்+ நெய். பிசுபிசுப்பான திரவம் எல்லாமே நெய். எள்ளிலிருந்து எடுக்கப்படும் நெய் – எண்ணெய். இந்த எண்ணெய் என்பது நாளாவட்டத்தில் ஒரு பொதுப் பெயராகி விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் என்றெல்லாம் காரணப்பெயர் மறைந்து புதிய பெயர்கள் உருவாகிவிட்டன.
- எண்ணை என்று எழுதுவது ‘எண்’ (Number) ஐ குறிப்பதாகிவிடும். எட்டாம் எண்ணை இரண்டால் வகுத்தால் நான்கு என்று விடை வரும் என்பது போல.

**குறிப்பு எண் - 44**

- ஒருமைக்கு அன்று. பன்மைக்கு அல்ல என்பது விதி.
- **உதாரணம்:** இந்தப் பேனா என்னுடையது அன்று. இந்தப் பேனாக்கள் என்னுடையவை அல்ல.
- நாம் ‘அன்று’ என்கிற வார்த்தையை உபயோகிப்பதில்லை. எல்லாவற்றிற்கும் அல்ல என்று சொல்கிறோம்.
- அவன் தன் வீட்டுக்குப் போனான்.
- அவர் தம் வீட்டுக்குப் போனார் (மரியாதைப் பன்மையில் தன் என்பது தம் என்றாகும்).

## லகர, ளகர, ழகர, னகர, ணகர, ரகர, றகர வேறுபாடு

**மயங்கொலிச் சொற்கள் யாவை?**

- தமிழில் உள்ள சொற்களில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான ஒலிப்பை உடைய, ஆனால் வேறுபட்ட பொருளை உடைய சொற்களை மயங்கொலி சொற்கள் என்கிறோம். உச்சரிப்பில் சிறிதளவு வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.

- இந்த சொற்களில் உள்ள எழுத்துக்கள் எது சரி, எது தவறு என்று கண்டுப்பிடிக்க முடியாத அளவிற்கு மயங்க வைப்பதால் இதனை மயங்கொலி சொற்கள் என்று அழைக்கப்படுகிறது.

**மயங்கொலிச் சொற்கள் எடுத்துக்காட்டு:**

**இலை – இழை**

- மேலே உள்ள சொற்களை உச்சரிக்கும் போது அவற்றின் ஒலியில் சிறிதளவு மாற்றம் தான் தெரிகிறது, ஆனால் இவை இரண்டின் சொற்களின் பொருள் முற்றிலும் வேறுபட்டது.

**மயங்கொலி எழுத்துக்கள் எத்தனை:**

- இந்த எழுத்துக்கள் மொத்தம் எட்டு வகை அவை **ண, ன, ந, ல, ழ, ள, ர, ற** ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துக்கள் ஆகும்.

**ல, ள, ழ – எழுத்துகள்:**




- ல – நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும். இது ‘வ’ போல இருப்பதால் ‘வகர லகரம்’ என்கிறோம்.

- ள – நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம். இது ‘ன’ போல இருப்பதால் ‘னகர ளகரம்’ என்று கூறுவர்.

- ழ – நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். (ளகரமும் ழகரமும் ஒரே இடத்தில் ஒலிக்கப்படும்). ழ தமிழுக்கே சிறப்பானது.

எனவே இதனைச் சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம். இது 'ம' போல இருப்பதால் 'மகர ழகரம்' என்று கூறுவது இலக்கண மரபு.

**மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

- இரண்டாவது **தளத்தில்** பள்ளிக்கூடம் உள்ளது. அறிவை கற்றுத்தரும் பள்ளிக்கூடம் வழிபாட்டு **தலமாகும்.** (தளம் / தலம்)
- சூடு தாங்க முடியாமல் சுமித்ரா பாலை கொட்டினாள் **பால் பாழானதை** எண்ணி சுமித்ரா வருந்தினாள். (பால் / பாழ்)
- பூமியின் **கோள** வடிவத்தை அடிப்படையாக கொண்டு சங்கீதா **கோல**மிட்டாள். (கோளம் / கோலம்)
- அணையில் **வெள்ளம்** வந்தது, உழவர்களுக்கு மனம் **வெல்ல**க்கட்டியாய் இனித்தது. (வெள்ளம் / வெல்லம்)
- கோவிலை **வலப்பக்கமாக** சுற்றி வந்தால் **வளமாக** வாழலாம் என்று தாத்தா கூறினார். (வலம் / வளம்)

**ண, ன, ந – எழுத்துகள்:**




- **ண** – நாவின் நுனி மேல்வாய் அணணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறககிறது.
- **ன** – நாவின் நுனி மேல்வாய் அணணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறககிறது.
- **ந** – நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.
- (ட், ண்) (த், ந்) (ற், ன்) ஆகியவை இன எழுத்துகள்.
- இந்த இன எழுத்துகளைக் கொண்டு டகரத்தை அடுத்து வரும் ணகரம் டண்ணகரம் என்றும்,
- **த**கரத்தை அடுத்து வரும் **ந**கரம் தந்நகரம் என்றும்.
- **ற**கரத்தை அடுத்து வரும் **ன**கரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகின்றன.

- ணகரம் வர வேண்டிய இடத்தில் னகரம் எழுதப்படுமானால் பொருள் மாறுபடும் என்பதை உணர்க.

**ர,ற – எழுத்துகள்:**







- **ர –** நாவின் நுனி மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது. இஃது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.

- **ற –** நாவின் நுனி மேல் அண்ணத்தில் மையப்பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது. இது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.

**மயங்கொலிச் சொற்கள்:**

| **மயங்கொலிச் சொற்கள்:(ண, ன, ந வேறுபாடு)** | |
|---|---|
| அணல் | தாடி, கழுத்து |
| அனல் | நெருப்பு |
| அணி | அழகு |
| அனி | நெற்பொறி |
| அங்கண் | அவ்விடம் |
| அங்கன் | மகன் |
| நாணம் | வெட்கம் |
| நானம் | புனுகு, கவரிமான் |
| பண் | இசை |
| பன் | அரிவாள், பல |
| பாணம் | நீருணவு |
| பானம் | அம்பு |
| புண் | காயம் |
| புன் | கீழான |
| மணம் | வாசனை, திருமணம் |
| மனம் | உள்ளம் |
| முனை | வெறுப்பு, மிகுதி |

| | |
|---|---|
| முனை | முன்பகுதி, துணிவு, முதன்மை |

**தமிழ் மயங்கொலி எழுத்துக்கள்:**

| **மயங்கொலிச் சொற்கள்** | **பொருள் (ல, ழ, ள பொருள் வேறுபாடு)** |
|---|---|
| அலத்தல் | அலட்டல், அலைதல் |
| அளத்தல் | அளவிடுதல், மதித்தல் |
| அலை | கடல், நீரலை, அலைதல் |
| அழை | கூப்பிடு |
| உலவு | நட |
| உளவு | ஒற்று |
| உழு | நிலத்தை உழு |
| உளு | உளுத்துப் போதல் |
| ஒலி | சப்தம், நாதம், காற்று |
| ஒழி | அழி, தவிர், கொல், துற |
| கலகம் | போர், அமளி, இரைச்சல் |
| கழகம் | சங்கம், கூட்டமைப்பு |
| வலி | நோய், வலிமை, துன்பம் |
| வழி | நெறி, பாதை, தடம், உபாயம் |
| வளி | காற்று |

**தமிழ் மயங்கொலிச் சொற்கள்:**

| **மயங்கொலிச் சொற்கள் ர ற** | **பொருள் (ர, ற வேறுபாடு)** |
|---|---|
| **அரவு** | **பாம்பு** |
| அறவு | அறுதல், தொலைதல் |
| அரம் | ஒரு கருவி |
| அறம் | தர்மம், நீதி, கற்பு, புண்ணியம், கடமை, அறநூல், துறவறம் |
| அக்கரை | அந்தக் கரை |
| அக்கறை | ஈடுபாடு |
| அரை | பாதி, மேகலை, வயிறு, ஒரு மரம் |
| அறை | வீட்டின் பகுதி, அடி, பாத்தி, ஒலி, பாசறை, சொல், குகை, வஞ்சனை, மாளிகை |
| அருமை | சிறப்பு, அன்பு, இன்மை, சுலபத்தில் கிடைக்காதது |
| அறுமை | நிலையின்மை, ஆறு |
| ஆரல் | ஒரு வகை மீன் |

| | |
|---|---|
| ஆறல் | சூடு குறைதல் |
| இரத்தல் | யாசித்தல் |
| இறத்தல் | இறந்துபோதல், சாதல் |
| இரவு | இரவு நேரம், யாசித்தல் |
| இறவு | மிகுதி, இறால்மீன், இறுதி, தேன்கூடு, சாவு, முடிவு, நீக்கம் |

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சிரம் என்பது ______ (தலை / தளை)**

விடை: தலை

**2. இலைக்கு வேறு பெயர் _______ (தளை / தழை)**

விடை: தழை

**3. வண்டி இழுப்பது ________ (காலை / காளை)**

விடை: காளை

**4. கடலுக்கு வேறு பெயர் ________ (பரவை / பறவை)**

விடை: பரவை

**5. பறவை வானில் ________ (பரந்தது / பறந்தது)**

விடை: பறந்தது

**6. கதவை மெல்லத் ________ (திரந்தான் / திறந்தான்)**

விடை: திறந்தான்

**7. பூ ________ வீசும். (மணம் / மனம்)**

விடை: மணம்

**8. புலியின் ________ சிவந்து காணப்படும். (கன் / கண்)**

விடை: கண்

**9. குழந்தைகள் ________ விளையாடினர். (பந்து / பன்து)**

விடை: பந்து

**10. வீட்டு வாசலில் ________ போட்டனர். (கோளம் / கோலம்)**

விடை: கோலம்

**தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளை திருத்தி எழுதுக:**

**1. எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.**

விடை: என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மணம் வீசின.

**2. தேர்த் திருவிலாவிற்கு சென்றனர்.**

விடை: தேர்த் திருவிழாவிற்கு சென்றனர்.

**3. வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது.**

விடை: வாழைப்பழம் உடலுக்கு மிகவும் நல்லது

**ல, ள, ழ – பொருள் வேறுபாடு உணர்க.**

| | |
|---|---|
| விலை -பொருளின் மதிப்பு | இலை – செடியின் இலை |
| விளை – உண்டாக்குதல் | இளை – மெலிந்து போதல் |
| விழை – விரும்பு | இழை – நூல் இழை |

**ர,ற– பொருள் வேறுபாடு உணர்க.**

| | |
|---|---|
| ஏரி – நீர்நிலை | கூரை – வீட்டின் கூரை |
| ஏறி – மேலே ஏறி | கூறை – புடவை |

**ண, ன, – பொருள் வேறுபாடு அறிக.**

| | |
|---|---|
| வாணம் – வெடி | பணி – வேலை |
| வானம் – ஆகாயம் | கூறை – புடவை |

**தமிழில் உள்ள மயங்கொலிச் சொற்கள்:**

**ன, ண பொருள் வேறுபாடு**

- அணல் - தாடி, கழுத்து
- அனல் - நெருப்பு
- அணி - அழகு
- அனி - நெற்பொறி
- அணு - நுண்மை
- அனு - தாடை, அற்பம்
- அணுக்கம் - அண்டை, அண்மை.
- அனுக்கம் - வருத்தம், அச்சம்
- அணை - படுக்கை, அணைத்துக் கொள்ளுதல்
- அனை - அன்னை, மீன்

- அணைய - சேர, அடைய
- அனைய - அத்தகைய
- அண்மை - அருகில்
- அன்மை - தீமை, அல்ல
- அங்கண் - அவ்விடம்
- அங்கன் - மகன்
- அண்ணம் - மேல்வாய்
- அன்னம் - சோறு, அன்னப்பறவை
- அண்ணன் - தமையன்
- அன்னன் - அத்தகையவன்
- அவண் - அவ்வாறு
- அவன் - சேய்மைச் சுட்டு, ஆண்மகன்
- ஆணகம் - சுரை
- ஆனகம் - துந்துபி
- ஆணம் - பற்றுக்கோடு
- ஆனம் - தெப்பம், கள்
- ஆணி - எழுத்தாணி, இரும்பாணி
- ஆனி - தமிழ் மாதங்களுள் ஒன்று
- ஆணேறு - ஆண்மகன்
- ஆனேறு - காளை, எருது
- ஆண் - ஆடவன்
- ஆன் - பசு
- ஆணை - கட்டளை, ஆட்சி
- ஆனை - யானை
- இணை - துணை, இரட்டை
- இனை - இன்ன, வருத்தம்
- இணைத்து - சேர்த்து

- இனைத்து - இத்தன்மையது
- இவண் - இவ்வாறு
- இவன் - ஆடவன், (அண்மைச் சுட்டு
- ஈணவள் - ஈன்றவள்
- ஈனவள் - இழிந்தவள்
- உண் - உண்பாயாக
- உன் - உன்னுடைய
- உண்ணல் - உண்ணுதல்
- உன்னல் - நினைத்தல்
- உண்ணி - உண்பவன், ஒருவகைப் பூச்சி
- உன்னி - நினைத்து, குதிரை
- ஊண் - உணவு
- ஊன் - மாமிசம்
- எண்ண - நினைக்க
- என்ன - போல, வினாச்சொல்
- எண்ணல் - எண்ணுதல்
- என்னல் - என்று சொல்லுதல்
- எண்கு - கரடி
- என்கு - என்று சொல்லுதல்
- ஏண் - வலிமை
- ஏன் - ஒரு வினைச்சொல்
- ஏணை - தொட்டில்
- ஏனை - மற்றது
- ஐவணம் - ஐந்து வண்ணம்
- ஐவனம் - மலை நெல்
- ஓணம் - ஒரு பண்டிகை
- ஓனம் - எழுத்துச்சாரியை

- கணகம் - ஒரு படைப்பிரிவு
- கனகம் - பொன்
- கணப்பு - குளிர்காயும் தீ
- கனப்பு - பாரம், அழுத்தம்
- கணி - கணித்தல்
- கனி - பழம், சுரங்கம், சாரம்
- கணம் - கூட்டம்
- கனம் - பாரம்
- கண்ணன் - கிருஷ்ணன்
- கன்னன் - கர்ணன்
- கண்ணி - மாலை, கயிறு, தாம்பு
- கன்னி - குமரிப்பெண், உமை, ஒரு ராசி
- கணை - அம்பு
- கனை - ஒலி, கனைத்தல்
- கண் - ஓர் உறுப்பு
- கன் - கல், செம்பு, உறுதி
- கண்று - அம்பு
- கன்று - அற்பம், இளமரம், குட்டி, கைவளை
- கண்ணல் - கருதல்
- கன்னல் - கரும்பு, கற்கண்டு
- காண் - பார்
- கான் - காடு, வனம்
- காணம் - பொன், கொள்
- கானம் - இசை, காடு, வனம், தேர்
- காணல் - பார்த்தல்
- கானல் - பாலை
- கிணி - கைத்தாளம்

- கினி - பீடை
- கிண்ணம் - வட்டில், கிண்ணி
- கின்னம் - கிளை, துன்பம்
- குணி - வில், ஊமை
- குனி - குனிதல், வளை
- குணித்தல் - மதித்தல், எண்ணுதல்
- குனித்தல் - வளைதல்
- குணிப்பு - அளவு, ஆராய்ச்சி
- குனிப்பு - வளைப்பு, ஆடல்
- கேணம் - செழிப்பு, மிகுதி
- கேனம் - பைத்தியம், பித்து
- கேணி - கிணறு
- கேனி - பித்துப் பிடித்தவர்
- கோண் - கோணல், மாறுபாடு
- கோன் - அரசன்
- சாணம் - சாணைக்கல், சாணி
- சானம் - அம்மி, பெருங்காயம்
- சுணை - கூர்மை, கரணை
- சுனை - நீரூற்று
- சுண்ணம் - வாசனைப் பொடி
- சுன்னம் - சுண்ணாம்பு, பூஜ்ஜியம்
- சேணம் - மெத்தை
- சேனம் - பருந்து
- சேணை - அறிவு
- சேனை - படை
- சோணம் - பொன், சிவப்பு, தீ, சோணகிரி
- சோனம் - மேகம்

- சோணை - ஒரு நதி, சேரன் மனைவி
- சோனை - மழைச்சாரல், மேகம்
- தண் - குளிர்ச்சி
- தன் - தன்னுடைய
- தணி - தணித்தல்
- தனி - தனிமை
- தாணி - தான்றிமரம்
- தானி - இருப்பிடம், பண்டசாலை
- தாணு - சிவன், தூண், நிலைப்பேறு
- தானு - காற்று
- திணை - ஒழுக்கம், குலம்
- தினை - தானியம், ஒருவகைப் புன்செய்ப் பயிர்
- திண்மை - உறுதி
- தின்மை - தீமை
- திண் - வலிமை
- தின் - உண்
- துணி - துணிதல், கந்தை
- துனி - அச்சம், ஊடல் நீட்டித்தல்
- தெண் - தெளிவு
- தென் - தெற்கு, அழகு
- நண்பகல் - நடுப்பகல்
- நன்பகல் - நல்லபகல்
- நணி - அணி (அழகு)
- நனி - மிகுதி
- நாண் - வெட்கம், கயிறு
- நான் - தன்மைப் பெயர்
- நாணம் - வெட்கம்

- நானம் - புனுகு, கவரிமான்
- பணி - வேலை, கட்டளையிடு
- பனி - துன்பம், குளிர், சொல், நோய்
- பணை - முரசு, உயரம், பரந்த
- பனை - ஒருவகை மரம்
- பண் - இசை
- பன் - அரிவாள், பல
- பண்ணை - தோட்டம்
- பன்னை - கீரைச்செடி
- பண்ணுதல் - செய்தல்
- பன்னுதல் - நெருங்குதல்
- பண்ணி - செய்து
- பன்னி - சீப்பு, பனிநீர், மனை, சணல்
- பண்மை - தகுதி
- பன்மை - பல
- பணித்தல் - கட்டளையிடுதல்
- பனித்தல் - துளித்தல், தூறல், விரிந்த
- பட்டணம் - நகரம்
- பட்டினம் - கடற்கரை நகர்
- பாணம் - நீருணவு
- பானம் - அம்பு
- புணை - தெப்பம்
- புனை - இட்டுக்கட்டுதல், கற்பனை
- புண் - காயம்
- புன் - கீழான
- பேணம் - பேணுதல்
- பேனம் - நுரை

- பேண் - போற்று, உபசரி
- பேன் - ஓர் உயிரி
- மணம் - வாசனை, திருமணம்
- மனம் - உள்ளம், இந்துப்பு
- மணை - மரப்பலகை, மணவறை
- மனை - இடம், வீடு
- மண் - தரை, மண்வகை
- மன் - மன்னன், பெருமை
- மண்ணை - இளமை, கொடி வகை
- மன்னை - தொண்டை, கோபம்
- மாணி - அழகு, பிரம்மசாரி
- மானி - மானம் உடையவர்
- மாண் - மாட்சிமை
- மான் - ஒரு விலங்கு
- முணை - வெறுப்பு, மிகுதி
- முனை - முன்பகுதி, துணிவு, முதன்மை
- வணம் - ஓசை
- வனம் - காடு, துளசி
- வண்மை - வளப்பம், கொடை
- வன்மை - உறுதி, வலிமை
- வண்ணம் - நிறம், குணம், அழகு
- வன்னம் - எழுத்து, நிறம்
- வாணகம் - அக்கினி, பசுமடி
- வானகம் - மேலுலகம்
- வாணம் - அம்பு, தீ, மத்தாப்பு
- வானம் - ஆகாயம், மழை
- வாணி - கலைமகள், சரஸ்வதி

- வானி - துகிற்கொடி

**ல, ழ, ள பொருள் வேறுபாடு**

- அலகு - பறவையின் மூக்கு, அளவு, ஆண்பனை
- அழகு - வனப்பு
- அளகு - சேவல், பெண்கூகை
- அலகம் - திப்பிலி
- அளகம் - வெள்ளெருக்கு, நீர்
- அலகை - கற்றாழை, பேய்
- அளகை - அளகாபுரி, பெண்
- அழம் - பிணம்
- அலம் - கலப்பை
- அளம் - உப்பு
- அலத்தல் - அலட்டல், அலைதல்
- அளத்தல் - அளவிடுதல், மதித்தல்
- அலவன் - ஆண்நண்டு
- அளவன் - அளப்பவன், உப்பு எடுப்போன்
- அழி - அழித்துவிடு
- அலி - பேடி, காகம், விருச்சிகராசி
- அளி - கருணை, கள், வண்டு
- அல்லல் - துன்பம்
- அள்ளல் - வாரி எடுத்தல்
- அழை - கூப்பிடு
- அலை - கடல், நீரலை, அலைதல்
- அளை - தயிர், நண்டு, புற்று
- அவல் - பள்ளம், உணவுப் பொருள்
- அவள் - பெண் (சேய்மைச் சுட்டு)
- அல் - இரவு

- அள் - அள்ளி எடு, நெருக்கம்
- உலவு - நட
- உளவு - ஒற்று
- உழவு - கலப்பையால் உழுதல்
- உழி - இடம், பொழுது
- உளி - தச்சுக் கருவிகளுள் ஒன்று
- உலு - தானியப் பதர்
- உழு - நிலத்தை உழு
- உளு - உளுத்துப் போதல்
- உலை - கொல்லன் உலை, நீருலை
- உழை - பாடுபடு, பக்கம், கலைமான்
- உளை - பிடரி மயிர், சேறு, தலை
- உழுவை - புலி
- உளுவை - மீன்வகை
- எல் - கல், மாலை, சூரியன்
- எள் - எண்ணெய் வித்து, நிந்தை
- எலு - கரடி
- எழு - எழுந்திரு, தூண்
- ஒலி - சப்தம், நாதம், காற்று
- ஒழி - அழி, தவிர், கொல், துற
- ஒளி - வெளிச்சம், மறை(த்து வை)
- ஒல் - ஒலிக்குறிப்பு
- ஒள் - அழகு, உண்மை, அறிவு, ஒளி
- கலகம் - போர், அமளி, இரைச்சல்
- கழகம் - சங்கம், கூட்டமைப்பு
- கழங்கம் - கழங்கு, விளையாட்டுக் கருவி
- களங்கம் - குற்றம், அழுக்கு

- கலி - கலியுகம், பாவகை, சனி
- கழி - கோல், மிகுதி, உப்பளம்
- களி - மகிழ்வு, இன்பம்
- கலை - ஆண்மான், சந்திரன், கல்வி
- கழை - மூங்கில், கரும்பு, புனர்பூசம்
- களை - அழகு, புல் பூண்டு, அயர்வு
- கல் - மலை, பாறை, சிறுகல்
- கள் - மது, தேன்
- கலம் - கப்பல், பாத்திரம்
- களம் - இடம், போர்க்களம், இருள்
- காலி - ஒன்றுமில்லாதது, வெற்றிடம்
- காளி - துர்க்கை, மாயை
- காழி - சீர்காழி (ஊர்)
- காலை - பொழுது, விடியற்பொழுது
- காளை - காளைமாடு, இளைஞன்
- காலம் - பொழுது, நேரம்
- காளம் - எட்டிமரம், சூலம்
- கிலி - அச்சம், பயம்
- கிழி - கிழித்துவிடு, முடிப்பு (பொன்)
- கிளி - பறவை, வெட்டுக்கிளி
- கிழவி - முதியவள், மூதாட்டி
- கிளவி - சொல், மொழி
- குலி - மனைவி
- குழி - பள்ளம், பாத்தி, பன்னீரடிச் சதுரம், வயிறு
- குளி -நீராடு
- குலம் -ஜாதியின் உட்பிரிவு, இனம், குடி
- குளம் -நீர்நிலை, கண்மாய், ஏரி

- குலை - கொத்து, மனம் தடுமாறுதல்
- குழை - குண்டலம், குழைந்துபோதல்
- குலவி - மகிழ்ந்திருத்தல்
- குழவி - குழந்தை, இளமை, யானைக் கன்று அம்மிக்கல்
- குளவி - ஒரு வண்டு, காட்டுமல்லி
- குலிகம் -சிவப்பு, இலுப்பை
- குளிகம் -மருந்து, மாத்திரை
- குவலை -துளசி, கஞ்சா
- குவளை - குவளை மலர், சொம்பு, ஒரு பேரெண்
- கூலம் - தானியம், கடைத்தெரு
- கூளம் - குப்பை
- கூலி - ஊதியம்
- கூளி(யார்) - பேய், காளை, வீரர், படைவீரர், வணங்கி நிற்பவர், ஏவலாளர்
- கொலு - அரசசபை, திருவோலக்கம் (தெய்வசபை), உல்லாசமாக வீற்றிருத்தல்
- கொழு - மழு, கலப்பையில் மாட்டும் பெரிய இரும்பு, கொழு கொழுத்து இருத்தல்
- கொளு - புறப்பொருள் வெண்பாமாலைத் துறை, பொருந்துவாய்
- கொலை - கொல்லுதல்
- கொளை - கோட்பாடு, பயன், இசைப்பாட்டு, தாளம்
- கொல்லாமை - கொலை செய்யாமை
- கொள்ளாமை - ஏற்றுக்கொள்ளாமை, அடங்காமை
- கொல்லி - உயிர்க்கொல்லி, ஒரு மலை
- கொள்ளி - கொள்ளிக்கட்டை
- கொல்லை - புழக்கடை, தரிசுநிலம்
- கொள்ளை - திருடுதல், மிகுதி
- கோலம் - அழகு, அலங்காரம்

- கோளம் - உருண்டை, வட்டம்
- கோலை - மிளகு
- கோழை - வீரமற்றவன், கபம்
- கோளை - குவளை, எலி
- கோல் - மரக்கொம்பு, அம்பு, குதிரைச்சம்மட்டி, தண்டு, யாழ்நரம்பு
- கோள் - கிரகம்
- கோலி - இலந்தை, விளையாடும் குண்டு
- கோழி - உறையூர், விட்டில், பறவை
- கோளி - பூவாது காய்க்கும் மரம், ஆத்தி, ஆலம்
- சலம் - நீர், சிறுநீர், குளிர்
- சளம் - பொய், துன்பம், வஞ்சனை
- சாலை - பாடசாலை, பொது மண்டபம், அறக்கூடம்
- சாளை - கடல்மீன்
- சாழை - குடிசை, குச்சு
- சுழித்தல் - சுழலுதல், நீர்ச்சுழல்
- சுளித்தல் - முறித்தல், சினத்தல்
- சூலை - வயிற்று நோய்
- சூளை - செங்கல் சூளை
- சூல் - கர்ப்பம்
- சூழ் - சூழ்ந்துகொள், சுற்று
- சூள் - சபதம்
- சேல் - மீன்
- சேள் - மேலிடம்
- சோலி - ரவிக்கை, காரியம்
- சோழி - பலகரை
- சோளி - கூடைவகை
- தவளை - ஓர் உயிரி

- தவலை - பாத்திரம்
- தலம் - இடம், பூமி
- தழம் - தைலம்
- தளம் - மேடை, மாடி வீட்டின் அடுக்கு
- தழை - தாவர உறுப்பு
- தலை - மண்டை
- தளை - விலங்கு
- தாலம் - உலகம், தேன்
- தாளம் - இசைக்கருவி, ஜதி
- தாலி - மங்கலநாண்
- தாழி - கடல், குடம், பரணி பெரியபாண்டம்
- தாளி - தாளித்தல், பனைதால் - நாக்கு, தாலாட்டு
- தாழ் - தாழ்தல், குனிதல்
- தாள் - முயற்சி, பாதம், ஆதி, படி, காகிதம்
- துலக்கம் - ஒளி, தெளிவு
- துளக்கம் - அசைவு, வருத்தம், கலக்கம், ஒளி
- துலம் - கோரை, கனம்
- துளம் - மாதுளை, மயிலிறகு
- துலி - பெண் ஆமை
- துழி - பள்ளம்
- துளி - மழைத்துளி, திவலை, சிறிய அளவு
- துலை - ஒப்பு, கனம்
- துளை - துவாரம், வாயில்
- தூலி - எழுதுகோல், எழுத்தாணி
- தூளி - புழுதி, குதிரை
- தெழித்தல் - கோபித்தல், முழங்குதல், அதட்டுதல், நீக்குதல், ஆரவாரித்தல்
- தெளித்தல் - விதைத்தல், சபதம், கூறல், விதைத்தல்

- தெல் - அஞ்சுதல்
- தெள் - தெளிவான
- தோலன் - அற்பன்
- தோழன் - நண்பன்
- தோலி - பிசின், ஒருவகை மீன்
- தோழி - பாங்கி, நட்பால் நெருக்கமானவள்
- தோளி - அவுரி (ஒருவகை குத்துச்செடி), அரக்கு
- தோல் - சருமம், வனப்பு, விதையின் மேல்பகுதி
- தோள் - புயம், வீரம்
- நலன் - நலம், அழகு, புகழ், இன்பம், நன்மை, குணம்,
- நளன் - தமயந்தியின் கணவன், ஓர் அரசன்
- நலி - நோய்
- நளி - குளிர்ச்சி, பெருமை
- நலிதல் - நலிந்துபோதல், தோற்றல்
- நளிதல் - செறிதல், பரத்தல், ஒத்தல்
- நல் - நல்ல
- நள் - இரவு, நடு, நள்ளிரவு
- நாலம் - பூவின் காம்பு
- நாழம் - இழிவுரை, வசவு
- நாளம் - பூந்தண்டு, உட்துளை, ரத்தநாளம்
- நாலி - முத்து, கந்தை ஆடை
- நாழி - உள்தொளையுள்ள பொருள், ஒருபடி, ஏர், அம்பறாத்துணி, நாடா, பூரட்டாதி
- நாளி - கல், நாய்
- நாலிகை - மூங்கில், அடுப்புச்சந்து
- நாழிகை - வட்டம், கடிகாரம்
- நால் - நான்கு

- நாழ் - குற்றம், செருக்கு
- நாள் - காலம், திதி
- நீலம் - ஒரு நிறம், கருங்குவளை, இருள்
- நீளம் - நெடுமை (நீண்ட), தாமதம்
- நீல் - நீலம், காற்று
- நீள் - நீளம், ஒளி
- பலம் - கிழங்கு, வலி, நெற்றி, சக்தி, சேனை, வன்மை, உறுதி, எடை
- பழம் - கனி, முதுமை
- பல்லி - சிற்றூர், இடையர் ஊர், உழுகருவி, ஓர் உயிரி, வண்டியுறுப்பு
- பள்ளி - இடைச்சேரி, புத்தர் கோயில், குறும்பன், மருதநிலத்தூர், படுக்கை, பள்ளிக்கூடம்
- பலி - பலியிடுதல், பலியுயிர்
- பழி - குற்றம்
- பால் - திரவ உணவு, பகுப்பு, இயல்பு
- பாழ் - வீண், வெறுமை
- பீழை - துன்பம்
- பீளை - கண் அழுக்கு
- புலி - காட்டு விலங்கு
- புளி - புளியமரம், புளியங்காய்
- புலை - புலால், ஊன், கீழ்மை
- புழை - துளை, வாயில், நரகம்
- புகல் - அடைக்கலம்
- புகழ் - பெருமை
- புல் - அற்பம், கலவி, புல்பூண்டு
- புள் - பறவை
- பூலம் - புற்கட்டு
- பூளம் - பூவரசு

- பூழை - துவாரம், கோபுரவாயில்
- பூளை - பூளைச்செடி, இலவம் பஞ்சு
- பாலி - தானியக் குவியல், தூற்றாத தானியம்
- பாழி - கொடுத்தல், ஈதல்
- பாளி - வரப்பு, எல்லை
- பாலிவு - அழகு, நிறைவு
- பாழிவு - பொழிதல், மேன்மை
- போலி - பொய், வஞ்சகம், ஒப்பு
- போளி - இனிப்புப் பண்டம்
- பொலிதல் - செழித்தல், மங்கலமாதல்
- பொழிதல் - ஈதல், கொடுத்தல், சொரிதல், பெய்தல், நிறைதல்
- மலம் - அழுக்கு, பாவம்
- மழம் - இளமை, குழந்தை
- மலை - குன்று, பொருப்பு, வெற்பு,சிகரம்
- மழை - மழைநீர், குளிர்ச்சி, மேகம்
- மலைத்தல் - வியத்தல், தடுமாறுதல்
- மழைத்தல் - மழை பெய்திருத்தல், குளிர்ந்திருத்தல்
- மல்லிகை - மாலை, கழுத்தணி, வரிசை
- மாளிகை - அரண்மனை, கோயில்
- மாலை - அந்திப்பொழுது, பூமாலை
- மாழை - மயக்கம், இளமை, அழகு
- மாளை - புளியம்பட்டை
- மால் - திருமால், மயக்கம், அருகன், இந்திரன், பெருமை, மேகம்
- மாள் - இறத்தல், சாதல் (இற,சாவு)
- முலை - உடலிலுள்ள ஓர் உறுப்பு
- முழை - குகை
- முளை - முளைத்தல், தறி, ஆப்பு, அங்குசம், இளமை, தண்டு, மூங்கில்

- முழி - விழி (விழித்தல்)
- முளி - மரக்கணு, விரல்முளி, வாட்டம்
- மூலி - மூலிகை, மரம், வேருள்ளது
- மூழி - அகப்பை, சோறு, நீர்நிலை, கோணம்
- மூலை - இரு கோடுகள் சந்திக்கும் இடம்
- மூளை - மண்டைக்குள் இருக்கும் ஓர் உறுப்பு(முதன்மைப் பகுதி)
- மெல்ல - மென்று தின்பது
- மெள்ள - மெதுவாக
- மாலி - மௌலி கிரீடம்
- மாழி - மேழி, கலப்பை
- மாளி - துணிமூட்டை
- வலம் - சுற்றுதல், வலப்பக்கம், வெற்றி
- வளம் - வளமை, அழகு
- வலவன் - திருமால்
- வளவன் - சோழன், வேளாளன்
- வலன் - ஓர் அரசன், வெற்றி, வல்லவன்
- வளன் - செழுமை, வளப்பன்
- வழப்பம் - வழக்கம், இயல்பு
- வளப்பம் - வளமை, செழிப்பு
- வலி - நோய், வலிமை, துன்பம்
- வழி - நெறி, பாதை, தடம், உபாயம்
- வளி - காற்று
- வலை - மீன் முதலியன பிடிக்கும் ஒரு கருவி
- வழை - சுரபுன்னை, புதுமை, இளமை
- வளை - கை வளையல், எலி வளை
- வல் - வலிமை, விரைவு, திறமை
- வள் - ஒலிக்குறிப்புச் சொல்

- வல்லம் - வாழை, ஓர் ஊர்
- வள்ளம் - மரக்கலம், படகு, அளவு, தொன்னை
- வல்லி - பூமி, பெண், பிரிதல், படர் கொடி
- வள்ளி - வள்ளியம்மை, ஆபரணம், சந்திரன்
- வலு - வலிமை, பலம், பற்று
- வழு - குற்றம், தவறு, பழிப்புரை, கேடு
- வளு - இளமை, இளைய
- வாலி - கிஷ்கிந்தை அரசன் (இராமாயணம்)
- வாழி - வாழ்க (எனவாழ்த்துதல்)
- வாளி - அன்பு, வட்ட வாள், வீரன், ஒரு காதணி
- வாலை - இளம்பெண், திராவகம் வடிக்கும் பாத்திரம், ஒரு சக்தி
- வாழை - வாழைமரம்
- வாளை - வாளை மீன்
- வால் - விலங்குகளின் ஓர் உறுப்பு
- வாழ் - வாழ்வாயாக (என்று வாழ்த்துதல்)
- வாள் - போர்வாள், நீண்டகத்தி
- விலா - விலா எலும்பு
- விழா - திருவிழா, கொண்டாட்டம்
- விளா - இளமை, வெண்மை, நிணம்
- விழி - கண், கருவிழி
- விளி - கூப்பிடு, அழை, ஏழிசையில் ஒன்று
- விலை - மதிப்பு, விலைக்கு விற்றல்
- விழை - விரும்பு, ஆசைப்படு
- விளை - ஒரு மீன்வகை, விளைவி (விளைச்சல்)
- விலக்கு - விலக்கி விடு, தவிர்
- விளக்கு - விளக்கமாகச் சொல், தீபம்
- விலங்கு - பூட்டு, கை, கைகளைப் பிணிக்கும் கருவி, மிருகம்

- விளங்கு - திகழ் (திகழ்தல்), சிற்றரத்தை (மூலிகை வகை)
- வெல்லம் - சக்கரைக்கட்டி, கருப்பட்டி
- வெள்ளம் - மிதமிஞ்சிய நீர்பெருக்கு
- வேலம் - வேலமரம், தோட்டம்
- வேழம் - யானை, கரும்பு, மூங்கில்
- வேல் - வேலாயுதம்
- வேள் - வேளிர் குலத்தவன், மன்மதன், ஆசை
- வேலை - பணி, கடல்
- வேளை - பொழுது, நேரம், ஒருவகைக் கீரை

**ர, ற பொருள் வேறுபாடு**

- அர - பாம்பு
- அற - தெளிய, முற்றுமாக
- அரவு - பாம்பு
- அறவு - அறுதல், தொலைதல்
- அரம் - ஒரு கருவி
- அறம் - தர்மம், நீதி, கற்பு, புண்ணியம், கடமை, அறநூல், துறவறம்
- அரி - திருமால், அரிசி, அழகு, அரிதல், பன்றி, வண்டு, கடல், தகடு, சிவன், சிங்கம்.
- அறி - அறிந்துகொள்
- அரிய - கிடைத்தற்கு அரிதான, கஷ்டமான
- அறிய - அறிந்துகொள்ள, தெரிந்துகொள்ள
- அரன் - சிவன்
- அறன் - தர்மம், அறக்கடவுள்
- அரிவை - பெண் (7 பருவத்துள் ஒன்று. 18 வயதுக்கு மேல் 25 வயதுக் குட்பட்ட பெண்)
- அறிவை - அறிவாய்
- அருகு - புல்வகை (அருகம்புல்), அண்மை
- அறுகு - குறைந்து போதல்

- அக்கரை - அந்தக் கரை
- அக்கறை - ஈடுபாடு
- அரை - பாதி, மேகலை, வயிறு, ஒரு மரம்
- அறை - வீட்டின் பகுதி, அடி, பாத்தி, ஒலி, பாசறை, சொல், குகை, வஞ்சனை, மாளிகை
- அரைதல் - தேய்தல்
- அறைதல் - அடித்தல், சொல்லுதல்
- அப்புரம் - அந்தப் பக்கம்
- அப்புறம் - பிறகு
- அர்ப்பணம் - உரித்தாக்குதல்
- அற்பணம் - காணிக்கை செலுத்துதல்
- அரு - உருவமற்றது
- அறு - துண்டித்துவிடு, அறுத்துவிடு
- அருமை - சிறப்பு, அன்பு, இன்மை, சுலபத்தில் கிடைக்காதது
- அறுமை - நிலையின்மை, ஆறு
- ஆரு - குடம், நண்டு
- ஆறு - ஒரு எண், வழி, சமயம், தன்மை, நதி, ஒழுக்கம், பக்கம், நிலை
- ஆர - நிறைய, அனுபவிக்க
- ஆற - சூடு ஆற (குறைய)
- ஆரல் - ஒருவகை மீன்
- ஆறல் - சூடு குறைதல்
- இரத்தல் - யாசித்தல்
- இறத்தல் - இறந்துபோதல், சாதல்
- இரகு - சூரியன்
- இறகு - சிறகு
- இரக்கம் - கருணை
- இறக்கம் - சரிவு, மரணம்

- இரங்கு - கருணைகாட்டு
- இறங்கு - கீழிறங்கி வா
- இரவம் - இரவு
- இறவம் - இறால் மீன்
- இரவி - சூரியன், எருக்கு, மலை, வாணிகத்தொழில்
- இறவி - இறத்தல்
- இரவு - இரவு நேரம், யாசித்தல்
- இறவு - மிகுதி, இறால்மீன், இறுதி, தேன்கூடு, சாவு, முடிவு, நீக்கம்
- இரை -ஒலி, உணவு
- இறை - கடவுள், அணு, அரசன், ரேகை, சந்து, கடமை, தலைமை, விடை, உயரம், மூலை
- இரு - இரண்டு, பெரிய, உட்கார், அமர்ந்துகொள்
- இறு - ஒடி, கெடு, சொல்லு
- இரும்பு - கடிவாளம், கிம்புரி, ஆயுதம், ஓர் உலோகம்
- இறும்பு - வண்டு, சிறுமலை
- இருப்பு - கையிருப்பு, இருப்பிடம், ஆசனம், நிலை, பொருள், முதல்
- இறுப்பு - வடிப்பு
- இருத்தல் - அமர்ந்திருத்தல், காத்திருத்தல்
- இறுத்தல் - வடித்தல், செலுத்தல், எறிதல், கடன் கொடுத்தல், பதில்கூறல், முடித்தல், முறித்தல்
- இருக்கு - மந்திரம், ரிக் வேதம்
- இறுக்கு - அழுத்து, இறுக்கிக்கட்டு
- இரைத்தல் - ஒலித்தல், மூச்சுவாங்குதல்
- இறைத்தல் - சிதறுதல், மிகு செலவு
- உரவு - அறிவு, ஒலி, மிகுதி, வலி, ஞானம், விடம்
- உறவு - நட்பு, சுற்றம், எறும்பு
- உரவோர் - அறிஞர், முனிவர்

- உறவோர் - சுற்றத்தார், அடைந்தோர்
- உரி - தோல், மரப்பட்டை, அரைப்படியளவு, உரிச்சொல்,கொத்துமல்லி
- உறி - உறிவெண்ணெய், தூக்கு
- உரு - வடிவம், அழகு, உடல், மரக்கலம், நிறம், அச்சம், பெருமை, மேன்மை
- உறு - மிகுதி
- உருக்குதல் - இளக்குதல், மெலியச் செய்தல்
- உறுக்குதல் - சினத்தல், அதட்டுதல்
- உரை - புகழ், விளக்கவுரை, நூல், பொன்மாற்று, அறிவுரை, சொல்
- உறை - இடம், பண்டம், பொருள், மருந்து, பாலில் இடும் பிரை, துளி, மழை, ஆடை, துன்பம், பாம்பின் விஷப்பை
- உரைப்பு - தங்குதல், தோய்தல்
- உறைப்பு - காரம், கொடுமை
- உரையல் - சொல்லல்
- உறையல் - மாறுபாடு, பிணக்கு
- உரிய - உரிமையான
- உறிய - உறிஞ்ச
- ஊரல் - ஊர்தல், கிளிஞ்சல், ஒருவகைப் பறவை
- ஊறல் - தினவு, ஊற்று, சாறு, வருவாய், ஊறுதல், களிப்பு
- ஊரு - அச்சம், தொடை
- ஊறு - இடையூறு, துன்பம், காயம் உறுதல், தீண்டல், குற்றம், புண், கொலை
- எரி - தீ, கார்த்திகை, பிரபை, இடபராசி, நெருப்பு, நரகம், வெம்மை, கந்தகம்
- எறி - விடுதல், எறிதல், குறிப்பாகக் கூறுதல்
- ஏர - ஓர் உவமஉருபு
- ஏற - மிகுதி, உயர (ஏறுதல்)
- ஏரி - நீர்நிலை, குளம்
- ஏறி - உயர்ந்த, மேலே ஏறி
- ஒரு - ஒன்று, ஒப்பற்ற, ஆடு

- ஒறு - தண்டி, அழி, இகழ்
- ஒருத்தல் - ஆண் விலங்குகளின் பொதுப்பெயர்
- ஒறுத்தல் - தண்டித்தல், துன்புறுத்தல், வருத்துதல், வெறுத்தல், கடிதல், இகழ்தல், குறைத்தல்
- ஒருவு - நீங்கு
- ஒறுவு - வருத்தம், துன்பம்
- கரடு - மரக்கணு, மணிக்கட்டு, முருடு, வளர்ச்சியற்றது
- கறடு - தரமற்ற முத்து
- கரம் - கிரணம், விஷம், செயல், கை, கழுதை
- கறம் - கொடுமை, வன்செய்கை
- கரவு - பொய், வஞ்சனை, மறைவு
- கறவு - கப்பம்
- கரவை - கம்மாளர் கருவி
- கறவை - பாற்பசு
- கரி - அடுப்புக்கரி, நிலக்கரி, யானை, சாட்சி, பெண்கழுதை, விஷம், கருமை
- கறி - இறைச்சி, மிளகு
- கரத்தல் - மறைத்தல்
- கறத்தல் - கவர்தல், பால் கறத்தல்
- கருத்து - எண்ணம்
- கறுத்து - கருநிறங்கொண்டு
- கரு - சினை, பிறவி, முட்டை, நடு, கருநிறம், அணு, அடிப்படை
- கறு - சினம், வைராக்கியம், கோபம், அகங்காரம்
- கருப்பு - பஞ்சம்
- கறுப்பு - கருநிறம், பேய், கோபம், குற்றம், கறை
- கரை - எல்லை, தடுப்பு, ஓரம்
- கறை - அழுக்கு, குற்றம், ரத்தம்
- கரையான் - மீனவன்

- கறையான் - செல் (ஓர் உயிரி)
- கர்ப்பம் - கருவுறுதல், உள், சினை
- கற்பம் - கஞ்சா, அற்பம், ஊழிக்காலம், தேவலோகம், திருநீறு, ஆயுள், மந்திர சாஸ்திரம், 432 கோடி, மூப்பு நீக்கும் மருந்து
- கர்ப்பூரம் - சூடம், பொன், மருந்து, கூடம்
- கற்பூரம் - பொன்னாங்கண்ணி
- காரி - கரிக்குருவி. காக்கை, வயிரவன், ஐயனார், ஒரு நதி, சனி, விஷம், ஒரு வள்ளல், வாசுதேவன்
- காறி - காறிஉமிழும் கழிவு
- காரு - வண்ணான், தேவதச்சன்
- காறு - காறுதல் (காறி உமிழ்), அளவு
- காரை - ஒரு வகை செடி, ஒரு வகை மீன், சிமெண்ட் மணல் சேர்ந்த கலவை
- காறை - ஒரு கழுத்தணி
- கீரி - ஓர் உயிரினம்
- கீறி - பிளந்து, அரிந்து
- குரங்கு - ஒரு விலங்கு
- குறங்கு - தொடை, கொக்கி
- குரவர் - கடவுள், குரு, பெரியோர், அரசர்
- குறவர் - ஒரு ஜாதியினர்
- குரவை - கூத்து வகை, ஒலி, கடல், மகளிர் மகிழ்ச்சி
- குறவை - ஒருவகை மீன்
- குரத்தி - தலைவி, குருவின் மனைவி
- குறத்தி - குறத்தி ஜாதிப் பெண்
- குருகு - பறவை, குட்டி, கொக்கு, உலைத்துருத்தி, உலைமூக்கு, குருக்கத்தி, நாரை, கோழி, கைவளை
- குறுகு - அண்மைப்படுத்து
- குருகினம் - பறவை இனம்
- குறுகினம் - நெருங்கினோம்

- குரை - சத்தம், ஒலி, குதிரை, பெருமை, ஓசை
- குறை - குற்றம், காரியம், கடன், வேண்டுகோள், வறுமை
- குரு - ஆசிரியர், மேன்மை, கனம், வியாழன், நிறம், தந்தை, இரசம்
- குறு - குறுகு
- கூரல் - ஒரு மீன், பறவை இறகு
- கூறல் - சொல்லுதல், விற்றல்
- கூரை - சிறிய ஓலை வீடு, வீட்டின் மேற்கூரை, சிற்றில்
- கூறை - புது ஆடை, சீலை
- கூரிய - கூர்மையான
- கூறிய - சொன்ன
- கூர - குளிர்ச்சி மிக
- கூற - சொல்ல, வேண்டல்
- கோரல் - கூறுதல்
- கோறல் - கொல்லல்
- கோரை - புல்வகை
- கோறை - குவளை, பொந்து
- கோரல் - சேர்தல், குளிர் காற்று, மலைப்பக்கம்
- கோறல் - குளிர் காற்று, மழை
- சிரை - சிரைத்தல், முடிநீக்கல்
- சிறை - சிறைச்சாலை, மதில், காவல், பக்கம், நீர்க்கரை, இறகு, அடிமை, அறை, அணை
- சீரிய - சினந்த, சிறந்த, சீராய்
- சீறிய - சினந்த
- சுரா - கள்
- சுறா - சுறா மீன்
- சூரல் - மூங்கில், பிரம்பு
- சூறல் - தோண்டல்

- சுருக்கு - வலை, சுருக்கம், கட்டு, பூமாலை, வகை, குறைவு, நெய்த்துடுப்பு
- சுறுக்கு - விரைவு
- செரு - போர், ஊடல்
- செறு - வயல், பாத்தி, குளம்
- செருநர் - பகைவர், படைவீரர்
- செறுநர் - பகைவர்
- சொரி - தினவு, அரிப்பு, பொழி
- சொறி - சிரங்கு, சொறிதல்
- தரித்தல் - அணிதல், பொறுத்தல், தங்கல், தாமதித்தல், தாங்குதல்
- தறித்தல் - வெட்டுதல்
- தரி - அணி, அணிந்துகொள்
- தறி - தூண், ஆப்பு, நெசவு இயந்திரம், முளைக்கோல்
- தருதல் - கொடுத்தல்
- தறுதல் - இறுகக்கட்டுதல்
- தாரு - மரம், தேவதாரு, பித்தளை
- தாறு - குலை, அங்குசம், முள், இரும்பு, முள்கோல்
- திரம் - மலை, உறுதி, நிலை, பூமி
- திறம் - உறுதி, நரம்புள்ள வீணை, கூறுபாடு, சுற்றம், குலம், பக்கம், வல்லமை, ஒழுக்கம், மேன்மை, வரலாறு, காரணம்
- திரை - அலை, கடல், திரைச்சீலை
- திறை - கப்பம்
- துரவு - கிணறு
- துறவு - துறத்தல், துறவறம்
- துரை - பெரியோன், தலைவன்
- துறை - நீர்த்துறை, வழி, இடம், நூல், கடற்கரை, உபாயம், பாவினம்
- துரு - களிம்பு
- துறு - கூட்டம், நெருக்கம்

- தூரல் - தூருதல், வருத்தம்
- தூறல் - மழைத்துளி, பழி சொல்லுதல்
- தூரன் - குலத்தின் பெயர்
- தூறன் - மூர்க்கன்
- துரு - வீதி
- துதறு - அழி
- தேரார் - கல்லாதவர், கீழ்மக்கள், பகைவர்
- தேறார் - அறிவிலார், பகைவர்
- தேரி - மணல் திட்டை, மணல் குன்று
- தேறி - தேர்ச்சி பெற்று, தெளிந்து
- நரை - நரைமுடி, வெண்மயிர், மூப்பு, எருது, கவரிமா, மரச்சொத்தை, பெருமை
- நறை - தேன், சாதிக்காய், கள், வாசனை, நறும்புகை, பச்சிலைக்கொடி, குற்றம்
- நாரி - பெண், பார்வதி, வாசனை, கள், சேனை, பன்னாடை, தேன்
- நாறி - கற்றாழை
- நிருத்தம் - கூத்து, நடனம், பதம் பிரித்துப் பொருள் கூறும் நூல், பற்றின்மை
- நிறுத்தம் - நிறுத்தும் இடம்
- நிரை - பசு, ஒழுங்கு, வரிசை
- நிறை - கற்பு, அளவு, அழிவின்மை, நீதி, வரையறை, திண்மை, நிரப்பு
- நூரல் - அவிதல், பதங்கெடுதல்
- நூறல் - அவித்தல்
- நேரி - அமுக்கு, நசுக்கு, அழுத்து
- நேறி - வழி, கோயில், கற்பு
- பரட்டை - பரட்டைத்தலை
- பறட்டை - செழிப்பற்றது
- பரதி - கூத்தாடுபவன்

- பறதி - அவசரம், பறத்தல்
- பரத்தல் - அலமறுதல், மிகுதல்
- பறத்தல் - பறந்துசெல்லல்
- பரம்பு - வயலை சமப்படுத்தும் பலகை
- பறம்பு - பாரியின் மலை
- பரல் - விதை, பருக்கைக்கல்
- பறல் - பறவை
- பரவை - கடல், ஆடல், பரப்பு
- பறவை - பறப்பவை, ஒரு நோய்
- பரி- குதிரை, பெருமை, விரைவு, செலவு, சுமை, மிகுதி
- பறி - பறித்தல், கொள்ளை, பொன், வலை, உடம்பு, ஓலைப்பாய்
- பரித்தல் - காத்தல், ஓடுதல், தாங்குதல், சுமத்தல், சூழ்தல், தரித்தல்,
- பறித்தல் - பிடுங்குதல்
- பரிவு - அன்பு, துன்பம், இரக்கம்
- பறிவு - கழிவு, அதிர்தல்
- பருகு - குடி, அருந்து
- பறுகு - பறட்டை, அன்பு, பக்குவம்
- பரை - சிவசக்தி
- பறை - இசைக்கருவி, இறகு, வாத்தியம், பறவை, சொல்
- பாரை - கடப்பாரை
- பாறை - கற்பாறை
- பிரை - உறைமோர், பயன்
- பிறை - பிறைச்சந்திரன்
- பீரு - புருவம், அச்சமுள்ளோன்
- பீறு - கிழிவு
- புரம் - மாடம், கோயில், இராஜதானி, ஊர், முன், மேல்மாடம், ஒரு நகரம்
- புறம் - இடம், வரியில்லா நிலம், பக்கம், வெளி, பின்புறம், முதுகு

- புரவு - கொடை, நிலம், செழுமை, காத்தல், அரசர், கப்பம், ஆற்றுநீர் பாயும் நிலம்
- புறவு - காடு, புறா
- பெருக்கல் - நிறைத்தல், மிகுத்தல், நிரப்புதல், அதிகப்படுத்தல், மிகுவித்தல்
- பெறுக்கல் - அரிசி, மிகுத்தல்
- பொரி - நெற்பொரி, பொரிதல்
- பொறி - தீப்பொறி, அறிவு, எழுந்து, வரிவண்டு
- பொரித்தல் - வறுத்தல், குஞ்சு பொரித்தல்
- பொறித்தல் - எழுதுதல், தீட்டுதல், பதித்தல், அடையாளமாக வைத்தல்
- பொருப்பு - மலை, பக்கமலை
- பொறுப்பு - பாரம், பொறுமை
- பொரு - போர்
- பொறு - பொறுத்திரு
- மரத்தல் - விறைத்தல்
- மறத்தல் - மறதி, நினைவின்மை
- மரம் - தாவர வகை, மூலிகை, மரக்கலம், பறைவகை
- மறம் - வீரம், போர், சினம், மாறுபாடு, கொலை, பாவம், வலி, கொடுமை, மயக்கம்
- மரி - விலங்குகளின் குட்டி
- மறி - தடை செய்
- மரித்தல் - இறத்தல், சாதல்
- மறித்தல் - தடுத்தல், திரும்புதல், அழித்தல்.
- மரை - மான்
- மறை - வேதம் (எ.கா:- அறம் பொருள், இன்பம் வீடு என்கிற நால் வேதங்கள்)
- மரு - மலை, பாலைநிலம், மணவிருந்து, நீரில்லா இடம், மருக்கொழுந்து
- மறு - குற்றம், மச்சம், எதிர், வேறு, அடையாளம்
- மருப்பு - கொம்பு, யானைத் தந்தம், யாழ்த்தண்டு

- மறுப்பு - எதிர்ப்பு
- மருகு - வாசனைத்தாவரம்
- மறுகு - சிறியதெரு
- மாரன் - மன்மதன், காமன்
- மாறன் - பாண்டியன், சடகோபாழ்வார்
- முரி - பாலைநிலம், நொய், சிதைவு
- முறி - ஒடி, பத்திரம், தளிர், எழுது, துண்டு
- முருக்குதல் - அழித்தல், உருக்குதல்
- முறுக்குதல் - சுழற்றுதல், திரித்தல்
- வரம் - இறைவன் கொடுப்பது, வேண்டும் பொருள், தெய்வ ஈகை, மேன்மை, விருப்பம்
- வறம் - வற்றுதல், வறட்சி, பஞ்சம், நீரின்மை, வறுமை, வெம்மை
- வரவு - வருமானம், வழி
- வறவு - கஞ்சி
- வரப்பு - எல்லை, வரம்பு
- வறப்பு - வறட்சி, வறுமை, வற்றுதல்
- விரகு - விவேகம், உபாயம், உற்சாகம், புத்தி, கபடம்
- விறகு - எரிகட்டை
- விரலி - மஞ்சள்
- விறலி - மெய்ப்பாடு தோன்ற ஆடிப்பாடும் பெண், 16 வயதினள்
- விரல் - மனித உடலில் உள்ள உறுப்பு
- விறல் - பெருமை, வீரம், வெற்றி, மிகுதி, வலி.
- விராய் - விறகு
- விறாய் - செருக்கு, இறுமாப்பு
- வெரு - அச்சம்
- வெறு - வெறுத்துவிடு
- வெரல் - மூங்கில்
- வெறல் - வெல்லுதல், வெற்றி கொள்ளல்
- விரை - விரைந்துசெல்
- விறை - மரத்துப்போ(தல்).

## இனவெழுத்துகள்

- சிங்கம், தங்கம், தேங்காய் = ஏன் 'ங்க' சேர்ந்தே வருகின்றது.
- மஞ்சள், வஞ்சம், பஞ்சு = ஏன் 'ஞ்சு' சேர்ந்தே வருகின்றது.
- ‘ங்’ & ‘க’, இரண்டும் இனஎழுத்துகள்.
- இனம் = ஒத்த பண்புகள்.

பறப்பவைகளை பறவைகள் என்றும், ஊர்ந்து செல்வதை ஊர்வனைகள் என்றும் இனம் பிரிகின்றோம். அதேபோல் எழுத்துக்களும் சில காரணங்களால் இனம் கொள்ளும்.

1. **வடிவு (எழுத்தின் உருவம்).**
2. **மாத்திரை (எழுத்தின் ஒலி).**
3. **பிறப்பு (பிறக்கும் இடம் = மார்பு, கழுத்து, தலை, மூக்கு).**
4. **தொழில்/முயற்சி (உதடு, நாக்கு, பல், மேல்வாய்{அண்ணம்}).**
5. **பொருள் (ஒரே பொருள் தரக்கூடிய சொற்கள்)**

முதலிய காரணங்களால் ஒத்துப்போகும். அவ்வாறு ஒத்துப்போகும் எழுத்துகளை இனஎழுத்துகள் என்று கூறுவோம்.

**எழுத்துகளின் பிறப்பு:**

- எழுத்துகள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை ஒலியணுக்கள். உயிர் தங்கியுள்ள உடம்பின் உள்ளே எழுகின்ற காற்றானது, மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகியவற்றைப் பொருந்தி, உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய இவ்வுறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.
- எழுத்துக்கள் தோன்றுகின்ற மார்பு, கழுத்து, தலை, மூக்கு முதலானவற்றை இடப்பிறப்பு எனவும்.
- உதடு, நாக்கு, பல், மேல்வாய்(அண்ணம்) முதலான உறுப்புகளின் தொழில்(முயற்சி) வேறுபாட்டினால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு எனவும் வழங்குவர்.
- க், ங் - இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன
- ச், ஞ் - இவ்விரு மெய்களும் இடை நா (நடு நாக்கு) நடு அண்ணத்தைத் தொடுவதனால் பிறக்கின்றன.
- ட், ண் - இவை நாவினது நுனி, அண்ணத்தினது நுனியைத் தொடுவதனால் பிறக்கின்றன.

- த், ந் - மேல்வாய்ப் பல்லினது அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.
- ப், ம் - மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த, இவ்வெழுத்துகள் பிறக்கும்.
- ற், ன் - இவை, மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.
- தொழில்/முயற்சி காரணத்தினால் இரு எழுத்துக்களும் இணைந்து இனஎழுத்துகளாகின.

**இனவெழுத்துகள்:**

**இனவெழுத்துகள்** என்பது ஒத்த தன்மையைக் கொண்ட எழுத்துகளைக் குறிக்கும். இவை எழுத்துகளின் வடிவம், எழுத்துகள் பிறக்கும் இடம், எழுத்துகளை ஒலிப்பதற்கான முயற்சி, காலம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

**உயிர் எழுத்துகளில் இனவெழுத்துகள்:**

உயிர் எழுத்துகளில் குறில் எழுத்துகள் நெடில் எழுத்துகளுக்கு இனமாக அமையும்.

| குறில் | நெடில் |
|---|---|
| அ | ஆ |
| இ | ஈ |
| உ | ஊ |
| எ | ஏ |
| ஒ | ஓ |
| இ | ஐ |
| உ | ஔ |

இவை பா புனைகையில் மோனையை அமைக்க உதவுகின்றன.

**மெய் எழுத்துகளில் இனவெழுத்துகள்:**

மெய் எழுத்துகளில் வல்லின எழுத்துகளுக்கு மெல்லின எழுத்துகள் இனமாக அமைந்து ககர ஒலிப்பை அதிரொலியாக மாற்றுகின்றன.

| வல்லினம் | மெல்லினம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| க் | ங் | தங்கம் |
| ச் | ஞ் | மஞ்சள் |
| ட் | ண் | வண்டி |
| த் | ந் | பந்து |
| ப் | ம் | பம்பரம் |

| | | |
|---|---|---|
| ற் | ன் | நன்றி |

**குறிப்பு:** இடையின எழுத்துகள் ஆறும் ஒரே இனமாகும், **(ய், ர், ல், வ், ழ், ள்)**
**எகா:** பள்ளி

- ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

(எ.கா.) திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தன ம், அம்பு, தென்றல்.

- இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.
- மெய்யெழுத்துகளைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

(எ. கா.) ஓஒதல், தூஉம், தழீஇ

**தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?**

அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கண்ணில் ஈ) **தம்பி**

**2. தவறான சொல்லை வட்ட மிடுக.**

அ) கண்டான் ஆ) **வென்ரான்** இ) நண்டு ஈ) வண்டு

**பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக;**

- தெண்றல் – தென்றல்
- கன்டம் – கண்டம்
- நன்ரி – நன்றி
- மன்டபம் – மண்டபம்

## சுட்டெழுத்துகள் & வினா எழுத்துக்கள்

**சுட்டெழுத்துகள்:**

- பிறவற்றைச் சுட்டுவதற்காகச் சுட்டுப்பொருள் தந்து நிற்கும் எழுத்துகள், சுட்டெழுத்துகள் எனப்படும். அவை அ, இ, உ என்பன.
- அவன், அவள், அவர், அது, அவை, இவன், இவள், இவர், இது, இவை. இவற்றுள், 'இ' என்பது, பக்கத்தில் உள்ளதைச் சுட்டிக்காட்டுவதற்கு வரும் எழுத்து. அதனால், 'இ' என்பது அண்மைச் சுட்டு என்ற அழைக்கப்படுகிறது.

  இவன், இவள், இவர், இது, இவை
- 'அ என்பது, தொலைவில் உள்ளவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கு வரும் எழுத்து. அதனால் 'அ என்பது சேய்மைச் சுட்டு. (சேய்மை - தொலைவு)

  அவன், அவள், அவர், அது, அவை.
- அந்த, இந்த, அங்கு, இங்கு என வருவன எல்லாம் சுட்டுத் திரிபுகள் எனப்படும்.
- 'உ' என்ற எழுத்தும் சுட்டு எழுத்து. ஆனால், இது தற்காலப் பயன்பாட்டில் இல்லை.

**அகச்சுட்டு:**

ஒருசொல்லின் அகத்தே (உள்ளே) நின்று சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

**சான்று:**

**அவன், அவள், அவர், அது, அவை**

**இவன், இவள், இவர், இது, இவை**

**உது, உவன்.**

அகச்சுட்டுச் சொற்களிலிருந்து சுட்டெழுத்தை நீக்கினால் அச்சொல் பொருள் தராது.

- அ + வள்
- இ+ வள்
- அ + வன்
- இ + வன்
- அ+ து
- இ + து
- அ+ வை

- இ+ வை

**புறச்சுட்டு:**

ஒரு சொல்லின் புறத்தே (வெளியே) நின்று சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு ஆகும்.

**சான்று:**

அப்பையன், அவ்வீடு, அக்குளம்.

இப்பையன், இவ்வீடு, இக்குளம் உப்பக்கம்.

புறச்சுட்டு சொற்கள் பிரித்தாலும் பொருள் தரும்.

- அ + பையன்
- இ + பையன்
- அ+ வீடு
- இ + வீடு
- அ + குளம்
- இ+ குளம்
- உ+பக்கம்

**சுட்டுப்பெயர்கள்:**

- பதிலிடு பெயர்களில் இரண்டாவது வகை **சுட்டுப்பெயர்கள்** ஆகும். தமிழில் **அ, இ, உ** என்னும் மூன்று உயிர்கள் சுட்டுப்பொருளில் நெடுங்காலந் தொட்டே வழங்கி வருகின்றன.
- அகரம் சேய்மையில் (Remote) உள்ளதையும், **இகரம்** அண்மையில் (Proximate) உள்ளதையும், **உகரம்** சேய்மைக்கும் அண்மைக்கும் இடையில் (Intermediate) உள்ளதையும் சுட்டும். எனவே தமிழிலக்கண நூலார் இம்மூன்றையும் **சுட்டெழுத்துகள்** என்று குறிப்பிடுவர்.
- இம் மூன்று சுட்டெழுத்துகளோடு ஐம்பால் காட்டும் **அன், அள், அர், து** போன்ற விகுதிகள் சேர்வதால் **சுட்டுப்பெயர்கள்** உருவாகின்றன.

**சான்று:**

- அ + அன் = அவன்
- அ + அள் = அவள்
- அ + அர் = அவர்
- அ + து = அது

- இவ்வாறு உருவாகும் சுட்டுப்பெயர்கள் ஒரு பொருளை நேரடியாகக் குறிக்கும் பெயர்களுக்குப் பதிலாக வழங்குகின்றன. எனவே இவற்றை மொழியியலார் **சுட்டுப் பதிலிடு பெயர்கள்** (Demonstrative Pronouns) என்று குறிப்பிடுகின்றனர்.
- இனிக் காலந்தோறும் தமிழில் சுட்டுப்பெயர்கள் வழங்கி வந்துள்ள முறையைக் காண்போம்.

**சங்ககாலம்:**

- தொல்காப்பியர் சுட்டுப்பெயர்களை உயர்திணைக்கு உரிய சுட்டுப் பெயர்கள், அஃறிணைக்கு உரிய சுட்டுப்பெயர்கள் என இரு வகைப்படுத்துகிறார். அவர் குறிப்பிடும் சுட்டுப் பெயர்களைப் பின்வரும் பட்டியல் காட்டும்.

| **சுட்டெழுத்துகள்** | | | |
|---|---|---|---|
| **திணையும் பாலும்** | **அ** | **இ** | **உ** |
| உயர்திணை - ஆண்பால் | அவன் | இவன் | உவன் |
| உயர்திணை - ஆண்பால் | அவன் | இவன் | உவன் |
| உயர்திணை - பெண்பால் | அவள் | இவள் | உவள் |
| உயர்திணை - பலர்பால் | அவர் | இவர் | உவர் |
| அஃறிணை - ஒருமை | அது | இது | உது |
| அஃறிணை - பன்மை | அவை | இவை | உவை |

- மேலே காட்டிய பட்டியலை நோக்கின் சுட்டெழுத்துகளை அடியாகக் கொண்டு திணை, பால் உணர்த்தும் சுட்டுப்பெயர்கள் தமிழில் பண்பட்ட ஓர் ஒழுங்கான முறையில் உருவாகி அமைந்திருப்பதை அறிந்து கொள்ளலாம்.
- தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள சுட்டுப்பெயர்கள் யாவும் சங்க கால இலக்கியங்களில் வழங்குகின்றன. தற்காலத் தமிழில் இடைநிலைச் சுட்டுப் பெயர்களாகிய **உவன், உவள், உவர், உது, உவை** என்பன வழக்கில் இல்லை. ஆனால் சங்க கால இலக்கியங்களில் இவை வழக்கில் இருந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**சான்று:**

**பாக்கத்து <u>உவன்</u> வரின் எவனோ? பாண! (நற்றிணை, 127: 3)**

**<u>உது</u>க்காண் தோன்றும்எம் சிறுநல் ஊரே(நற்றிணை, 264: 9)**

**இடைக்காலம்:**

- இடைக்காலத் தமிழில் சங்க காலத்தில் இருந்த சுட்டுப்பெயர்கள் யாவும் வழக்கில் இருந்துள்ளன. சங்க காலத்தைப் போலவே, இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களிலும் இடைநிலைச் சுட்டுப் பெயர்கள் காணப்படுகின்றன; ஆனால் மிக அருகியே காணப்படுகின்றன.

**உவன் காண் குமுதன்; குமுதாக்கனும்**

**ஊங்கு அவன் காண்;**

**இவன் காண் கவயன்; கவயாக்கனும்**

**ஈங்கு இவன் காண். - (கம்பராமாயணம், 7016: 1-2)**

என்ற **கம்பராமாயணப்** பாடல் அடிகளில் மூன்று சுட்டுப்பெயர்களும் வந்துள்ளன.

சுட்டுப்பெயர்களைப் பொறுத்தவரை இடைக்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்தது. சங்க காலத்தில் **அவர்** என்பது பலரைக் குறிக்கும் பன்மைச் சுட்டுப்பெயர். ஆனால் அது ஒருவனையோ ஒருத்தியையோ மட்டும் குறிக்கும் உயர்வு ஒருமைப்பெயராகவும் சங்க காலத்தில் வழங்கியது. இவ்வாறு உயர்வு காரணமாக ஒருவரை மட்டும் **அவர்** என்ற சொல் குறிக்கவே, பலரைக் குறிக்க 'அவர்' என்பதோடு 'கள்' விகுதி சேர்த்து, **அவர்கள்** என்ற பன்மைச் சுட்டுப்பெயர் இடைக்காலத் தமிழில் உருவாக்கப்பட்டு வழங்கி வரலானது. மற்ற தன்மை, முன்னிலைப் பன்மைகளில் **யாங்கள், நாங்கள், நீங்கள்** போன்ற வடிவங்களிலும் கள் விகுதி இருப்பது இங்கே கருதத்தக்கது. இடைக்காலத் தமிழில் ஆழ்வார், நாயன்மார் பாடல்களில் அவர்கள் என்னும் வழக்கு மிகுதியாக உள்ளது.

**அழைப்பன் திருமாலை ஆங்கு அவர்கள் சொன்ன**
**பிழைப்பில் பெரும்பெயரே பேசி - (இரண்டாம் திருவந்தாதி, 50)**

இடைக்காலத்தில்
தோன்றிய வீரசோழியம், அவர் என்பதோடு அவர்கள் என்பதையும்
படர்க்கைச் சுட்டுப் பன்மைப்பெயராகக் குறிப்பிடுவது இங்கே கருதத்தக்கது.

**தற்காலத் தமிழ்:**

- தற்காலத் தமிழில் உகரச் சுட்டுப்பெயர்கள் காணப்படவில்லை. பிற அகர, இகரச் சுட்டுப் பெயர்கள் காணப்படுகின்றன. இடைக்காலத் தமிழில் போலவே தற்காலத் தமிழிலும் **அவர்** என்பது உயர்வு ஒருமைச் சுட்டுப் பெயராக வழங்குகிறது; **அவர்கள்** என்பதே பன்மைச் சுட்டுப்பெயராக வழங்குகிறது.

**சான்று:**

- **அவர் வந்தார்**
- **அவர்கள் வந்தார்கள்**

## வினா எழுத்துகள்

'எ, யா, ஆ, ஓ, 'ஏ' ஆகிய ஐந்து எழுத்தும் வினாப் பொருளில் வருகின்ற எழுத்துகளாகும். எவன்? யார்? அவனா? அவளோ? யானே?

இவ்வாறு எடுத்துக்காட்டுகள் அமையும். இவற்றுள், 'எ', 'யா' ஆகிய இரண்டும் சொல்லின் முதலில்

நின்று வினாப் பொருள் தரும்.

- எவன்? யாவன்?
- எவள்? யாவள்?
- எவர்? யாவர்?
- எவை? யாவை?

எது? யாது?

'ஆ, ஓ - ஆகிய இரண்டும் சொல்லின் இறுதியில் நின்று வினாப் பொருள் தரும்.

- அவனா? — அவனோ?
- அவளா? — அவளோ?
- அதுவா? — அதுவோ?
- அவையா? — அவையோ?

'ஏ' என்னும் எழுத்து, சொல்லுக்கு முதலிலும், சொல்லுக்கு இறுதியிலும் நின்று வினாப் பொருள் தரும்.

- ஏன்? - யானே?
- ஏது ? - அவனே?

**அகவினா:**

- சொல்லின் உள்ளே நின்று வினாப் பொருள் தந்தால் அகவினா ஆகும். அந்த வினா எழுத்தை நீக்கினால் சொல்லுக்குப் பொருள் இராது.
- **சான்று:** யார்? எது? என்?

**புறவினா:**

- சொல்லின் வெளியே நின்று வினாப்டுபாருள் தந்தால் புறவினா ஆகும். அந்த வினா எழுத்தை நீக்கினாலும் சொல்லுக்குப் பொருள் இருக்கும்.
- **சான்று:** அவனா? (அவன்+ ஆ)? இவன்தானே (ன்+ஏ)?, எவ்வூர்? (எ+ஊர்)?

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது:**

1. நீர் _____தேங்கி இருக்கிறது? (அது / **எங்கே**)
2. யார் _______ தெரியுமா? (**அவர்** / யாது)
3. உன் வீடு ________ அமைந்துள்ளது? (**எங்கே** / என்ன)

**சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு:**

ஏதேனும் ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவப்படுவது வினாவாகும். வினா கேட்கப் பயன்படுத்தும் சொற்கள் வினாச்சொற்கள் எனப்படும்.

"எது, என்ன, எங்கு, எப்படி, எத்தனை, எப்பொழுது, எவற்றை, எதற்கு, ஏன், யார், யாது, யாவை" போன்றன வினாச்சொற்கள் ஆகும்.

'**என்ன**':

(i) எதையாவது பற்றிய தகவலைக் கேட்க 'என்ன' பயன்படுத்தப்படுகிறது. எ.கா. நேரம் என்ன?

(iii) திரும்பத் திரும்ப அல்லது உறுதிப்படுத்தலைக் கேட்பதற்கும் 'என்ன' பயன்படுத்தப்படுகிறது.

**எடுத்துக்காட்டுகள்**:

- நேரம் என்ன?
- உங்களுக்கு என்ன வேண்டும்?

'**யார்**':

ஒரு நபர் பற்றிய தகவல்களைப் பெற இது பயன்படுகிறது.

**எடுத்துக்காட்டுகள்**:

- கவிதை எழுதுவது யார்?
- இந்தக் கடிதம் / புத்தகத்தை எழுதியவர் யார்?

**யாருடன்**:

ஒரு வினைச்சொல் அல்லது முன்மொழிவின் பொருளாக யாருடன் பயன்படுத்தப்படுகிறது

**எடுத்துக்காட்டுகள்**:

- நான் யாருடன் கச்சேரிக்குப் போவேன் என்று எனக்குத் தெரியாது.

'**எப்போது**':

நேரம், காலம் மற்றும் தேதி பற்றி கேட்க 'எப்போது' பயன்படுத்தப்படுகிறது.

**எடுத்துக்காட்டுகள்**:

- விடுமுறை முடிந்து எப்போது திரும்புவீர்கள்?
- நீங்கள் எப்போது திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுள்ளீர்கள்?
- நீங்கள் எப்போது இங்கு வேலை செய்ய ஆரம்பித்தீர்கள்?

'**ஏன்**':

"ஏன்" என்பது காரணம் / காரணத்தைக் கேட்கப் பயன்படுகிறது

**எடுத்துக்காட்டுகள்**:

- ஏன் இவ்வளவு தாமதம்?
- நீங்கள் ஏன் மும்பை செல்கிறீர்கள்?

'**யாருடையது**':

'உரிமையைப் பற்றி கேட்க ''யாருடையது'' பயன்படுத்தப்படுகிறது.

**எடுத்துக்காட்டுகள்**:

- இது யாருடைய படம்?
- இது யாருடைய வீடு?

'**எது**':

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒத்த விஷயங்கள் அல்லது நபர்களை ஒப்பிடுவதற்காக தகவல்களைப் பெற 'எது' பயன்படுத்தப்படுகிறது.

**எடுத்துக்காட்டுகள்**:

- இவற்றில் உங்கள் புத்தகம் எது?
- மிக உயரமான மலை எது?

'**எப்படி**':

'எப்படி' என்பது முறை / நிலை அல்லது தரம் பற்றி கேட்க பயன்படுத்தப்படுகிறது.

**எடுத்துக்காட்டுகள்**:

- உங்கள் உடல்நலம் எப்படி இருக்கிறது?
- உங்கள் வணிகம் எப்படி இருக்கிறது?

'**எவ்வளவு**':

தூரத்தைக் கேட்க 'எவ்வளவு' பயன்படுத்தப்படுகிறது.

**எடுத்துக்காட்டுகள்**:

- அகமதாபாத்திலிருந்து பரோடா எவ்வளவு தொலைவில் உள்ளது?
- உங்கள் வீட்டிலிருந்து பள்ளி எவ்வளவு தொலைவில் உள்ளது?

‘**எத்தனை**’:

‘எத்தனை’ என்பது அளவு அல்லது வயதை கேட்கப் பயன்படுகிறது (எண்ணத்தக்கது).

**எடுத்துக்காட்டுகள்**:

- எத்தனை கார்கள் உள்ளன?
- எத்தனை பெண்களை திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி அளித்தார்?

**சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக:**

1. **நெல்லையப்பர் கோவில் _________ உள்ளது?**

   விடை: எங்கு

2. **_________ ஆழ்வார்கள் மூன்று பேர்?**

   விடை: முதல்

3. **_________ சொற்களைப் பேச வேண்டும்?**

   விடை: எப்படிப்பட்ட

4. **அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் _________?**

   விடை: யார்

5. **அறநெறிச்சாரம் என்பதன் பொருள் _________?**

   விடை: யாது

**பொருத்தமான வினாச் சொல்லை எடுத்து வினாத் தொடரை முழுமையாக்குக:**

1. **உன்னுடைய ஊரின் பெயர்** _________?

   விடை: என்ன

2. **உனக்குப் பிடித்த வண்ணம்** _________?

   விடை: எது

3. **நீ பள்ளிக்கு** _________ **வருகிறாய்?**

   விடை: எப்படி

4. **உன்னுடைய நண்பன்** _________?

   விடை: யார்

**5. கோடை விடுமுறைக்கு __________ சென்றாய்?**

விடை: எங்குச்

**6. மெய்ப்பொருள் என்பதன் பொருள் __________?**

விடை: யாது

**7. குறில் எழுத்துகள் __________?**

விடை: யாவை

**8. சாருமதி __________ வீட்டிற்குச் சென்றாள்?**

விடை: யாருடைய

மனித நேயம் வளர்ப்போம் மாண்புடன் மீட்போம் சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை

## ஒருமை, பன்மை - பிழைகளை நீக்குதல் & ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்

**ஒருமை:**

- ஒருமை என்பது ஒன்றை மட்டும் குறிப்பது.
- ஒருமையில் தொடங்கும் ஒரு தொடரின் முடிவு ஒருமையில் தான் முடியவேண்டும்
- (எ.கா.) மரம் சாய்ந்தது, அறிஞர் வந்தார்

**அறுவகைப் பெயர்கள்:**

**பொருள்:** மலர், மலர்கள்

**இடம்:** மலை, மலைகள்

**காலம்:** நொடி, நொடிகள்

**சினை:** விரல், விரல்கள்

**குணம்:** அழகு, அழகு

**தொழில்:** செலவு, செலவுகள்

**எடுத்துக்காட்டு வாக்கியங்கள்:**

- மான் துள்ளிக் குதித்தது.
- சிறுத்தை வேகமாக ஓடியது.
- அம்மா கடைத் தெருவிலிருந்து வந்தார்.
- திருத்தேர் இன்று நிலைக்கு வராது.
- ஒவ்வொரு கருத்தும் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடியதாகும்.
- மாணவி தேர்வு எழுதினாள்.
- கந்தன் நாளைக்கு சென்னைக்கு புறப்படுவார்.
- மரம் சாய்ந்தது.
- தம்பு வருகிறான்.
- ஆடு வயலில் மேய்ந்தது.
- தென்றல் மெல்ல வீசியது.

**பன்மை:**

- பன்மை என்பது ஒன்றிற்கு மேற்பட்டவைகளைக் குறிப்பது.

- பன்மையில் தொடங்கும் ஒரு தொடரின் முடிவு பன்மையில் தான் அமைய வேண்டும்.
- (எ.கா.) மரங்கள் சாய்ந்தன, கருவிகள் பழுதடைந்தன.
- உயர்திணையில் பலர்பாலைக் குறிக்கும் பெயர்ச்சொல் பன்மை.
- அஃறிணையில் 'கள்' என்னும் விகுதி பெற்று வரும் சொற்கள் பன்மை.
- கள்-விகுதி பெறாமல் வினைமுற்றால் பல-பொருளை உணர்த்தும் பன்மைகளும் உண்டு.
- இதனைப் பால்பகா அஃறிணைப் பெயர் என்பர்.
- **எ.கா:** மலர்கள் விரிந்தன. – இதில் 'மலர்கள்' என்பது பன்மை

**எடுத்துக்காட்டு வாக்கியங்கள்:**

- கருத்துகள் எல்லாம் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடியன.
- பூனைகள் இங்கு வாரா.
- மான்கள் துள்ளிப் பாய்ந்தன.
- பழங்கள் எல்லாம் அழுகிப் போயின.
- மரங்கள் சாய்ந்தன.
- கருவிகள் பழுதடைந்தன.
- தீய பண்புகள் வாழ்வைக் கெடுத்தன.
- திருக்குறள் குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள கடைமைகளைக் காட்டுகின்றன.

**தன்மைப் பெயர்:**

| ஒருமை | பன்மை |
|---|---|
| யான் | யாம், யாங்கள் |
| நான் | நாம், நாங்கள் |

**முன்னிலைப் பெயர்:**

| ஒருமை | பன்மை |
|---|---|
| நீ | நீர், நீங்கள் |

**படர்க்கைப் பெயர்:**

| ஒருமை | பன்மை |
|---|---|
| அவன், அவள் | அவர்கள் |

| | |
|---|---|
| அது | அவை |
| தம்பி | தம்பிமார் |
| தங்கை | தங்கைமார் |
| கண் | கண்கள் |
| நரி | நரிகள் |
| **ஒருமை** | **பன்மை** |
| அன்று | அல்ல |
| தான் | தாம் |

**எடுத்துக்காட்டு: வகை -1**

| | |
|---|---|
| பிழை | மன்னர் தன் குடிகளிடம் அன்பாய் இருப்பார். |
| திருத்தம் | மன்னர் தம் குடிகளிடம் அன்பாய் இருப்பார். |
| பிழை | ஆமைகள் வேகமாய் ஓடாது |
| திருத்தம் | ஆமைகள் வேகமாய் ஓடா. |
| பிழை | நான் கொடுத்த புத்தகம் இது அல்ல |
| திருத்தம் | நான் கொடுத்த புத்தகம் இது அன்று |
| பிழை | இதைச் செய்தவன் இவன் அல்ல |
| திருத்தம் | இதைச் செய்தவன் இவன் அல்லன் |
| பிழை | ஒருகாட்டில் ஒரு சிங்கமொன்று இருந்தது |
| திருத்தம் | ஒருகாட்டில் சிங்கமொன்று இருந்தது |
| பிழை | பாலும் தேனும் கிடைத்தது |
| திருத்தம் | பாலும் தேனும் கிடைத்தன. |
| பிழை | தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றன |
| திருத்தம் | தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றது |
| பிழை | திட்டங்கள் தீட்டப்பட்டது |
| திருத்தம் | திட்டங்கள் தீட்டப்பட்டன |
| பிழை | கந்தன் தேவியை மணந்தார் |
| திருத்தம் | கந்தன் தேவியை மணந்தான் |

**எடுத்துக்காட்டு: வகை -2**

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| அவைகள் | அவை |
| அதுகள் | அது |
| எனது மகள் | என் மகள் |
| ஒரு ஊர் | ஓர் ஊர் |
| நாட்கள் | நாள்கள் |

| | |
|---|---|
| பொதுவழி அல்ல | பொதுவழி அன்று |
| சில அறிஞர் | அறிஞர் சிலர் |
| அவன் அல்ல | அவன் அல்லன் |
| அவள் அல்ல | அவள் அல்லள் |
| அவர்கள் அல்ல | அவர்கள் அல்லர் |
| அவை அன்று | அது அன்று |
| அது உரிமையானது | அஃது உரிமையானது |
| யான் தாம் வந்தோம் | யான் தான் வந்தேன் |
| நான் தாம் சென்றேன் | நான் தான் சென்றேன் |
| நீர் தான் கொடுத்தீர் | நீர் தாம் கொடுத்தீர் |
| நாம் தான் போவோம் | நாம் தான் போவோம் |
| நீர் தான கொடுத்தீர் | நீர் தாம் கொடுத்தீர் |
| அவை தான் ஓடின | அவை தாம் ஓடின |

**அன்று, அல்ல, அல்லன், அல்லள், அல்லார், அல்லை, அல்லேம்**

- இம்மாதிரியான சொற்கள் அனைத்தையும் இக்காலத் தமிழர்கள் ‘அல்ல’ என்று ஒரே சொல்லில் அடக்கி விட்டனர். இது மாபெரும் தவறு. ‘அல்ல’ என்பது பலவின்பாலுக்கு மட்டுமே பொருந்தும்.
- எடுத்துக்காட்டாக, ‘அவை பறவைகள் அல்ல’ என்று எழுதலாம். ஆனால் ‘அது பறவை அல்ல’ என்று ஒன்றன்பாலுக்கு ‘அல்ல’ எனும் எதிர்மறைச் சொல்லைப் பயன்படுத்துதல் பிழையாகும்.

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| இது செடி அல்ல | இது செடி அன்று |
| அவன் நல்லவன் அல்ல | அவன் நல்லவன் அல்லன் |
| அவள் சிறுமி அல்ல | அவள் சிறுமி அல்லள் |
| நான் கற்றவன் அல்ல | நான் கற்றவன் அல்லேன் |
| அவர் தமிழர் அல்ல | அவர் தமிழர் அல்லர் |
| நாங்கள் ஏழைகள் அல்ல | நாங்கள் ஏழைகள் அல்லேம் |
| நீ எனக்கு நண்பன் அல்ல | நீ எனக்கு நண்பன் அல்லை |
| அதைச் செய்தது நான் அன்று. | அதைச் செய்தது நான் அல்ல. |
| பானையை உடைத்தது கண்ணன் அல்ல. | பானையை உடைத்தது கண்ணன் அல்லன். |
| மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை. | மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று. |

**தான், தாம், தன், தம் எனும் பதங்களை எடுத்தாளும் முறை:**

- தான், மற்றும், தன் எனும் பதங்கள் ஒருமையில் மட்டுமே பயன்படல் வேண்டும்.
- (எ. கா) இவன் தான் என் நண்பன், இது தான் சிறந்தது என எழுதுதல் ஏற்புடைத்து.

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| இவர்தான் என் நண்பர் | இவர்தாம் என் நண்பர் |
| இவைதான் சிறந்தவை | இவைதாம் சிறந்தவை |
| கண்ணன் தம் வேலையைச் செய்தான் | கண்ணன் தன் வேலையைச் செய்தான் |
| பறவைகள் தன் இரையைத் தானே தேடிக் கொள்ளும் | பறவைகள் தம் இரையைத் தானே தேடிக் கொள்ளும் |

- தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.
- (எ.கா.) தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
- மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்.
- (இங்குத் தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்)
- (எ.கா.) மாடுகள் தமது தலையை ஆட்டின.
- கன்று தனது தலையை ஆட்டியது.

**ஓடாது, ஓடா, மேயாது, மேயா:**

- எதிர்மறை வாக்கியங்களில் 'து' என்பது ஒன்றன்பாலுக்குரிய வினை முற்று விகுதி. அது பலவின்பாலுக்குப் பயன்படல் கூடாது.

| **பிழை** | **திருத்தம்** |
|---|---|
| இன்று வண்டிகள் ஓடாது | இன்று வண்டிகள் ஓடா |
| ஆடுகள் பயிரை மேயாது | ஆடுகள் பயிரை மேயா |
| மலர்கள் வாடாது | மலர்கள் வாடா |
| புலிகள் புல்லைத் தின்னாது | புலிகள் புல்லைத் தின்னா |
| மான்கள் நில்லாது | மான்கள் நில்லா |
| மாடுகள் துள்ளாது | மாடுகள் துள்ளா |

**உடன்பாட்டுப் பன்மையில் பிழை:**

- எதிர்மறை வாக்கியங்களை போல உடன்பாட்டு வாக்கியங்களிலும் பலவின்பால் எழுவாயாக வருமிடத்து 'து' என்னும் ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகளைப் பயன்படுத்துதல் பிழையாகும்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| பூக்கள் பூத்தது | பூக்கள் பூத்தன |
| மாடுகள் வந்தது | மாடுகள் வந்தன |
| மீன்கள் துள்ளுகின்றது | மீன்கள் துள்ளுகின்றன |
| அணைகள் நிரம்பியது | அணைகள் நிரம்பின |

**எழுவாய் பயனிலை (வினைச்சொல்) பொருந்தாமை:**

- எழுவாய்க்கு ஏற்ற பயனிலைச் சொல்லைப் பயன்படுத்தல் வேண்டும்.
- எழுவாய் உயர்திணையாக இருக்கும் போது பயனிலை அஃறிணைக்குரியதாய் இருத்தல் கூடாது.
- 'அங்கே வருவது யாரோ?' என்பது பிழைத்தொடராகும்
- 'அங்கே வருபவர் (அ) வருபவன் (அ) வருபவள் யாரோ' என்று அமைதல் வேண்டும்.
- 'சொன்னது நீதானா?' என்பது பிழைத்தொடர்.
- 'சொன்னவன் நீதானா?' என்பது நேர்.
- 'சொன்னது', 'வருவது' போன்ற வினைமுற்று மற்றும் வினையாலணையும் பெயர்ச் சொற்கள் அஃறிணைக்குரியன. அவை உயர்திணைக்குப் பொருந்தா.

**எழுவாய் பயனிலை (வினைச்சொல்) பொருந்தாமை:**

- இச்சொல்லிணைகள் ஒரே பொருளைத் தரினும், அவை பயன்படும் இடங்கள் வேறுபடும்.

- 'ஒரு' எனுஞ்சொல் உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொற்களுக்கு முன்பும் 'ஓர்' எனும் சொல் உயிரெழுத்துக்களில் தொடங்கும் சொற்களுக்கு முன்பும் வரல் வேண்டும்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| ஒரு இலை | ஓர் இலை |
| ஒரு அரசன் | ஓர் அரசன் |
| ஒரு ஏணி | ஓர் ஏணி |
| ஓர் பரிசு | ஒரு பரிசு |
| ஓர் குடும்பம் | ஒரு குடும்பம் |
| ஓர் வீடு | ஒரு வீடு |

**குறிப்பு:** செய்யுளில் இவ்விதிக்கு விலக்கு உண்டு

## இது, அது - இஃது, அஃது:

- இது, அது என்னும் சுட்டுச்சொற்கள் உயிர்மெய் எழுத்துக்களில் தொடங்கும் சொற்களுக்கு முன்னரும், இஃது, அஃது ஆகிய சுட்டுக்கள் உயிர் எழுத்துக்களில் முதலும் (தொடங்கும்) சொற்களுக்கு முன்பும் வரல் வேண்டும்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| இது என் வீடு | இஃது என் வீடு |
| அது இந்தியாவின் பெருமை | அஃது இந்தியாவின் பெருமை |
| இஃது நமது நாடு | இது நமது நாடு |
| அஃது நல்ல மருந்து | அது நல்ல மருந்து |
| ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது. | ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது. |
| ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள். | ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள். |
| அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது. | அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது. |
| அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை. | அது நகரத்திற்குச் செல்லும் சாலை. |
| அது ஒரு இனிய பாடல். | அது ஓர் இனிய பாடல். |

**பல, சில:**

- பல, சில என்னும் சொற்கள் அஃறிணைக்குரியன. அவற்றை உயர்திணைக்குப் பயன்படுத்துதல் பிழையாகும்.
- எடுத்துக்காட்டாக, ‘பல நண்பர்கள்’, ‘சில பெண்கள்’ போன்ற தொடர்கள் பிழையானவை என்று அறிக.
- அவற்றுக்குப் பதிலாக ‘நண்பர்கள் பலர்’ என்றும் ‘பெண்கள் சிலர்’ என்றும் எழுத வேண்டும்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| எனக்குப் பல நண்பர்கள் உள்ளனர் | எனக்கு நண்பர்கள் பலர் உள்ளனர் |
| விழாவுக்குச் சில பெண்கள் வந்திருந்தனர் | விழாவுக்கு பெண்கள் சிலர் வந்திருந்தனர் |
| நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட பல தலைவர்களுள் இவரும் ஒருவர் | நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்கள் பலருள் இவரும் ஒருவர் |

1. கண்ணகி சிலம்பு அணிந்தான்
   **கண்ணகி சிலம்பு அணிந்தாள்.**
2. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்
   **கோவலன் சிலம்பு விற்கப் போனான்**
3. அரசர்கள் நல்லாட்சி செய்தார்.
   **அரசர் நல்லாட்சி செய்தார்.**
4. பசு கன்றை ஈன்றன.
   **பசு கன்றை ஈன்றது.**
5. மேகங்கள் சூழ்ந்து கொண்டது.
   **மேகங்கள் சூழ்ந்து கொண்டன**
6. குழலி நடனம் ஆடியது.
   **குழலி நடனம் ஆடினாள்.**

**பிழை நீக்கி எழுதுக:**

1. மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
   **மதீனா சிறந்த இசை வல்லுநராக வேண்டும்.**
2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்
   **நல்ல தமிழில் எழுதுவோம்**
3. பவளவிழிதான் பரிசு உரியவள்
   **பவளவிழிதான் பரிசுக்கு உரியவள்**
4. துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.
   **துன்பத்தைப் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.**
5. குழலியும் பாடத் தெரியும்.
   **குழலிக்கு பாடத் தெரியும்.**
6. காற்று வீசின; மரங்கள் அசைந்தது.
   **காற்று வீசியது; மரங்கள் அசைந்தன.**
7. தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றான்.
   **தங்கப்பனும் செல்லப்பனும் பள்ளிக்குச் சென்றனர்.**
8. நாளைக்கு நான் ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன்.
   **நாளைக்கு நான் ஊருக்குப்போய்ச் சேர்வேன்.**
9. நேற்று பால் பொங்குகிறது.
   **நேற்று பால் பொங்கியது.**

**கீழ்கண்ட சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக:**

| சொற்றொடர் | சரி/தவறு | விளக்கம் |
|---|---|---|
| அவை யாவும் இருக்கின்றன | தவறு | அவை - பன்மை, யாவும் - ஒருமை |
| அவை யாவையும் இருக்கின்றன | சரி | அவை - பன்மை, யாவையும் - பன்மை |
| அவை யாவும் எடுங்கள் | தவறு | (இதற்கு அவை யாவும் எடு என்பதே சரி) அவை - பன்மை, யாவும் - ஒருமை, எடு - ஒருமை |
| அவை யாவையும் எடுங்கள் | தவறு | (இதற்கு அவை யாவையும் எடு என்பதே சரி) அவை - பன்மை, யாவையும் - பன்மை, எடு – ஒருமை |
| அவை யாவற்றையும் எடுங்கள் | சரி | அவை - பன்மை, யாவற்றையும் - பன்மை |

**பால்பகா அஃறிணைப் பெயர்கள்:**

- ஒன்றன் பாலா அல்லது பலவின் பாலா என்று பகுக்கப்படாத அஃறிணைப் பெயர்ச் சொற்கள், அத்திணையில் இருபால்களுக்கும் பொதுவாகிய பெயர்கள் ஆகும்.

  (**பகா** = பகுக்கப்படாத)

- ஒன்றன்பாலும் பலவின்பாலும் அஃறிணைக்கு உரியன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

- தனித்த ஒரு பொருளைச் சுட்டினால் அது **ஒன்றன்பால்** ஆகும்.

**எடுத்துக்காட்டு:**

**அது மாடு, இது பறவை, இது மரம்**

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைச் சுட்டினால் அது பலவின் பால் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

**அவை மாடு, இவை பறவை, இவை மரம்**

உயர்திணைப் பெயர்களைப் போல அஃறிணைப் பெயர்களுக்குப் பெரும்பாலும் அவற்றின் பால்களைச் சுட்டும் ஈற்று எழுத்துகள் இல்லை. அதனால், அவை ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாகவே வரும். அவற்றை, **பால்பகா அஃறிணைப் பெயர்கள்** என்பர்.

**எடுத்துக்காட்டாக:**

**'கல்வி கரை இல, கற்பவர் நாள்சில**

**மெல்ல நினைக்கின் பிணிபல'**

என்ற இச்செய்யுளில் கல்வி, நாள், பிணி என்னும் சொற்கள் ஒன்றன் பாலாக இருக்கின்றன. இவை முறையே இல, சில, பல என்னும் பன்மைப் பயனிலையைக் கொண்டு முடிந்துள்ளன. இவை வழுவோ (குற்றமோ) என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இவை வழுவல்ல.

அஃறிணைப் பெயர்களில் **அது**, பெரிய**து** என்பன போல இறுதி எழுத்து ஒன்றன் பாலைக் குறிக்கவும். **அவை**, பெரிய**வை** என்பன போல இறுதி எழுத்துப் பலவின்பாலைக் குறிக்கவும் அமைந்தது போல, கல்வி, நாள், பிணி என்னும் சொற்களில் அமையவில்லை. ஆகவே, இவற்றைப் பால்பகா அஃறிணைப் பெயர்கள் என்று கூறுவர்.

மாடு, காடு, மரம், செடி, கடல், மலை, பறவை போன்றன எல்லாம் பால்பகா அஃறிணைப் பெயர்களே ஆகும்.

மாடு, காடு, மரம், செடி, கடல், மலை, பறவை போன்ற இப்பெயர்கள் ஒருமையா, பன்மையா என்பதை முடிக்கும் சொல்லே (பயனிலையே) வரையறுக்கும்.

**எடுத்துக்காட்டாக:**

| | | |
|---|---|---|
| **மாடு வந்தது** | - என்பதில் மாடு | **- ஒருமை** |
| **மாடு வந்தன** | - என்பதில் மாடு | **- பன்மை** |
| **மாடு அது** | - என்பதில் மாடு | **- ஒருமை** |
| **மாடு அவை** | - என்பதில் மாடு | **- பன்மை** |

இங்கு முடிக்கும் வினையாலும், பெயராலும் மாடு தன் பாலை உணர்த்திற்று. முடிக்கும் சொல் இல்லையென்றால் 'கள்' என்ற விகுதி (இறுதி நிலை) சேர்த்துப் பன்மைப் பொருளைப் பெற வைப்பர்.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| **மாடுகள், பறவைகள்** | கள் விகுதியால் பன்மை ஆயின. |
| **பாம்புகள், மரங்கள்** | |

| | |
|---|---|
| **மாடு வந்தன, பறவை பறந்தன** | சேரும் வினையால் |
| **பாம்பு ஊர்ந்தன, மரம் வளர்ந்தன** | பன்மை ஆயின. |

(வந்தன, பறந்தன, ஊர்ந்தன, வளர்ந்தன என்பவை வினைச் சொற்கள் ஆகும்.)

| | |
|---|---|
| **மாடு அவை, பறவை அவை** | சேரும் பெயரால் |
| **பாம்பு அவை, மரம் அவை** | பன்மை ஆயின. |

இத்தகைய வினையும் பெயரும் பயனிலையாக அல்லாமல், அஃறிணைப் பெயருக்கு முன்னும் வந்து ஒருமை பன்மையினை உணர்த்தும்.

| | |
|---|---|
| **வந்தன மாடு,**<br>**பறந்தன பறவை** | என, வினைச்சொல் அஃறிணைப் பெயருக்கு முன்வந்து பன்மையைக் காட்டின. |
| **ஊர்ந்தன பாம்பு,**<br>**வளர்ந்தன மரம்** | |

| | |
|---|---|
| **அவை மாடு,**<br>**அவை பறவை** | இங்கு, பெயர்ச்சொல் அஃறிணைப் பெயருக்கு முன்வந்து பன்மையைக் காட்டின. |
| **அவை பாம்பு,**<br>**அவை மரம்** | |

இவற்றைக் கொண்டு,

| | |
|---|---|
| ஒன்றன்பால் விகுதி | - **து** |
| பலவின்பால் விகுதி | - **அ, வை, கள்** |

என அறியலாம்.

உலக வழக்கில் சில சொற்களும் ஒன்றன் பால் விகுதியையோ (து - என்பது ஒன்றன்பால் விகுதி), பலவின்பால் விகுதியையோ (அ, வை, கள்) பெறாமல் இரண்டிற்கும் பொதுவாய் நின்று ஒருமை அடையாலும், பன்மை அடையாலும் ஒன்றன் பாலினையோ, பலவின் பாலினையோ உணர்த்தி நிற்கும்.

**எடுத்துக்காட்டு:**

| | | |
|---|---|---|
| 1) **ஒரு காய் என்ன விலை?** | - | ஒருமை (ஒரு என்னும் அடை ஒருமையைச் சுட்டியது) |
| 2) **நூறு காய் என்ன விலை?** | - | பன்மை (நூறு என்னும் அடை பன்மையைச் சுட்டியது) |
| 3) **ஒருமொழி பயின்றவன்** | - | ஒருமை (ஒரு என்னும் அடை ஒருமையைச் சுட்டியது.) |
| 4) **பல மொழி பயின்றவன்** | - | பன்மை (பல என்னும் அடை பன்மையைச் சுட்டியது.) |

**மேலும் சில எடுத்துக்காட்டுகள்:**

**ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்**

**நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத் தீரும்**

**பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்**

இப்பழமொழிகளில் ஒருமை, பன்மை ஆகியன அடையால் உணர்த்தப்படுகின்றன. ஆயிரம், ஒரு, நூறு, ஆறு, பல என்ற அடைகள் முறையே **காக்கை, கல், நாள், மரம்** என்பனவற்றின் ஒருமை, பன்மையை உணர்த்தி நின்றன.

செய்யுள் வழக்கிலும், ஒருமை-பன்மை விகுதிகளைப் பெறாமல் வினை முற்றுகளே ஒருமை பன்மையை உணர்த்துதல் உண்டு.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| **வாள் ஒடிந்தது** | - ஒருமை |
| **வாள் ஒடிந்தன** | - பன்மை |
| **சொல் தளர்ந்தது** | - ஒருமை |
| **சொல் தளர்ந்தன** | - பன்மை |
| **புலி பாய்ந்தது** | - ஒருமை |
| **புலி பாய்ந்தன** | - பன்மை |

வாள், சொல், புலி என்னும் அஃறிணைப் பெயர்கள், தம் பின்வரும் வினைமுற்றுச் சொற்களால் பால்காட்டி நின்றன. (ஒடிந்தது, ஒடிந்தன, தளர்ந்தது, தளர்ந்தன முதலியவை வினைமுற்றுகள் ஆகும்)

**பால் பகா அஃறிணைப் பெயர்கள் பால் பொதுமைய**

**(நன்னூல் 281)**

இன்ன பால் என்று பிரித்துச் சொல்ல முடியாத பெயர்ச் சொற்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

**குறிப்பு: ஒன்றன்பாலைக் காட்டும் 'து' விகுதியையும், பலவின் பாலைக் காட்டும் அ, வை, கள் என்னும் விகுதிகளுள் ஒன்றையும் பெறாத அஃறிணைப் பெயர்கள் பால்பகா அஃறிணைப் பெயர்கள் ஆகும். இவை ஒன்றன் பாலுக்கும் பலவின்பாலுக்கும் பொதுவாய் வரும்.**

**அறிவோம் தெளிவோம்**

| **வினைமுற்று** | **எழுவாய்** | **திணை** | **பால்** | **எண்** | **இடம்** | **காலம்** |
|---|---|---|---|---|---|---|
| விளையாடுவான் | அவன் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை | எதிர்காலம் |
| பாடுகின்றேன் | நான் | உயர்திணை | - | ஒருமை | தன்மை | நிகழ்காலம் |
| பேசினார்கள் | அவர்கள் | உயர்திணை | பலர்பால் | பன்மை | படர்க்கை | இறந்தகாலம் |
| வந்தது | அது | அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை | இறந்தகாலம் |
| கொடுப்பாய் | நீ | உயர்திணை | - | ஒருமை | முன்னிலை | எதிர்காலம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொடுப்பாய் | அவை | அஃறிணை | பலவின்பால் | பன்மை | படர்க்கை | நிகழ்காலம் |
| செய்வீர்கள் | நீங்கள் | உயர்திணை | பலர்பால் | பன்மை | முன்னிலை | எதிர்காலம் |
| Gave | - | - | - | - | - | Past tense |
| Speaks | - | - | - | - | - | Present tense |

| சொற்றொடர் | எண் | இடம் |
|---|---|---|
| நான் வந்தேன் | ஒருமை | தன்மை |
| நாம் வந்தோம் | பன்மை | |
| நீ வந்தாய் | ஒருமை | முன்னிலை |
| நீர் வந்தீர் | பன்மை | |
| நீங்கள் வந்தீர்கள் | மரியாதைப் பன்மை | |

| சொற்றொடர் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| அவன் வந்தான் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை |
| அவள் வந்தாள் | | பெண்பால் | ஒருமை | |
| அவர் வந்தார் | | பலர்பால் | பன்மை | |
| அது வந்தது | அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை |
| அவை வந்தன | | பலவின்பால் | பன்மை | |

## வேர்ச்சொல்

**சொல்:**

- பதம், மொழி, கிளவி என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள்.
- பதம் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

**பகாப்பதம்:**

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும்.

பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நான்கு வகைப்படும்.

- பெயர்ப்பகாப்பதம் – மரம், நாய், நீர்
- வினைப்பகாப்பதம் – உண், காண், எடு
- இடைப்பகாப்பதம் – தில், மன், பிற
- உரிப்பகாப்பதம் – சால, நனி, கடி, உறு

(இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும்)

**பகாப்பதம்:**

பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரிக்கப்படும் பதம் பகுபதம் எனப்படும்.

(பகுபதம் – பிரிக்கவியலும் பதம்). பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுதி என இருவகைப்படும்

**பெயர்ப்பகுபதம்**: பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம் எனப்படும்.

| | |
|---|---|
| 1. பொன்னன் | பொன் + ன் + அன் (ன் இரட்டித்தது)<br>பொன் என்னும் பொருட்பெயர் அடியாக பிறந்தது. |
| 2. ஊரன் | ஊர் + அன்ஊர் என்னும் இடப்பெயர் அடியாகப் பிறந்தது. |
| 3. ஆதிரையான் | ஆதிரை + ய் +ஆன் (ய் – உடம்படுமெய்)<br>ஆதிரை என்னும் காலப்பெயர் அடியாகப் பிறந்தது. |
| 4. கண்ணன் | கண் + ண் + ன் (ண் இரடித்தது)<br>கண் என்னும் சினைப்பெயர் அடியாகப் பிறந்தது. |
| 5. கரியன் | கருமை + அன்<br>கருமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்தது. |
| 6. நடிகன் | நடி + க் + அன் (க் – பெயரிடைநிலை)<br>நடித்தல் என்னும் தொழில்பெயர் அடியாகப் பிறந்தது. |

**வினைப்பகுபதம்:**

- பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று வினைப்பகுபதம் எனப்படும்
- செய்தான் = செய் + த் +ஆன்
- செய்தான் என்னும் வினைமுற்றில் செய் என்னும் பகுதி தொழிலையும், 'த்' என்னும் இடைநிலை இறந்த காலத்தையும் ஆன் என்னும் விகுதி ஆண்பாலையும் குறிக்கின்றன.

**பகுபத உறுப்புகள்:**

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.

**பகுதி:**

சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.

- படித்தான் – படி என்பது பகுதி
- ஓடினான்- ஓடு என்பது பகுதி
- வந்தான் – வா என்பது பகுதி

**விகுதி:**

சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும்.

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |

| | | |
|---|---|---|
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு |

**இடைநிலை:**

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்.

| | | |
|---|---|---|
| வென்றார் | ற்-இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

**சந்தி:**

- பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் | சந்தி ய், வ் |

**சாரியை:**

- பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

**விகாரம்:**

- பகுதி விகுதி இடைநிலை ஆகியவை புணரும்போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம், விகாரம் எனப்படும்.

- தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்.

**வேர்ச்சொல்:**

- வேர்ச்சொல் என்பது மேலும் பிரிக்க இயலாத பிற சொற்கள் உருவாக காரணமான அடிப்படையான சொல்.
- அதாவது, ஒரு சொல்லின் மூலச்சொல் தான் வேர்ச்சொல். வேர்ச்சொல் என்பது கட்டளைச் சொல்லாகவே அமையும்.

| சொல் | வேர்ச்சொல் |
|---|---|
| அகழந்தான் | அகழ் |
| அகன்று | அகல் |
| அடைந்தோம் | அடை |
| அணிந்தான் | அணி |
| அரிந்து | அரி |
| அரியது | அருமை |
| அறிந்தான் | அறி |
| அடித்தாள் | அடி |
| அலறள் | அலறு |
| அருளினர் | அருள் |
| அறுந்தது | அறு |
| அறுவடை | அறு |
| அவிந்தது | அவிழ் |
| அறியாது | அறி |
| ஆண்டாள் | ஆள் |
| ஆடினாள் | ஆடு |
| ஆழந்தார் | ஆழ் |
| இனிது | இனிமை |
| இனிப்பு | இனிமை |
| இயம்பியது | இயம்பு |
| ஈந்தது | ஈ |
| ஈன்றாள் | ஈன்று |
| ஈட்டினான் | ஈட்டு |
| உண்பார் | உண் |
| உழுதான் | உழு |
| உணவு | உண் |
| உறங்கினான் | உறங்கு |

| | |
|---|---|
| ஊர்ந்து | ஊர் |
| உருக்கும் | உருக்கு |
| உழுவித்தான் | உழுவி |
| உள்ளம் | உள் |
| உள்ளீடு | உள் |
| எஞ்சிய | எஞ்சு |
| எடுக்கும் | எடு |
| எண்ணிய | எண் |
| எய்தான் | எய் |
| எடுத்தான் | எடு |
| எழுந்தான் | எழு |
| எழுதினான் | எழுது |
| ஏத்துதல் | ஏத்து |
| ஒட்டுதல் | ஒட்டு |
| ஒழிந்தான் | ஒழி |
| ஒட்டுவிப்பு | ஒட்டுவி |
| ஒட்டியது | ஒட்டு |
| ஓடாது | ஓடு |
| ஓடினான் | ஓடு |
| ஓதியவர் | ஓதி |
| கற்க | கல் |
| கடையல் | கடை |
| கற்றேன் | கல் |
| காட்சியில் | காண் |
| காட்டியது | காட்டு |
| கண்டு, கண்டனன் | காண் |
| கற்றான் | கல் |
| கடித்தான் | கடி |
| காணாமை | காண் |
| காட்டுவான் | காட்டு |
| காத்தான் | கா |
| காத்தவன் | கா |
| காண்பார் | காண் |
| கூவல் | கூ |
| கேட்க, கேட்டல் | கேள் |

| | |
|---|---|
| கொண்டான் | கொள் |
| கொணர்ந்தான் | கொணர் |
| கொன்றதை | கொல் |
| கொடாமை | கொள் |
| குரைத்தது | குரை |
| குடித்தான் | குடி |
| குளித்தான் | குளி |
| கூறினான் | கூறு |
| கொள்ளுதல் | கொள் |
| கொன்றான் | கொல் |
| கொய்தான் | கொய் |
| சாய்ந்தது | சாய் |
| சாற்றினான் | சாற்று |
| சிரிப்பு | சிரி |
| சரிந்தான் | சரி |
| சிரித்தான் | சிரி |
| சிதறிய | சிதறு |
| சீரிய | சீர்மை |
| சீத்தாள் | சீ |
| சுட்டது | சுடு |
| சுருட்டினான் | சுருட்டு |
| சூடினான் | சூடு |
| சென்றாள் | செல் |
| செல்வான் | செல் |
| சேர்ந்தான் | சேர் |
| சொன்னான் | சொல் |
| செத்தவன் | சா |
| செய்கிறாள் | செய் |
| சென்றவன் | செல் |
| சோர்வு | சோர் |
| தந்தான் | தா |
| தட்டுவான் | தட்டு |
| தாண்டினான் | தாண்டு |
| தட்பம் | தண்மை |
| தாவியது | தாவு |

| | |
|---|---|
| தாழ்வு | தாழ் |
| திறந்தது | திற |
| திருத்தினான் | திருத்து |
| தீயந்தது | தீய் |
| தீர்ந்த | தீர் |
| துறவு | துற |
| தூங்கின | தூங்கு |
| துயின்றான் | துயில் |
| துறந்தான் | துற |
| தூங்கினார் | தூங்கு |
| தெரிந்தனர் | தெரிந்து |
| தெளிந்தான் | தெளி |
| தேடினான் | தேடு |
| தேற்றினான் | தேற்று |
| தேடல் | தேடு |
| தொழாது | தொழு |
| தோல்வி | தோல் |
| தைத்தான் | தை |
| தொடுவாள் | தொடு |
| தொங்கினான் | தொங்கு |
| தொடர்ந்தாள் | தொடர் |
| தோண்டினான் | தோண்டு |
| தோன்றினான் | தோன்று |
| தோற்றான் | தோல்வி |
| நக்கார் | நகு |
| நட்டான் | நடு |
| நடித்தான் | நடி |
| நாடகம் | நடி |
| நாட்டும் | நாட்டு |
| நின்றார் | நில் |
| நின்றோன் | நில் |
| நீங்கி | நீங்கு |
| நீண்ட | நீள் |
| நுகர்ந்தது | நுகர் |
| நெட்டினான் | நெட்டு |

| | |
|---|---|
| நேர்ந்தது | நேர் |
| நோக்கம் | நோக்கு |
| நோக்கினான் | நோக்கு |
| நாடிய | நாடு |
| நீங்கி | நீங்கு |
| பட்டான் | படு |
| படித்தல் | படி |
| படிபித்தான் | படிப்பி |
| பருகுவான் | பருகு |
| பழுத்தது | பழு |
| பாய்ச்சல் | பாய் |
| பார்த்தல் | பார் |
| படுத்தான் | படு |
| பறித்தான் | பறி |
| பற்றினான் | பற்று |
| பாழ்த்த | பாழ் |
| பிணங்கினான் | பிணங்கு |
| பிரித்தார் | பிரி |
| புக்கம் | புகு |
| புகழ்ந்தான் | புகழ் |
| பூண்டான் | பூண் |
| பூசுதல் | பூசு |
| பூப்பு | பூ |
| பொறாமை | பொறு |
| பெற்றாள் | பெறு |
| பொருந்தினான் | பொருத்து |
| பொருந்தின | பொருந்து |
| போனான் | போ |

| **வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக** | | |
|---|---|---|
| நடக்கிறது | - | நட |
| போனான் | - | போ |
| சென்றனர் | - | செல் |
| போனான் | - | போ |

| | | |
|---|---|---|
| உறங்கினாள் | - | உறங்கு |
| வாழிய | - | வாழ் |
| பேசினாள் | - | பேசு |
| வருக | - | வா |
| தருகின்றனர் | - | தா |
| பயின்றாள் | - | பயில் |
| கேட்டார் | - | கேள் |

ஒரு வேர்ச்சொல்லிலிருந்து, எண்ணற்ற சொல் டிவங்களை/சொல்லாக்கங்களை உருவாக்க இயலும்.

**எ.கா. படி** என்னும் வேர்ச்சொல்லிலிருந்து…

| | | |
|---|---|---|
| படித்த | படித்து | படித்தல் |
| படிக்கிறேன் | படித்தேன் | படிப்பேன் |
| படிக்கிறோம் | படித்தோம் | படிப்போம் |
| படிக்கிறாய் | படித்தாய் | படிப்பாய் |

மேலும், பல சொல் வடிவங்களைக் காண இந்த வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

## வேர்ச்சொல்லைக் கொடுத்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயரை உருவாக்கல்

**வினைச்சொல்:**

- இராமன் வந்தான், கண்ணன் நடந்தான்.
- இத்தொடர்களில் இராமன், கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள், அவையே எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான், நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும், நடப்பதும் ஆகிய செயல்களை குறிப்பதால் இவை வினைச்சொற்கள், இவையோ பயனிலைகளாகவும் (முடிக்கும் சொற்களாகவும்) உள்ளன. இவ்வாறு எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

**வினைமுற்று:**

- மலர்விழி எழுதினாள், கண்ணன் பாடுகிறான், மாடு மேயும்.
- இத்தொடர்களில் எழுதினாள், பாடுகிறான், மேயும் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர்.
- வினைமுற்று ஐந்து பால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.
- வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

**தெரிநிலை வினைமுற்று:**

- ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

(எ.கா.) மாணவி கட்டுரை எழுதினாள்.

- செய்பவர் – மாணவி
- காலம் – இறந்தகாலம்
- கருவி – தாளும் எழுதுகோலும்
- செய்பொருள் – கட்டுரை
- நிலம் – பள்ளி
- செயல் – எழுதுதல்

**குறிப்பு வினைமுற்று:**

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.
- பொருள் – அவன் பொன்னன் – பொன்னை உடையவன்
- சினை – அவன் கண்ணன் – கண்களை உடையவன்
- இடம் – அவன் தென்னாட்டார் – தொன்னாட்டில் வாழ்பவன்
- பண்பு (குணம்) – அவன் கரியன் – கருமை நிறத்தவன்
- காலம் – சித்திரையன் – சித்திரையின் பிறந்தவன்
- தொழில் – அவன் எழுத்தன் – எழுதுபவன்

**பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்**

**வினைமுதலல மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே – நன்னூல் 321**

- அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த ‘பொன்னன்’ என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னை உடையவனாய் இருந்தான். இருக்கிறான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

**எச்சம்:**

- கயல்விழி படித்தாள், கோதை சென்றாள்.
- இத்தொடர்களில் படித்தாள், சென்றாள் என்பன வினைமுற்றுகள்.
- இவ் வினைமுற்றுகள் சில இடங்களில் ‘ஆள்’ என்ற விகுதி குறைந்து படித்த, சென்று எனவும் வரும். இச்சொற்கள் பொருளில் முற்றும் பெறாத முழுமையடையாத வினைச்சொற்கள். ஆதலால் எச்சம் எனப்படும். அல்லது வினைமுற்றின் (ஆள்) விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும்.

**பெயரெச்சம்:**

படித்த என்னும் சொல் மாணவன், மாணவி, பள்ளி, புத்தகம், ஆண்டு போன்ற பெயர்ச்சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

**(எ.கா.)**

படித்த மாணவன், படித்த பள்ளி.

இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும். பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.

**(எ.கா.)**

- பாடிய பாடல் – இறந்தகாலப் பெயரெச்சம்
- பாடுகின்ற பாடல் – நிகழ்காலப் பெயரெச்சம்
- பாடும் பாடல் – எதிர்காலப் பெயரெச்சம்

பெயரெச்சங்கள் தெரிநிலை பெயரெச்சங்கள், குறிப்புப் பெயரெச்சங்கள் என இருவகைப்படும்.

**தெரிநிலை பெயரெச்சங்கள்:**

- வந்த பையனைப் பாரத்து கண்ணன் நின்றான்.
- இத்தொடரில் வந்து என்பது பையன் என்னும் பெயரைக் கொண்டு முடிவதால் பெயரச்சம் எனப்படும். செய்த செய்கின்ற செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரச்ச வாய்ப்பாடுகள், இவை முக்காலத்தையும் செயலையும் வெளிப்டையாக காட்டிச் செய்பவன் முதலான ஆறம் எஞ்சி நிற்கும். இவன் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

**எ.கா.**

- செய்பவன் – இளங்கோவன்
- கருவி – கலம்
- நிலம் – வீடு
- செயல் – உண்ணுதல்
- காலம் – இறந்த காலம்
- செய்பொருள் – சோறு

உண்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறு பொருத்திக் காணலாம்.

உடன்பாடு – எதிர் மறை

**எ.கா.**

- உண்ட இளங்கோவன் – உண்ணாத இளங்கோவன்
- எழுதிய கடிதம் – இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

**குறிப்புப் பெயரெச்சங்கள்:**

- காலத்தையோ, செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல் கொண்டு முடியும் எச்சம் குறிப்பு பெயரெச்சம் எனப்படும்.

**எ.கா.**

- நல்ல பையன்
- இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ, சொல்லையோ உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்துள்ளது. இது காலத்தைக் (இன்று நல்ல பையன், நேற்று நல்ல பையன், நாளை நல்ல பையன்) குறிப்பால் உணர்த்தும்.

**வினையெச்சம்:**

- முற்றுபெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினை முற்றைக் கொண்டுமுடிந்தால் அது வினையெச்சம் எனப்படும்

**(எ.கா.)**

- படித்து வந்தான்
- பாடக்கேட்டான்
- ஓடிச்சென்றான்
- போய்ப் பார்த்தான்

இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் காலவகையால் மூன்று வகைப்படும்.

- இறந்தகால வினையெச்சம் – படித்து வந்தான், ஓடிச் சென்றான்
- நிகழ்கால வினையெச்சம் – படித்து வருகின்றான், ஓடிச் செல்கின்றான்
- எதிர்கால வினையெச்சம்- படித்து வருவான், ஓடிச் செல்வான்

இது தெரிநிலை வினையெச்சங்கள், குறிப்பு வினையெச்சங்கள் என இரு வகைப்படும்.

**தெரிநிலை வினையெச்சங்கள்:**

- **எழுதி வந்தான் –** இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

**குறிப்பு வினையெச்சங்கள்:**

- **மெல்ல வந்தான் –** இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

**முற்றெச்சம்:**

- வள்ளி படித்தனள்.
- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்றுப் பொருளைத் தருகிறது.
- வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.
- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

**தொழிற்பெயர்:**

- வேர்ச்சொல்லோடு 'தல்' விகுதி சேர்ந்தால் அது தொழிற்பெயர். அல், வை, வு, கை ஆகிய விகுதிகள் சேர்ந்தாலும் அது தொழிற்பெயராகும்.
- தல் – கூறு + அல் = கூறல்
- வை – பார் + வை = பார்வை
- வு – வாழ் + வு = வாழ்வு
- கை – படு + கை = படுக்கை
- தல் = கல் + தல் = கற்றல்

| வேர்ச்சொல் | வினைமுற்று | வினை யெச்சம் | வினையாலணையும் பெயர் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|
| கொடு | கொடுத்தான் | கொடுத்து | கொடுத்தவன் | கொடுத்தல் |
| படு | படுத்தார | படுத்து | படுத்தவரை | படுத்தல் |
| நடி | நடித்தது | நடித்து | நடித்தவனை | நடித்தல் |
| பெறு | பெற்றான் | பெற்று | பெற்றோரை | பெறல் |
| உண் | உண்டான் | உண்டு | உண்டரை | உண்டல் |
| செல் | சென்றார் | சென்று | சென்றவரை/சென்றவன் | செல்லல்/செல்லுதல் |
| தொடு | தொட்டது | தொட்டு | தொட்டவனை | தொடல் |
| வீழ் | வீழ்ந்தான் | வீழந்து | வீீந்தவணை | வீழ்ச்சி |

| | | | | |
|---|---|---|---|---|
| காண் | கண்டான் | கண்டு | கண்டாரை | காணல் |
| தேர் | தேர்ந்தார் | தேர்ந்து | தேர்ந்தவரை | தேர்தல் |
| தின் | தின்றது | தின்று | தின்றாரை | தின்னுதல் |
| குடி | குடித்தான் | குடித்து | குடித்தாரை | குடித்தல் |
| அறு | அறுத்தான் | அறுத்து | அறத்தவனை | அறுத்தல் |
| உடை | உடைத்தார் | உடைத்து | உடைத்தவரை | உடைப்பு |
| பறி | பறித்தான் | பறித்து | பறித்தானை | பறித்தல் |
| ஒடி | ஒடித்தாள் | ஒடித்து | ஒடித்தவனை | ஒடித்தல் |
| ஓடு | ஓடியது | ஓடு | ஓடுயதை | ஓட்டம் |
| வெட்டு | வெட்டினான் | வெட்டி | வெட்டியவனை | வெட்டல் |
| பூசு | பூசினார் | பூசி | பூசியவரை | பூசுதல் |
| அடி | அடித்தார் | அடித்து | அடிப்பாரை | அடித்தல் |
| இயற்று | இயற்றுனர் | இயற்றி | இயற்றியவணை | இயற்றுதல் |
| எழுது | எழுதினார் | எழுதி | எழுதியவனை | எழுதுதல் |
| பற | பறந்தது | பறந்து | பறந்ததை | பறத்தல் |
| கிழி | கிழித்தது | கிழித்து | கிழித்ததை | கிழித்தல் |
| வரை | வரைந்தான் | வரைந்த | வரைந்ததை | வரைதல் |
| எய் | எய்தான் | எய்து | எய்தவனை | எய்தல் |
| குத்து | குத்தினார் | குத்தி | குத்தியவனை | குத்துதல் |
| பாய்ச்சு | பாய்ச்சினார் | பாய்ச்சி | பாய்ச்சியவனை | பாய்ச்சுதல் |
| பிள | பிளந்தான் | பிளந்து | பிளந்தானை | பிளத்தை |
| கொய் | கொய்தது | கொய்து | கொய்தவனை | கொய்தல் |
| அரி | அரிந்தார் | அரிந்து | அரிந்தவரை | அரிதல் |

## அயற்சொல் - தமிழ்ச்சொல்

**பிறமொழிச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல்:**

| பிறமொழிச் சொல் | தமிழ் | பிறமொழிச் சொல் | தமிழ் |
|---|---|---|---|
| அங்கத்தினர் | உறுப்பினர் | உபயோகம் | பயன் |
| அதிகாரி | அலுவலர் | கிராமம் | சிற்றூர் |
| அதிபர் | தலைவர் | குமாரன் | மகன் |
| அந்நியர் | அயலார் | சாவி | திறவுகோல் |
| அபிஷேகம் | நீராட்டு/திருமுழுக்கு | நஷ்டம் | இழப்பு |
| ஆபூர்வம் | புதுமை | நாஷ்டா | சிற்றுண்டி |
| அலங்காரம் | ஒப்பனை | பாக்கி | நிலுவை |
| அனுமதி | இசைவு | கஜானா | கருவூலம் |
| ஆபத்து | இடர் | விஞ்ஞானம் | அறிவியல் |
| ஆராதனை | வழிபாடு | ஜனங்கள் | மக்கள் |
| ஆசீர்வாதம் | வாழ்த்து | நிபுணர் | வல்லுநர் |
| இலஞ்சம் | கையூட்டு | ஆஸ்பிட்டல் | மருத்துவமனை |
| இலாபம் | வருவாய் | டீஸ்டால் | தேநீர்கடை |
| உத்தரவு | ஆணை | பஸ் ஸ்டாண்ட் | பேருந்து நிலையம் |
| உத்தியோகம் | பணி | போஸ்ட் ஆபிஸ் | அஞ்சலகம் |
| சமஸ்தானம் | அரசு | பிரதானம் | முதன்மை |
| முக்கியஸ்தர் | முதன்மையானவர் | விஞ்ஞானம் | அறிவியல் |
| சினிமா தியேட்டர் | திரையரங்கம் | பஸ் | பேருந்து |
| பிளசர் கார் | மகிழுந்து | ரயில் | தொடர்வண்டி |
| ஏரோப்பிளேன் | வானூர்தி | கஜானா | கருவூலம் |
| இலாகா | துறை | உத்தியோகஸ்தர் | அலுவலர் |
| அப்பாயிண்ட் | பணி அமர்த்தல் | டிபார்ட்மெண்டல் ஸ்டோர் | பல்பொருள் அங்காடி |
| ஆதவன் | ஞாயிறு | பஜனை | கூட்டுப்பாடல் |
| ஆரம்பம் | தொடக்கம் | பஜார் | கடைத்தெரு |
| ஆஸ்தி | சொத்து | பந்தயம் | பணயம் |
| இம்சை | துன்பம் | ருசி | சுவை |
| இருதயம் | நெஞ்சகம் | ரத்து | நீக்கம் |

| | | | |
|---|---|---|---|
| ஈசன் | இறைவன் | வாலிபர் | இளைஞர் |
| உபசரித்தல் | விருந்தோம்பல் | மாமூல் | வழக்கம் |
| உபயம் | திருப்பணியாளர் கொடை | பண்டிகை | திருவிழா |
| உஷார் | விழிப்பு | கேணி | கிணறு |
| எதார்த்தம் | இயல்பு | தயார் | ஏற்பாடு |
| ஐதிகம் | உலக வழக்கு | வக்கீல் | வழக்குரைஞர் |
| கிரீடம் | மணிமுடி | வியாபாரம் | வாணிகம் |
| குபேரன் | பெருஞ்செல்வன் | சுதந்திரம் | விடுதலை |
| அனுபவம் | பட்டறிவு | சாவி | திறவுகோல் |
| இலட்சணம் | அழகு | யாத்திரை | பயணம் |
| உற்சவம் | விழா | வாகனம் | ஊர்தி |
| காரியம் | செயல் | வருடம் | ஆண்டு |
| கிராமம் | சிற்றூர் | வாசனை | மணம் |
| கெட்டியாக | உறுதியாக | அரி | திருமால் |
| கும்பாபிஷேகம் | குடமுழுக்கு | விவாகம் | திருமணம் |
| கேப்பை | கேழ்வரகு | பாரங்கள் | விண்ணப்பங்கள் |
| சக்தி | ஆற்றல் | மாதம் | திங்கள் |
| நிரந்தரமானது | நிலையானது | ஏராளம் | மிகுதி |
| ஆயுள் | வாழ்நாள் | சிபாரிசு | பரிந்துரை |
| கர்வம் | செருக்கு | சன்னல் | பலகணி |
| தகவல் | செய்தி | தினம் | நாள் |
| அலங்காரம் | ஒப்பனை | உற்சாகம் | ஊக்கம் |
| கோபம் | சினம் | விரதம் | நோன்பு |
| பதில் | விடை | சங்கம் | மன்றம் |
| சிகிச்சை | மருத்துவம் | சித்திரம் | ஓவியம் |
| தினசரி | நாள்தோறும் | தீபம் | விளக்கு |
| நஷ்டம் | இழப்பு | புத்தி | அறிவு |
| மைதானம் | திடல் | சர்க்கார் | அரசு |
| காகிதம் | தாள் | புகார் | முறையீடு |

**பிறமொழிச்சொற்களைத் தமிழ்ப்படுத்துக:**

| **பிறமொழிச்சொற்கள்** | **தமிழ்ச்சொற்கள்** |
|---|---|
| வாடகை | குடிக்கூலி |
| மாதம் | திங்கள் |

| | |
|---|---|
| போலீஸ் | காவலர் |
| நிச்சயம் | உறுதி |
| உத்திரவாதம் | பொறுப்பு |
| சந்தோஷம் | மகிழ்ச்சி |
| சம்பளம் | ஊதியம் |
| ஞாபகம் | நினைவு |
| வருடம் | ஆண்டு |
| தேசம் | நாடு |
| வித்தியாசம் | வேறுபாடு |
| உற்சாகம் | ஊக்கம் |
| விசா | நுழைவாணை, நுழைவிசைவு |
| பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு |
| கம்பெனி | குழுமம் |
| பத்திரிகை | செய்தித்தாள் |
| கோரிக்கை | வேண்டுகோள் |
| யுகம் | காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று |
| ராச்சியம் | ஆட்சி |
| சரித்திரம் | வரலாறு |
| முக்கியத்துவம் | இன்றியமையாமை |
| சொந்தம் | தனக்குரியது, உரியது |
| சமீபம் | அண்மை |
| தருணம் | தக்க சமயம் |

**பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள்:**

| | |
|---|---|
| நிருபர் | செய்தியாளர் |
| வாசகர் | படிப்பவர் |
| பத்திரிகை | இதழ் |
| ஆச்சர்யம் | வியப்பு |
| விஞ்ஞானம் | அறிவியல் |
| சித்திரம் | ஓவியம் |
| சந்ததி | வழித்தோன்றல் |
| உத்தேசம் | கருதுகை |
| அபிவிருத்தி | மிகுவளர்ச்சி |
| தேசம் | நாடு |

| | |
|---|---|
| விமர்சனம் | திறனாய்வு |
| சுதந்திரம் | விடுதலை |
| பரிவாரங்கள் | உறவினர்கள் |
| வசூல் | தண்டல் |
| ஜாமின் | பிணை |
| பிரசுரித்தல் | வெளியிடுதல் |
| தீர்மானம் | முடிவு |

**பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக:**

நிருபர்கள் தங்கள் பகுதிகளில் தினந்தோறும் நடைபெறும் சம்பவங்களைச் சேகரித்துத் தங்களது பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பர். சம்பவங்களோடு சித்திரங்கள், விஞ்ஞான செய்திகள், சர்க்கார் திட்டங்கள் போன்றவைகளும் பத்திரிகையில் இடம்பெறும். எடிட்டர் அச்செய்திகளை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் எந்த நியூசை எந்தப் பேஜில் பிரசுரிப்பது என்று தீர்மானிப்பார். பிறகு அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகளை வினியோகஸ்தர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு சென்று விற்பனையாளர்கள் மூலம் வாசகர்களுக்குக் கொண்டு செல்வர்.

**ஆங்கிலம், 146 மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியுள்ளதென ஒரு கணக்கெடுப்பின்படி அறியமுடிகிறது.** தமிழிலிருந்து ஆங்கிலம் பெற்றுக்கொண்ட சில சொற்கள் பின்வருமாறு:

| தமிழ் | English | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| அணைக்கட்டு | Anicut | தேக்கு | Teak |
| காசு | Cash | ஓலை | Olla |
| கட்டுமரம் | Catamaram | மிளகுத் தண்ணீர் | Mulligatanney |
| கறி | Curry | கூலி | Coolie |
| மாங்காய் | Mango | பச்சிலை | Patchouli |
| தோப்பு | Tope | பலகணி | Balcony |
| பப்படம் | Poppadam | சந்தனம் | Sandal |

**பிறமொழிச் சொற்களையும் பேச்சுத்தமிழையும் நீக்கிச் சரியாக எழுதுக:**

1. **டுமாரோ ஈவினிங் என் ஸிஸ்டர் ஊருக்குப் போவா.**

   **விடை:** நாளை மாலை என் தங்கை ஊருக்குச் செல்வாள்.

2. **ஆட்டோவில் பைவ் பாசஞ்சர்ஸ் இருக்காங்க.**

   **விடை:** மூன்று சக்கர வாகனத்தில் ஐந்து பயணிகள் உள்ளனர்.

3. **என் வீட்டில் வாசிங் மிஷின் ரிப்பேராக இருக்கு.**

   **விடை:** என் வீட்டில் துணி துவைக்கும் இயந்திரம் பழுதாக உள்ளது.

**பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக:**

- கம்ப்யூட்டர் துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். (கணினி)
- காலிங்பெல்லை அழுத்தினான் கணியன். (அழைப்பு மணி)
- மனிதர்கள் தங்கள் வேலைகளை எளிதாக்க மிஷின் களைக் கண்டுபிடித்தனர். (எந்திரம்)
- இன்று பல்வேறு துறைகளிலும் ரோபோ பயன்பாட்டிற்கு வந்துள்ளது (அடிமை)

**பிறமொழிச் சொல்லுக்குத் தமிழ்ச்சொல் எழுதுக:**

1. **நான் தபால் நிலையத்திற்குச் சென்றேன்.**

   விடை: அஞ்சலகம்

2. **ஓய்வு நேரத்தில் ரேடியோ கேட்பேன்.**

   விடை: வானொலி

3. **பஞ்சாயத்துக் கூட்டம் நாளை கூடுகிறது.**

   விடை: கிராமசபை

4. **ஹோட்டலில் உணவு தயாராக உள்ளது.**

   விடை: உணவகம்

5. **அலமாரியில் துணிகள் உள்ளன.**

   விடை: அடுக்கறை

**பின்வரும் பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை எழுதுக:**

நாக்குதான் ஐம்புலன்களிலேயே ரொம்ப வீக்கு! அதற்கு நான்கு ஆதார ருசிகள்தாம் தெரியும். எலுமிச்சையின் புளிப்பு, சர்க்கரையின் தித்திப்பு, காபியின் கசப்பு, உப்பு. இவை தவிர ஸேவரி என்று சொல்கிற டேஸ்ட் எல்லாம் இந்த நான்கு ஆதார ருசிகளின் கலப்புதான். இந்த ருசிகளைத் தொட்டு அறிய நாக்கில் வெவ்வேறு இடங்கள் உண்டு. தித்திப்பு -நுனி நாக்கு, உப்பு -பரவலாக, குறிப்பாக நுனியில். கசப்பு -உள்நாக்கு. புளிப்பு, ஸேவரி -நாக்கின் வலது -இடது புறங்கள்! ஒரு சராசரி மனிதனுடைய நாக்கில் 9,000 சுவை அரும்புகள் உண்டு. அலட்டல் வேண்டாம். குழந்தையின் நாக்குடன் ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லை. ஏதாவது மருந்தை நாக்கில் தொட்டால் குழந்தைகள் என்னமாக எக்ஸ்பிரஷன் காட்டுகின்றன! சுவைக்கு வாசனையும் சேரவேண்டும். இரண்டும் ஒத்துழைத்தால்தான் பாதாம் அல்வா, ஐஸ்க்ரீம போன்றவற்றை ரசிக்க முடியும். மூக்கைப் பிடித்துக் கொண்டு ஐஸ்க்ரீம் சாப்பிட்டுப் பாருங்கள். ஜில்லென்று இருக்கும். அவ்வளவே. கூடவே சூடும், உணவின் தோற்றமும் முக்கியம்.

மூக்குக்கு மொத்தம் ஏழு வாசனைகள். கற்பூர வாசனை, பெப்பர்மிண்ட் வாசனை, மலர்களின் வாசனை, மஸ்க் என்னும் அரபுசேக் செண்ட் வாசனை, ஈத்தர் அல்லது பெட்ரோல் வாசனை, அழுகிய முட்டை வாசனை, காட்டமான அமில வாசனை. இந்த ஏழு வாசனைகளின் கலப்புகளால் நம்மால் ஆயிரக்கணக்கான வாசனைகளை உணர முடிகிறது. (ஏன்? எதற்கு? எப்படி? - சுஜாதா).

**பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள்:**

| சொற்கள் | தமிழாக்கம் |
|---|---|
| ரொம்ப வீக்கு | நிரம்ப சபலம் |
| ஆதார ருசிகள் | அடிப்படைச் சுவைகள் |
| காபி | குளம்பி, கோப்பி, கொட்டை வடி நீர் |
| ஸேவரி | காரசுவையுண்டி |
| டேஸ்ட் | சுவை |
| ருசிகள் | சுவைகள் |
| சராசரி | ஏறத்தாழ |
| அலட்டல் | அளத்தல் |
| எக்ஸ்பிரஷன் | விளைவுகள் |
| வாசனை | நறுமணம் |
| பாதாம் அல்வா | பாதாம் இன்களி (தேங்கூழ்) |
| ஐஸ்க்ரீம் | பனிக்குழைவு |
| ரசிக்க | களிக்க |
| ஜில்லென்று | குளிர்ச்சி என்று |
| கற்பூர வாசனை | சூடம் நறுமணம் |
| பெப்பர்மிண்ட் வாசனை | புதினாச்சுவையுள்ள மிட்டாய்கள் |
| மஸ்க் அரபுசேக் செண்ட் | ஆண்மானிலிருந்து எடுக்கப் பெற்ற வாசனைத் திரவியம் |
| ஈத்தர் | தீப்பற்றக் கூடிய பொருள் |
| பெட்ரோல் வாசனை | கலெநல் (கன்னெய்) |
| அமில வாசனை | காடிப்புளியம் |

**ஒரு சொல்லைப் பார்த்தவுடன் அது, தமிழ்ச்சொல் அல்லது வடசொல் என்று கூற இயலுமா?**

**வடசொல் என்பதைக் கண்டறிய, இதோ சில குறிப்புகள்**

- தமிழ் எழுத்துகளின் வடிவம் இல்லாச் சொற்கள். (எ.கா.) புஷ்பம்
- தமிழில் மொழிமுதல் வாரா எழுத்துகளில் தொடங்குவன. (**ர**ம்யா, **ல**ட்டு)

- தமிழில் மொழி இறுதியில் வாராச் சொற்கள் (எ.கா.) வீரேந்திர**நாத்**
- தமிழில் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு உட்படாத எழுத்துகள் தொடர்ந்து வருவன. (ப**க்தி**)
- தனிக்குற்றெழுத்தை அடுத்து, ரகர ஒற்று அமைந்திருப்பன. (எ.கா.) தர்மம், நிர்வாகம்
- எதிர்ப்பொருளை உணர்த்தவரும் முன்னொட்டுடன் கூடிய வடசொற்கள். (எ.கா.) நீதி - அநீதி, நியாயம் - அநியாயம்
- அழுத்தமாக ஒலிக்கக் கூடிய சொற்கள். (எ.கா.) பாவனை
- வேர்ச்சொல் அல்லது காரணப்பெயர் இன்றி அமையும் சொற்கள் போன்று வருவனவெல்லாம் வடசொற்களே.

| **உருது மொழிச் சொல்** | **தமிழ்ச் சொல்** |
|---|---|
| மன்னிப்பு | பொறுத்தருள்க |
| நமாஸ் | தொழுகை |
| ஜீரா | தீங்கூழ் |
| ஜிகினா | ஒண் தகடு |
| விலாவரி | முழு விளக்கம் |
| வாரிசு | மரபுரிமையர் |
| வாய்தா | தவணை |
| வாபஸ் | திரும்பப் பெறல் |
| வசூல் | தண்டல் |
| வகையறா முதலியன | பிற |
| லாடம் | குளம்பணி |
| லத்தி | குறுந்தடி |
| ரகம் | வகை |
| மௌசு | கவர்ச்சி |
| மாகாணம் | மாநிலம் |
| மத்தாப்பு | தீப்பூ |
| மசோதா | சட்ட முதல் முந்தாவணம் |
| மசூதி | பள்ளிவாயில் |
| போதை | வெறிமயக்கம் |
| புதினா | ஈயெச்சக்கீரை |
| பூந்தி | பொடிக்கோளி |
| பீடி | சுருட்டு |
| படுதா | திரைச்சீலை |

| | |
|---|---|
| பட்டா | உரிமை ஆவணம் |
| பங்களா | வளமனை |
| தராசு | துலாக்கோல் |
| தயார் | அணியம் |
| தமாஷ் | வேடிக்கை |
| தபால் | அஞ்சல் |

**தெலுங்கு - தமிழ்:**

- ஆஸ்தி- செல்வம்
- எக்கச்சக்கம்- மிகுதி
- கெட்டியாக- உறுதியாக
- சந்தடி- இரைச்சல்
- சாகுபடி- பயிரிடுதல்
- சொகுசு-நேர்த்தி
- சொந்தம்- உரிமை
- தாராளம்- மிகுதி
- நிம்மதி- கவலையின்மை
- பண்டிகை- பெருநாள்

**அரபு - தமிழ்:**

- அசல்- முதல்
- கஜானா- கருவூலம்
- இனாம்- நன்கொடை
- சவால்- அறைகூவல்
- சாமான் -பண்டம்
- ஜாஸ்தி- மிகுதி
- நகல்- போலி
- பதில்- மறுமொழி
- பாக்கி- நிலுவை
- மாமூல்- வழக்கம்

**பாரசீகம் - தமிழ்:**

- அலாதி- தனி
- கம்மி- குறைவு
- சர்க்கார்- அரசு,அரசாங்கம்
- சந்தா- கட்டணம்
- தயார்- ஆயத்தம்
- கிஸ்தி-வரி, நிலவரி
- குமாஸ்தா- எழுத்தர்
- புகார்- குறை
- ரஸ்தா- சாலை
- வாபஸ்- திரும்பப் பெறுதல்

**பிரெஞ்சு – தமிழ்:**

- பீரோ- அலுவலகம்
- ஒப்பித்தால்- மருத்துவமனை
- எகோல்- பள்ளிக்கூடம்
- கம்ராத்- தோழன்
- கிஸ்தியோன் - கேள்வி
- திரக்தர்- இயக்குநர்
- கப்பிதோன் - தளபதி
- சொல்தா- இராணுவ வீரர்
- கொலேழ்- கல்லூரி
- முசியே- அய்யா

**ஆங்கிலம் – தமிழ்:**

- சினிமா - திரைப்படம்
- பஸ் -பேருந்து
- டிபன் -சிற்றுண்டி
- டாக்டர்-மருத்துவர்

- ஃபேன்- மின் விசிறி
- ரேடியோ- வானொலி
- வாட்ச் - கடிகாரம்
- சோப்- வழலைக் கட்டி
- லைட்- விளக்கு
- டிக்கெட்- சீட்டு

**வடசொல் - தமிழ்ச்சொல்**

- அகம்பாவம்- தற்பெருமை.
- அக்கிரமம்-முறைகேடு
- அசுத்தம்- துப்புரவின்மை
- அதிகம்- மிகுதி
- அனுக்கிரகம்- அருள்
- அபிவிருத்தி- வளர்ச்சி
- அவசரம்- விரைவு
- ஆகாரம் -உணவு
- ஆசை- விருப்பம்
- ஆதாரம்- அடிப்படை
- ஆரம்பம்- தொடக்கம்
- இந்திரியங்கள்-ஐம்பொறிகள்
- இரசிகன் - சுவைஞன்
- இருதயம்- உள்ளம்
- இலட்சியம்- குறிக்கோள்
- உஷ்ணம்- வெப்பம்
- உதாரணம்- எடுத்துக்காட்டு
- உபயோகம்- பயன்
- ஏகாந்தம்- தனிமை
- கருணை- இரக்கம்

- கல்யாணம்- திருமணம்
- கிரயம்- விலை
- கும்பம்- குடம்
- சகோதரன் – உடன் பிறந்தான்
- சங்கீதம்-இசை
- சமாதானம் - அமைதி
- சர்வகலாசாலை- பல்கலைக் கழகம்
- சீக்கிரம்-விரைவு
- சீலம்- ஒழுக்கம்
- சுகந்தம்- நறுமணம்
- சொப்பனம்- கனவு
- ஞாபகம்- நினைவு
- தருமம்- அறம்
- தூரம்- தொலைவு
- தேசம்--நாடு
- நவீனம்.புதுமை/புதினம்
- நாமம்- பெயர்
- நிபந்தனை- கட்டுப்பாடு
- பயம்- அச்சம்
- பரம்பரை- தலைமுறை
- பிரசுரம்- வெளியீடு
- பிரபஞ்சம்- உலகம்
- பிரயாணம்- பயணம்
- பேதம்- வேற்றுமை
- மகிமை- பெருமை
- முத்தி/முக்தி- வீடுபேறு
- வயோதிகம்- முதுமை
- வாலிபம்- இளமை
- விவசாயம்- வேளாண்மை
- வேதம்-மறை

## எதிர்ச்சொல் & எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்

- எதிர்சொல் என்பது ஒரு சொல்லுக்கு எதிர் பொருள் தரவல்ல சொல்லைக் குறிக்கும். பொதுவாக இரட்டை சொற்களாக இரு எதிர்மாறான பண்புகளை இச்சொற்கள் கொண்டுள்ளன.

**எ-டு:**

- இரவு - பகல்
- துன்பம் - இன்பம்
- ஆண் - பெண்
- மேலே - கீழே
- அடிமை - ஆண்டை.

**மற்ற எடுத்துக்காட்டுகள்:**

1. பெரியது x சிறியது
2. பல x சில
3. உயரம் x குட்டை
4. ஏறு x இறங்கு
5. இழு x தள்ளு
6. மேலே x கீழே
7. உள்ளே x வெளியே
8. சூடான x குளிர்ச்சியான
9. பழைய x புதிய
10. முன்னால் x பின்னால்
11. அருகில் x தொலைவில்
12. நினைத்தல் x மறத்தல்
13. மண்ணில் x விண்ணில்
14. தேக்குதல் x நீக்குதல்
15. நண்பர்கள் x பகைவர்கள்
16. வெப்பமாய் x குளிர்ச்சியாய்
17. மேல் x கீழ்
18. உள்ளே x வெளியே
19. ஏறினான் x இறங்கினான்

20.உயர்திணை x தாழ்திணை

21.மெய் x பொய்

22.பழமை x புதுமை

23.அமுதம் x நஞ்சு

24.சோம்பல் x சுறுசுறுப்பு

25.பெருமை x சிறுமை

26.இட்ட x எடுத்த

27.பெறு x கொடு

28.மிகுதி x குறைவு

29.புதுமை x பழமை

30.குறை x நிறை

31.நீளும் x நீளாத

32.நினைத்தது x மறந்தது

33.குறையாத x நிறையாத

34.ஆனந்தம் x வருத்தம்

35.இன்னல் x இன்பம்

36.கல்லார் x கற்றவர்

37.இளையோரும் x முதியோரும்

38.குறைய x நிறைய

39.மெல்லிய x தடித்த

40.முடியும் x முடியாது

41.விரைவாக x மெதுவாக

42.கொழுத்த x இளைத்த

43.பலவகை x சிலவகை

44.விரைவாக x மெதுவாக

45.கடினமாக x எளிதாக

46.விழுந்து x எழுந்து

47.உயர x தாழ

48.மகிழ்ச்சி x கவலை

49.உண்மை x பொய்

50.முடிவு x தொடக்கம்

51.தோல்வி x வெற்றி

52.புதிய x பழைய

53.கொடுத்து x வாங்கி

54.உயர்ந்த x தாழ்ந்த

55.சத்தமாக x மெதுவாக

56.இரவு x பகல்

57.மேடு x பள்ளம்

58.துயரம் x இன்பம்

59.வெளிச்சம் x இருட்டு

60.நன்மை x தீமை

61.புகழ் x இகழ்

62.வெற்றி x தோல்வி

63.தோன்றும் x மறைவு

64.பகைவன் x நண்பன்

65.வேற்றுமை x ஒற்றுமை

66.மெய்ம்மை x பொய்மை

67.அன்பு x பகை

68.இனிய x இன்னாத

69.இழிவு x உயர்வு

70.இடம் x வலம்

71.இம்மை x வறுமை

72.இன்னா x இனிய

73.உறங்கு x விழி

74.ஏமாற்றம் x இறக்கம்

75.பழமை x புதுமை

76.பெருமை x சிறுமை

77.வென்று x தோற்று

78.குழு x தனி

79.தொன்மை x அண்மை

80.தன் x பிற

81.எளிய x அரிய

82.எட்டிய x எட்டா

83.செம்மை x கருமை

84.தீது x நன்று

85.கூடி x பிரிந்து

86.நம்பி x நங்கை

87.திண்மம் x நீர்மம்

88.தண்மை x வெம்மை

89.காடு x நாடு

90.நீண்டு x குறுகி

91.வாங்கல் x விற்றல்

92.கலை x கடை

93.போற்றி x தூற்றி

94.காய் x கனி

95.என்னிடம் x உம்மிடம்

96.தெரு x கொல்லை

97.தன்னலம் x பிறர்நலம்

98.தேய்ந்து x வளர்ந்து

99.தனியாக x கூட்டாக

100. போடு x எடு

101. சேமித்தார் x செலவழித்தார்

102. வறுமை x வளமை

103. புதுமை x பழமை

104. இயற்கை x செயற்கை

105. அகம் x புறம்

106. வாழ்வு x தாழ்வு

107. வாழ்த்தல் x தூற்றல்

108. நினை x மற

109. கேடு x நலம்

110. பிழை x திருத்தம்
111. தூய்மை x மாசு
112. புகழ் x இகழ்
113. நன்மை x தீமை
114. இனிய x இன்னா
115. வெண்மை x கருமை
116. அமைதி x குழப்பம்
117. இசை x வசை
118. புகழ் x இகழ்
119. மேதை x பேதை
120. தண்மை x வெம்மை
121. பெருமை x சிறுமை
122. எளிது x அரிது
123. ஓய்வு x உழைப்பு
124. நோதல் x தணிதல்
125. தட்பம் x வெப்பம்
126. ஆக்கம் x கேடு
127. ஆண்டான் x அடிமை
128. ஆங்கு x ஈங்கு
129. ஆசை x நிராசை
130. ஆண்டு x ஈண்டு
131. இகழ்ச்சி x மகிழ்ச்சி
132. இசை x வசை
133. இணைந்து x தனித்து
134. இரவு x பகல்
135. இருள் x ஒளி
136. இலாபம் x நஷ்டம்
137. இன்சொல் x வன்சொல்
138. இனியது x இன்னாதது
139. உச்சந்தலை x உள்ளங்கால்

140. உண்டு x இல்லை
141. உயர்வு x தாழ்வு
142. உவத்தல் x காய்தல்
143. உள்நாடு x வெளிநாடு
144. உள்ளூர் x வெளியூர்
145. ஊடல் x கூடல்
146. எதிர்த்தார் x வரவேற்றார்
147. எளிது x அரிது
148. ஏற்றம் x தாழ்வு
149. ஏறு x இறங்கு
150. ஒருமை x பன்மை
151. ஒற்றுமை x வேற்றுமை
152. ஓங்கியது x தாழ்ந்தது
153. ஓங்குதல் x ஒடுங்குதல்
154. கஞ்சம் x தாராளம்
155. கட்டுதல் x அவிழ்தல்
156. கவனம் x மறதி
157. களிப்பு x துயரம்
158. கற்றால் x கல்லாமை
159. கனவு x நனவு
160. மலர்தல் x கூம்புதல்
161. அருகு x பெருகு
162. பழமை x புதுமை
163. வீரன் x கோழை
164. இகழ்ந்து x புகழ்ந்து
165. இளமை x முதுமை
166. இகழ்ச்சி x புகழ்ச்சி
167. அரியது x எளியது
168. அடைப்பு x திறப்பு
169. அருமை x எளிமை

170. அருள் x மருள்
171. வெற்றி x தோல்வி
172. நட்பு x பகை
173. எட்டா x எட்டிய
174. முதன்மை x இறுதி
175. துன்பம் x இன்பம்
176. மறப்பது x நினைப்பது
177. தொன்மை x புதுமை
178. தோன்ற x மறைய
179. வளர்ச்சி x தேக்கம்
180. அகநகர் x புறநகர்
181. அகப்பொருள் x புறப்பொருள்
182. அகம் x புறம்
183. அங்கு x இங்கு
184. அகலுதல் x கிட்டுதல்
185. அந்தம் x ஆதி
186. அடி x முடி
187. அண்மை x சேய்மை
188. அரிது x எளிது
189. அரு x மருள்
190. அவ்விடம் x இவ்விடம்
191. அறம் x மறம்
192. கருமை x வெண்மை
193. காக்க x விடுக
194. காலம் x அகாலம்
195. காழ்ப்பு x நயப்பு
196. குணம் x குற்றம்
197. குறைவு x நிறைவு
198. கூடல் x பிரிதல்
199. கொடு x வாங்கு

200. கொடுமை x செம்மை
201. கொள்வினை x கொடுப்பினை
202. சஞ்சலம் x துணிவு, தெளிவு
203. சத்து x அசத்து
204. சாந்தம் x உக்கிரம்
205. சான்றோன் x மூடன்
206. சிறப்பு x இழிவு
207. செய்வார் x செய்யார்
208. சுகம் x துக்கம்
209. சுபம் x அசுபம்
210. சுருக்கம் x பெருக்கம்
211. செங்கோல் x கொடுங்கோல்
212. செல்வம் x வறுமை
213. செலவு x வரவு
214. சேய்மை x அண்மை
215. சேரத்தல் x பிரித்தல்
216. சௌக்கியம் x அசொக்கியம்
217. தக்கவன் x தகாதவன்
218. தட்பம் x வெப்பம்
219. தந்நலம் x பிறர்நலம்
220. தவம் x அவம்
221. தழுவு x தள்ளு
222. தள்ளுதல் x தள்ளாமை
223. தண்மை x வெம்மை
224. தாங்கு x விடு
225. தாழ்வு x உயர்வு
226. திண்மை x நொய்மை
227. தீமை x நன்மை
228. துக்கம் x சுகம்
229. தூய்மை x கலப்பு

230. தொகை x விரி
231. தோல்வி x வெற்றி
232. தோன்றுக x மறைக
233. நண்பகல் x நள்ளிரவு
234. நல்லது x கெட்டது
235. நல்வழி x அல்வழி
236. நற்குணம் x தீக்குணம்
237. நன்மை x தீமை
238. நாற்றம் x துர்நாற்றம்
239. நியாயம் x அநியாயம்
240. நினைவு x மறதி
241. நீண்ட x குறுகிய
242. நீதி x அநீதி
243. நுண்மை x பருமை
244. நேசம் x பகை
245. பருத்தல் x சிறுத்தல்
246. பள்ளம் x மேடு
247. டாலர் x விருத்தர்
248. பாவம் x புண்ணியம்
249. பிடித்தல் x விடுதல்
250. பிணக்கம் x இணக்கம்
251. புகழ்ச்சி x இகழ்ச்சி
252. புதியது x பழையது
253. பூரித்தல் x வாடுதல்
254. பெரியது x சிறியது
255. பெரும்பான்மை x சிறுபான்மை
256. பேதம் x அபேதம்
257. பொய் x மெய்
258. பொய்மை x பொய்யாமை
259. போலி x அசல்

260. மங்கலம் x அமங்கலம்
261. மடிதல் x விரிதல்
262. மரியாதை x அவமரியாதை
263. மருள் x தெருள்
264. மறைதல் x வெளிப்படல்
265. முன்பு x பின்பு
266. முற்பகல் x பிற்பகல்
267. மூடு x திற
268. மூதேவி x சீதேவி
269. மென்மை x வன்மை
270. மேதை x பேதை
271. மேலார் x கீழார்
272. மேற்கொள்க x கைவிடுக
273. வரவு x செலவு
274. வலப்புறம் x இடப்புறம்
275. வளைதல் x நிமிர்தல்
276. வற்றிய x தளிர்த்த
277. வாழ்வு x தாழ்வு
278. வாழ்க x வீழ்க
279. விருப்பு x வெறுப்பு
280. விவேகி x அவிவேகி
281. வெம்மை x தண்மை
282. வேண்டுதல் x வேண்டாமை
283. அசைகிறான் x அசைகின்றிலன்
284. அசைவான் x அசையான்
285. அடையும் x அடையா
286. அணைகிறாள் x அணைக்கிறன்றலன்
287. அணைவாள் x அணையாள்
288. அழுவர் x அழார்
289. ஆடின் x ஆடா

290. ஆழ்வார் x ஆழார்
291. இடித்திதது x இடித்திலது
292. இடிக்கும் x இடித்திலது
293. இடிக்கும் x இடியாது
294. இயம்பினாள் x இயம்பிலன்
295. இயம்புவார் x இயம்பார்
296. ஈந்தார் x ஈந்திலர்
297. ஈவாய் x ஈயாய்
298. உண்டாய் x உண்டிலை
299. ஊதுகின்றது x ஊதுகின்றலது
300. ஊதுக x ஊதாத
301. எழுந்தேன் x எழுந்திலேன்
302. எழுவேன் x எழேன்
303. ஏற்றாய் x ஏற்றிலை
304. ஏற்பாய் x ஏலாய்
305. ஒழிந்தாய் x ஒழிந்திலை
306. ஒழிவாய் x ஒழியாய்
307. ஓடின x ஓடிற்றில்
308. ஓடும் x ஓடா
309. கற்றான் x கற்றிலன்
310. கற்பான் x கற்றிலன்
311. காண்பாய் x காணாய்
312. காப்பாய் x காவாய்
313. குடித்தன x குடித்தில
314. குடியா x குடிக்கும்
315. கூவியது x கூவிற்றலது
316. கூவும் x கூவாது
317. கேட்கிறாய் x கேட்கின்றிலை
318. கொடுத்தார் x கொடுத்திலர்
319. சிரித்தது x சிரித்திலது

320. சிரிக்கும் x சிரிக்காது
321. சென்றன x சென்றில
322. செல்லும் x செல்லா
323. சேர்ந்தாய் x சேர்ந்திலை
324. சேர்வாய் x சேராய்
325. தின்றான் x தின்றிலன்
326. தின்பான் x தின்னான்
327. தேய்ந்தன x தேய்ந்தில
328. தேயும் x தேயா
329. தொட்டான் x தொட்டிலன்
330. தொடுவாள் x தொடாள்
331. தோண்டிலர் x தோண்டிற்றிலர்
332. தோண்டுவார் x தோண்டார்
333. நடந்தாய் x நடிந்திலை
334. நடுங்கின x நடுங்கிற்றில
335. நடுங்கும் x நடுங்கா
336. நின்றான் x நின்றிலன்
337. நிற்பாள் x நில்லாள்
338. நிற்கின்றன x நிற்கின்றிலர்
339. நீந்துகின்றனர் x நீந்துகின்றிலர்
340. நொந்தனை x நொந்திலை
341. நோவு x நோகாய்
342. பாடுகிறாய் x பார்த்திலன்
343. பார்ப்பான் x பாரான்
344. மடிந்தார் x மடிந்திலர்
345. மடிவார் x மடியார்
346. வந்தான் x வந்திலான்
347. வருகின்றான் x வருகின்றிலன்
348. வருவான் x வாரான்
349. வரும் x வாரா

350. வருகின்றன x வருகின்றில
351. வாழ்வாய் x வாழாய்
352. விட்டன x விடா
353. வீழ்ந்தேன் x வீழ்ந்திலேன்
354. வீழ்வேன் x வீழேன்
355. வெந்தார் x வெந்திலர்
356. வைக்கிறார் x வைக்கின்றிலர்
357. இடும்பை x இன்பம்

## வினைச்சொல் & பெயரெச்சம் வகையறிதல்




**அறிமுகம்:**

- தமிழ் இலக்கண நூலார் பெயர், வினை ஆகிய இருவகைச் சொற்களுக்கே முதலிடம் / சிறப்பிடம் தந்துள்ளனர். இடை, உரி ஆகிய சொற்களுக்கு இரண்டாம் நிலையினையே தந்திருக்கின்றனர். வினைச் சொல்லின் இலக்கணத்தை இப்பிரிவு உணர்த்துகின்றது. ஒரு பொருளின் **புடை பெயர்ச்சியை / இயக்கத்தை / செய்கையைக் குறிக்கும் சொல் 'வினைச் சொல்'** எனப்படும்.

  **"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
  **நினையுங் காலை காலமொடு தோன்றும்."**(தொல்.சொல்.168)

- காலம் காட்டுதல் வினைச்சொல்லிற்குரிய சிறப்பிலக்கணம் ஆகும்.

- தொல்காப்பியர் வினைகளுக்கு அமைப்பின் அடிப்படையிலேயே இலக்கணம் கூறியிருக்கிறார். நன்னூலார், வினைகளுக்குப் பொருள் அடிப்படையில் இலக்கணம் கூறுகின்றார்.

**வினைச்சொல்:**

- எந்த ஒரு மொழியிலும் ஒரு தொடருக்கு இன்றியமையாத உறுப்பாகத் திகழ்வது வினைச் சொல்லே. தமிழில் வந்தான். வந்தாள், வந்தார் போன்ற பால்காட்டும் வினைமுற்றுச் சொற்கள் தனியே நின்று தொடர்களாகவும் அமைகின்றன.
- அத்தோடன்றி இத்தகு சொற்கள், பல இலக்கணக் கூறுகளை உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தவையாகவும் உள்ளன. சான்றாக, **வந்தான்** என்பது வருதல் என்ற தொழிலையும், தொழில் செய்தவனையும், தொழில் நிகழ்ந்த காலத்தையும் ஒருசேர உணர்த்தும் சொல்லாகத் திகழ்கின்றது.
- இவ்வாறு ஒரே வினைச்சொல் பல்வேறு இலக்கணக் கூறுகளை விளக்கி நிற்பதால் சொல் பாகுபாட்டில் அது முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

**வினைச்சொல் இலக்கணம்:**

- வினைச்சொல் வேற்றுமை உருபுகளை ஏற்காது; காலம் காட்டும் என்கிறார் தொல்காப்பியர். (தொல். சொல். 200)
- வினைச்சொற்களில் காலத்தை வெளிப்படையாகக் காட்டும் சொற்களே அல்லாமல், காலத்தைக் குறிப்பாகக் காட்டும் சொற்களும் வழங்கின.

**வினைச்சொல் வகைகள்:**

- வினைச்சொல்லானது **வினை, குறிப்பு** என இரு வகைப்படும். இவ்விரு சொற்களும் காலம் காட்டும் என்கிறார் தொல்காப்பியர். (தொல். சொல். 203)

**தெரிநிலை வினை:**

- செய்பவன் (கருத்தா), கருவி, நிலம் (இடம்), செயல், காலம், செய்பொருள் - ஆகிய ஆறு வகைப் பொருள்களையும் தருவது / காட்டுவது தெரிநிலை வினைச்சொல்லாகும்.
- செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டும் வினை தெரிநிலை வினை.

**எ-டு:**

1. வனைந்தான் - இதில் கருத்தா - குயவன்
2. கருவி - மண் (முதற்காரணம்), தண்டச் சக்கரம் முதலியவை
3. (துணைக்கருவிகள்)
4. நிலம் - வனைந்த இடம்; செயல் - வனைதல் தொழில்
5. காலம் - இறந்த காலம்; செயப்படுபொருள் - இடம் முதலியன.

- வினை, குறிப்பு என்று தொல்காப்பியர் குறிப்பிட்ட இருவகை வினைச்சொற்களைப் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் முறையே **தெரிநிலை**

**வினை, குறிப்பு வினை** என்று தெளிவாகக் குறிப்பிடலாயினர். காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினை.

| | | |
|---|---|---|
| (எ.டு) | உண்டான் | - இறந்தகாலம் |
| | உண்ணா நின்றான் | - நிகழ்காலம் |
| | உண்பான் | - எதிர்காலம் |

பொருளை உணர்த்தும் பெயர், பண்பை உணர்த்தும் பெயர் முதலியவற்றின் அடியாகத் தோன்றிக் காலத்தைக் குறிப்பாகக் காட்டுவது **குறிப்பு வினை** எனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.டு) | பொன் | + | அன் | = | பொன்னன் |
| | நல் | + | அன் | = | நல்லன் |

- **நல்லன்** என்ற குறிப்பு வினை நேற்று நல்லன், இன்று நல்லன், நாளை நல்லன் என்று மூன்று காலத்தையும் குறிப்பாகக் காட்டுவதைக் காணலாம்.
- பொருளையோ பண்பையோ உணர்த்தாத அல்லன், இலன், இலர் போன்ற குறிப்பு வினைமுற்றுகளும் உண்டு.

**திணை அடிப்படையில் வினைப் பாகுபாடு:**

தொல்காப்பியர் தெரிநிலை வினை, குறிப்பு வினை என்று இருவகையாக அமையும் வினைச்சொற்களைத் திணை அடிப்படையில் **உயர்திணை வினைகள், அஃறிணை வினைகள், விரவு வினைகள்** (இரு திணைப் பொது வினைகள்) என மூவகையாகப் பிரிக்கிறார். இந்த மூவகைப்பட்ட வினைகளையும் **வினைமுற்று, எச்சம்** என்ற இருவகை அமைப்பில் விளக்கிக் காட்டுகிறார்.

**வினைமுற்றுகள்:**

வினைமுற்றுகள், தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும். தொல்காப்பியர் காலத்தில் தெரிநிலை வினைமுற்றுகள் இருவகை அமைப்பில் தோன்றின.

1. **வினையடி + காலம் காட்டும் இடைநிலை + ஈறு (விகுதி)**

   (எ.டு) செய் + த் + ஆன் = செய்தான்

2. **வினையடி + ஈறு**

   (எ.டு) உண் + உம் = உண்ணும் (அவன் உண்ணும்.)

பெயர் அல்லது பண்பு அடிச்சொல் + ஈறு என்ற அமைப்பில் குறிப்பு வினைமுற்றுகள் தோன்றின.

| | | | |
|---|---|---|---|
| (எ.டு) | பொன் | + அன் | = பொன்னன் |
| | நல் | + அன் | = நல்லன் |

வினைமுற்றுகளில் ஈறு கட்டாயம் இடம் பெற வேண்டும் என்பர் தொல்காப்பியர் (தொல். சொல். 10). வினைமுற்றுகள் ஈறு (விகுதி) கொண்டே திணை, பால், இடம், எண் ஆகியவற்றை உணர்த்துகின்றன. எனவே தொல்காப்பியர் ஒவ்வொரு வினைமுற்றையும் பற்றிக் கூறும் பொழுது அதற்குரிய ஈறுகளை எல்லாம் குறிப்பிடுகிறார்.

**வினைமுற்று:**

- **வினைமுற்று = வினை + முற்று**
- ஒரு வினை (செயல்) முற்றுப் பெற்ற சொல்லாயின் அது வினைமுற்று. (எடுத்துக்காட்டு) கற்றான், நின்றாள், சென்றனர், வந்தது, வந்தன. ஐம்பால் வினைமுற்றுகள் இவை.

**தெரிநிலை வினைமுற்று:**

- செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறனையும் தெரிநிலை வினைமுற்று காட்டும்.
- (எ.கா.) **எழுதினாள்**
    - செய்பவர் – மாணவி
    - காலம் – இறந்தகாலம்
    - கருவி – தாளும் எழுதுகோலும்
    - செய்பொருள் – கட்டுரை
    - நிலம் – பள்ளி
    - செயல் – எழுதுதல்
- (எ.கா.) **செல்வன் விளைவித்தான்**
    - இதில் செல்வன் என்பது வினையைச் செய்யும் கர்த்தா என்னும் நபர்.
    - விளைவித்தான் என்பது கர்த்தாவின் செயலை உணர்த்தும் வினைமுற்று.
    - செய்பவன் - செல்வன்
    - கருவி - ஏர்
    - நிலம் - விவசாய நிலம்
    - செயல் - விவசாயம்
    - காலம் - இறந்த காலம்
    - செய்பொருள்- பயிர் ஆகியவற்றை இந்த வாக்கியம் மூலம் அறியலாம்.
- **எடுத்துக்காட்டு: ஓடினான்**

  ஓடு – செயல்

  ஓடினான் – இறந்தகாலம்

**தெரிநிலை வினைமுற்றுகள் இடைநிலைகளால் முக்காலத்தையும் (3 காலங்கள்) காட்டும்:**

**எடுத்துக்காட்டு: ஓடுகிறான்**

ஓடு (பகுதி) + கிறு (இடைநிலை) + ஆன் (விகுதி)

**சில தெரிநிலை வினைமுற்றுகள் எதிர்காலத்தை உம் விகுதியாலும் உணர்த்தி நிற்கும்:**

**எடுத்துக்காட்டு:** வரும், போகும், ஓடும்...

**செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் தெரிநிலைவினைமுற்று வெளிப்படுத்தி நிற்கும்:**

**எடுத்துக்காட்டு:** படித்தான்

| | |
|---|---|
| செய்பவன் (யார் படித்தான்?) | அவன் (ஆண்பால், ஒருமை,படர்க்கை) |
| கருவி | நூல் |
| நிலம் | பள்ளி |
| செயல் | படி |
| காலம் | இறந்தகாலம் |
| செய்பொருள் (எதைப் படித்தான்?) | பாடம் |

**"செய்பவன் கருவி நிலம் செயல் காலம்**

**செய்பொரு ளாறும் தருவது வினையே." - (நூற்பா.320)**

**குறிப்பு வினைமுற்று:**

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு, காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும். (அ) **பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் - எனும் ஆறு வகைப் பெயர்களையும் அடியாகக் கொண்டு பிறந்து செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் - எனும் ஆறில் 'செய்பவன்' (கருத்தா) ஒன்றை மட்டுமே காட்டுவது குறிப்பு வினையாகும்.**
- **(எ.கா.)**
    - குழையன், பொன்னன் - பொருள்
    - அகத்தினன், ஊரன், தென்னாட்டார் - இடம்
    - ஆதிரையான், ஓணத்தான் - காலம்
    - காலன், கண்ணன் - சினை
    - கரியன், நல்லன் - குணம்
    - நடையன், கொல்லன், எழுத்தன் - தொழில்

- இவற்றில் விகுதியால் செய்பவன் விளங்கியது. மற்றவை குறிப்பாக உண்டெனக் கொள்ள வேண்டும்.

**"பொருள்முத லாறினும் தோற்றிமுன் னாறனுள்**

**வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே."** (நூற்பா.321)

**தெரிநிலை**

**குறிப்பு**

**பெயர்**

செய்தான் **மகன்**

பெரியன் **மகன்**

**பொருள்**

குளிர்ந்தது **நிலம்**

வலியது **நிலம்**

**இடம்**

வந்தது **கார்**

நல்லது **கார்**

**காலம்**

குவிந்தது **கை**

நெடியது **கை**

**சினை**

வந்தது **நன்மை**

இல்லது **தீமை**

**குணம்**

ஒழிந்தது **பிறப்பு**

உள்ளது **வாழ்வு**

**தொழில்**

**உயர்திணை வினைமுற்றுகள்:**

தன்மை ஒருமை, தன்மைப் பன்மை, படர்க்கை ஆண்பால், படர்க்கைப் பெண்பால், படர்க்கைப் பலர்பால் வினைமுற்றுகள் ஆகிய ஐந்தும் உயர்திணைக்கு உரியன. இவற்றிற்கு உரிய ஈறுகள் வருமாறு:

| | |
|---|---|
| **தன்மை ஒருமை** | - கு, டு, து, று, என், ஏன், அல் (7) |
| **தன்மைப் பன்மை** | - கும், டும், தும், றும், அம், ஆம், எம், ஏம் (8) |

| | |
|---|---|
| **படர்க்கை ஆண்பால்** | - அன், ஆன் (2) |
| **படர்க்கைப் பெண்பால்** | - அள், ஆள் (2) |
| **படர்க்கைப் பலர்பால்** | - அர், ஆர், ப, மார் (4) |

இந்த 23 ஈறுகள் தெரிநிலை வினைமுற்றுக்கே கூறப்பட்டவை. இவற்றில் ஏற்புடையன குறிப்பு வினைமுற்றிலும் வரும்.

| | | |
|---|---|---|
| (எ.டு) | உண்டேன், கரியேன் | - தன்மை ஒருமை வினைமுற்று |
| | உண்டேம், கரியேம் | - தன்மைப் பன்மை வினைமுற்று |
| | உண்டான், கரியன் | - படர்க்கை ஆண்பால் வினைமுற்று |
| | உண்டாள், கரியள் | - படர்க்கைப் பெண்பால் வினைமுற்று |
| | உண்டனர், கரியர் | - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று |

யார் எனும் வினாப்பொருள் உணர்த்தும் குறிப்பு வினைமுற்று உயர்திணையில் மூன்று பாலுக்கும் உரியது. **எ-டு** அவன் யார், அவள் யார், அவர் யார்?

**அஃறிணை வினைமுற்றுகள்:**

படர்க்கை ஒருமை, (ஒன்றன்பால்) படர்க்கைப் பன்மை (பலவின்பால்) ஆகிய இரண்டு வினைமுற்றுகளும் அஃறிணைக்கு உரியன. படர்க்கை ஒருமை வினைமுற்று **து, று, டு** என்னும் மூன்று ஈறுகளையும், படர்க்கைப் பன்மை வினைமுற்று அ, ஆ, வ என்னும் மூன்று ஈறுகளையும் இறுதியில் கொண்டு வரும். இந்த ஈறுகளில் சில குறிப்பு வினைமுற்றுகளிலும் வரும்.

| | | |
|---|---|---|
| (எ.டு) | உண்டது, கரியது | - அஃறிணை ஒருமை வினைமுற்று |
| | உண்டன, கரியன | - அஃறிணைப் பன்மை வினைமுற்று |

- எவன் எனும் வினாக் குறிப்பு வினைமுற்று அஃறிணையில் இரண்டு பாலுக்கும் உரியது.
- (எ.டு) அஃது எவன்? அவை எவன்?

**இருதிணைப் பொது வினைமுற்றுகள்:**

- முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆகியன உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைகளுக்கும் பொதுவானவை. மேலும் இல்லை, வேறு எனும் குறிப்பு வினைமுற்றுகளும் இருதிணைப் பொதுவானவையேயாகும்.

**முன்னிலை வினைமுற்று:**

- இது முன்னிலை ஒருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று என இருவகையாக வரும். இவை பால் காட்ட மாட்டா; ஒருமை பன்மை ஆகிய எண் வேறுபாடு மட்டுமே காட்டும்.

- முன்னிலை ஒருமை வினைமுற்று **இ, ஐ, ஆய்** என்னும் மூன்று ஈறுகளையும், பன்மை வினைமுற்று இர், ஈர், மின் என்னும் மூன்று ஈறுகளையும் பெற்று வரும். குறிப்பு வினைமுற்று இவற்றுள் ஏற்பன கொண்டு வரும்.

| | | |
|---|---|---|
| (எ.டு) | உண்டனை, உண்டாய், கரியை | முன்னிலை ஒருமை வினைமுற்று. |
| | உண்டீர், உண்மின், கரியீர் | முன்னிலைப் பன்மை வினைமுற்று. |

- மேலும் நட, வா, போ, உண், செய் போன்ற தெரிநிலை வினையடிகள் எல்லாம் முன்னிலைக்கு உரியன. இவை ஏவல் பொருளில் வழங்கும்; ஒருமையை மட்டும் உணர்த்தும்; எதிர்காலம் காட்டும்.

**வியங்கோள் வினைமுற்று:**

- வியங்கோள் வினைமுற்று படர்க்கையில் மட்டுமே வரும். தன்மையிலும் முன்னிலையிலும் வாராது என்கிறார் தொல்காப்பியர். **க, அல்** என்னும் ஈறுகள் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாக அவர் காலத்தில் வழங்கின.
- (எ.டு) அவன் செல்க, அவள் செல்க, அது செல்க, கூறல் (கூறுக).
- சிறுபான்மையாக ‘நீ வாழ்க’ என முன்னிலையிலும், ‘யான் உறைக’ எனத் தன்மையிலும் வியங்கோள் வினைமுற்று வருவதை உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

**ஏவல் வினைமுற்று:**

தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.

- பாடம் படி
- கடைக்குப் போ-இத்தொடர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுகின்றன. இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும்.

**பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு:**

- **(எ.கா) எழுது – ஒருமை**
- **எழுதுமின் – பன்மை**

**வியங்கோள் வினைமுற்று:**

- க, ய - எனும் இரண்டு உயிர் மெய்களுடன் 'ர' கர மெய்யையும் இறுதியில் உடைய மொழிகள் வியங்கோள் வினைமுற்றுகளாகும். அவை மூவிடங்களிலும் ஐம்பாலிலும் இயலும் என்று புலவோர் கூறுவர். இஃது எதிர்காலத்திற்கு மாத்திரமே வரும்.

- 'ர கர மெய் தனித்து நில்லாமல் ‘ய’கரத் தோடு கூடி நிற்கப் பெறும். ‘ய’கரம் தனித்து நில்லாது 'இ 'கரச் சாரியை பெற்றே வரும்.
- எ-டு:
    - வாழ்க, வாழிய, வாழியர்; | யான், யாம்; நீ, நீர்;
    - உண்க, உண்ணிய, நிலீ இயர் அவன், அவள்; அவர், அது, அவை.
- **வியங்கோள் வினைமுற்று:**
    - வாழ்த்துதற் பொருளிலும் (எ-டு: வெல்க, சிறக்க),
    - விதித்தற் பொருளிலும் (எ-டு: உண்க, சிறக்க),
    - வேண்டிக் கொள்ளுதற் பொருளிலும் (எ-டு: அருளுக, ஈக),
    - வைதற் பொருளிலும் (எ-டு: கெடுக, அழிக, ஒழிக) - -வரும்.

**ஏவல் வினைமுற்று:**

**வியங்கோள் வினைமுற்று:**

முன்னிலையில் வரும் இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் ஒருமை, பன்மை **வேறுபாடு** உண்டு ஒருமை,பன்மை **வேறுபாடு** இல்லை கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும் வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும் விகுதி பெற்றும் பெறாமலும் வரும் விகுதி பெற்றே வரும்.

**செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று:**

- செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று நிகழ்காலம் மட்டும் காட்டும். இது பலர்பால் படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகியவற்றில் வாராது. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் படர்க்கைப் பெயர்களோடு மட்டுமே பொருந்தி வரும்.
- (எ.டு) அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்.

**எச்சங்கள்:**

- தொல்காப்பியர் மேற்கூறிய இருதிணைப் பொது வினைமுற்றுகளைக் கூறிய பின்னர் எச்சங்களைப் பற்றிக் கூறுகிறார். வினைமுற்றில் ஈறு குறைந்து நின்றால் அது எச்சமாகும். எச்சங்களும் இருதிணைப் பொதுவினைகளேயாகும்.
- இவ்வாறு வரும் எச்ச வினைகள் ஒரு வினையைக் கொண்டு கொண்டு முடியும் போது வினையெச்சம் என்றும், ஒரு பெயரைக் கொண்டு முடியும் போது பெயரெச்சம் என்றும் அழைக்கப்படுகின்றன. தொல்காப்பியர் இவ்விரண்டு எச்சங்களையும் முறையே **வினை எஞ்சு கிளவி** என்றும் **பெயர் எஞ்சு கிளவி** என்றும் குறிப்பிடுகிறார்.

| | |
|---|---|
| (எ.டு) | **செய்து** வந்தான் (வினையெச்சம்) |
| | **செய்த** சாத்தன் (பெயரெச்சம்) |

**வினையெச்சம்:**

- தொல்காப்பியர் வினையெச்சம் என்றால் என்ன என்பதை வரையறை செய்யவில்லை. ஆனால் அதன் அமைப்பைப் பல வாய்பாடுகள் கொண்டு விளக்கிக் காட்டுகிறார். **செய்** என்ற வினையடியிலிருந்து வினையெச்ச வாய்பாடுகளை உருவாக்கிக் காட்டுகிறார். அவர் குறிப்பிடும் வினையெச்ச வாய்பாடுகள் மொத்தம் ஒன்பது. இவற்றை,

> **செய்து, செய்யூ, செய்பு, செய்தென,**
> **செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என**
> **அவ்வகை ஒன்பதும் வினை எஞ்சு கிளவி** (தொல்.சொல். 230)

என்ற நூற்பாவில் கூறுகிறார். அவர் காலத் தமிழில் வழங்கிய வினையெச்சங்களை எல்லாம் இந்த ஒன்பது வாய்பாடுகளில் அடக்கிக் காட்டுகிறார். இவற்றைச் சான்றுகளுடன் காண்போம்.

| | | |
|---|---|---|
| 1. | செய்து | - **உண்டு** வந்தான் |
| 2. | செய்யூ | - **உண்ணூ** வந்தான் (உண்டு வந்தான்) |
| 3. | செய்பு | - **நகுபு** வந்தான் (சிரித்தவாறு வந்தான்) |
| 4. | செய்தென | - மருந்து **உண்டெனப்**பிணி நீங்கிற்று |
| 5. | செய்யியர் | - **உண்ணியர்** வந்தார் (உண்ண வந்தார்) |
| 6. | செய்யிய | - **உண்ணிய** வந்தான் (உண்ண வந்தான்) |
| 7. | செயின் | - **உண்ணின்** மகிழ்வேன் (உண்டால் மகிழ்வேன்) |
| 8. | செய | - **உண்ண** வந்தான் |
| 9. | செயற்கு | - **உணற்கு** வந்தான் (உண்பதற்கு வந்தான்) |

**வினையெச்சம் அடுக்கி வரல்:**

வினையெச்சங்கள் பலவாக ஒரு தொடரில் அடுக்கியும் வரும். அவ்வாறு வரினும் ஒரு வினை கொண்டே முடிய வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். (தொல்.சொல். 235)

(எ.டு) உண்டு தின்று ஆடிப் பாடி மகிழ்ந்து வந்தான்.

**பெயரெச்சம்:**

தொல்காப்பியர் செய்யும், செய்த என்னும் இரண்டு வாய்பாடுகளை மட்டுமே பெயரெச்சத்திற்குக் கூறுகிறார். இந்த இரு வாய்பாடுகளைக் கொண்டு வரும் பெயரெச்ச வினைகள் நிலம் (இடம்), பொருள் (செயப்படுபொருள்), காலம், கருவி, வினைமுதல் (தொழில் செய்பவன்), வினை (தொழிலை உணர்த்தும் பெயர்) ஆகிய ஆறனை உணர்த்தும் பெயர்களைக் கொண்டு முடியும் என்கிறார் தொல்காப்பியர். இவற்றிற்கான சான்றுகள் வருமாறு:

| | |
|---|---|
| **உண்ணும், உண்ட** | - வீடு (நிலம்) |
| | - சோறு (பொருள்) |
| | - நாள் (காலம்) |
| | - வட்டில் (கருவி) |
| | - சாத்தன் (வினைமுதல்) |
| | - ஊண் (வினை) |

**குறிப்பு வினையெச்சம், குறிப்புப் பெயரெச்சம்:**

தொல்காப்பியர் எல்லா வினைச்சொற்களும் தெரிநிலையிலும் குறிப்பிலும் வரும் என்கிறார். எனவே வினையெச்சங்களும் பெயரெச்சங்களும் குறிப்பு வினையிலும் வரும் என்பது அவர் கருத்து.

| | | |
|---|---|---|
| (எ.டு) | நன்கு பேசினான், இனிது பேசினான் | (குறிப்பு வினையெச்சம்) |
| | நல்ல மகன், இனிய மனைவி | (குறிப்புப் பெயரெச்சம்) |

இதுகாறும் தொல்காப்பியர் காலத்தில் வினைச்சொல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைப் பார்த்தோம்.

**எச்சம்:**

- பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும்.
- இது **பெயரெச்சம், வினையெச்சம்** என்று இருவகைப்படும்.

**பெயரெச்சம் – விளக்கம்:**

- பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சச்சொல் பெயரெச்சம் எனப்படும். அது வினைப்பகுதி, காலம் காட்டும் இடைநிலை, பெயரெச்ச விகுதி ஆகியவற்றை உடையதாய் அமையும். பெயரெச்சம் காலமும் செயலும் காட்டும்.
- (எ.கா) படித்த பாடம்.
- கொடுத்த பணம்

**பெயரெச்ச வடிவங்கள்:**

- பெயரெச்சம் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூன்று வடிவங்களில் அமையும். இவ்வடிவங்களை ‘வாய்பாடுகள்’ என்பர்.
- ‘செய்த’ என்னும் வாய்பாடு இறந்தகாலம் காட்டும். ‘செய்கின்ற’ வாய்பாடு நிகழ்காலம் காட்டும். ‘செய்யும்’ வாய்பாடு எதிர்காலம் காட்டும்.
- (எ.கா) செய்த- படித்த சிறுவன்
- செய்கின்ற - படிக்கின்ற சிறுவன்

- செய்யும் - படிக்கும் சிறுவன்
- இவற்றுள் 'செய்யும்' என்னும் வாய்பாடு, தொல்காப்பியர் காலத்தில் நிகழ்காலத்தைக் குறிப்பதாக இருந்துள்ளது. நன்னூலார் காலம் முதற்கொண்டு எதிர்காலத்தைக் குறிக்கத் தொடங்கியது.

**பெயரெச்சம் காலம் காட்டும் முறை:**

**'செய்த' என்னும் பெயரெச்ச வடிவம், த், ட், ற், இன் என்னும் இடைநிலைகளால் இறந்த காலத்தை உணர்த்தும்.**

**(எ.கா):**

- த் - படித்த பாடம்
- ட் - கண்ட காட்சி
- ற் - தின்ற கரும்பு
- இன் - போயின போக்கு

**'செய்கின்ற' என்னும் பெயரெச்ச வடிவம், 'கிறு', 'கின்று', 'ஆநின்று' என்னும் இடைநிலைகளால் நிகழ்காலத்தைக் காட்டும். இவற்றுள் 'ஆநின்று' இடைநிலை இன்றைய வழக்கில் இல்லை.**

**(எ.கா):**

- கிறு - உண்கிற சிறுவன்
- கின்று - உண்கின்ற சிறுவன்
- ஆநின்று - உண்ணாநின்ற சிறுவன்

**'செய்யும்' என்னும் பெயரெச்ச வடிவம், 'உம்' என்னும் விகுதியால் எதிர்காலத்தை உணர்த்தும்.**

**(எ.கா):**

- படிக்கும் சிறுவன்
- பாடும் சிறுமி

**பெயரெச்சம் கொண்டுமுடியும் பெயர்கள்:**

- பெயரெச்சம், செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய அறுவகைப் பெயர்களுள் ஏதேனும் ஒன்றினைக் கொண்டு முடியும்.
- **(எ.கா)**
  - செய்பவன் - உண்ட சாத்தன், பாடும் புலவன்
  - கருவி - உண்ட தட்டு, வெட்டும் வாள்

- நிலம் - உண்ட அறை, வாழும் இல்
- செயல் - உண்ட ஊண், வாழும் வாழ்க்கை
- காலம் - உண்ட நாள், துயிலும் காலம்
- செயப்படுபொருள் - உண்ட சோறு, கற்கும் நூல்
- (ஊண் = உணவு; இங்கு உண்ட செயல் எனப் பொருள் தரும்.)

**பெயரெச்சம் மூவிடங்களிலும் இடம்பெறுதல்:**

- பெயரெச்சம், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் இரு திணை, ஐம்பாலுக்கும் பொதுவாக வரும்.
- (எ.கா)
    - தன்மை ஒருமை - உண்ட நான்
    - தன்மைப் பன்மை - உண்ட நாம் (நாங்கள்)
    - முன்னிலை ஒருமை - உண்ட நீ
    - முன்னிலைப் பன்மை - உண்ட நீவிர் (நீங்கள்)
    - படர்க்கை ஆண்பால் - உண்ட செல்வன்
    - பெண்பால் - உண்ட செல்வி
    - பலர்பால் - உண்ட மக்கள்
    - ஒன்றன்பால் - உண்ட பசு
    - பலவின்பால் - உண்ட பசுக்கள்

**பெயரெச்ச வகைகள்:**

- பெயரெச்சத்தைக் காலம் காட்டும் முறையின் அடிப்படையில், தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இரு வகைப்படுத்துவர்.

**தெரிநிலைப் பெயரெச்சம்:**

- காலத்தை வெளிப்படையாகக் காட்டும் பெயரெச்சம், தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும். இடைநிலை அல்லது விகுதியைக் கொண்டு பெயரெச்சம் காலம் காட்டும்.
- அ, உம் ஆகிய இரண்டு விகுதிகள் தெரிநிலைப் பெயரெச்சத்தில் இடம்பெறுகின்றன.

**(எ.கா)**

- இறந்தகாலப் பெயரெச்சம் - கேட்ட பாட்டு

  ('ட்' இறந்தகால இடைநிலை)
- நிகழ்காலப் பெயரெச்சம் - கேட்கின்ற பாட்டு

  ('கின்று' நிகழ்கால இடைநிலை)

- எதிர்காலப் பெயரெச்சம் - கேட்கும் பாட்டு
  ('உம் பெயரெச்ச விகுதி)
- இறந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும் இடைநிலைகள் உணர்த்துகின்றன. எதிர்காலத்தை விகுதி உணர்த்துகிறது.

**குறிப்புப் பெயரெச்சம்:**

- பெயர் அடியாகப் பிறந்து, காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும். குறிப்புப் பெயரெச்சம் 'அ' என்னும் விகுதியைப் பெற்று வரும்.

**(எ.கா)**

- சிறிய பையன்
- புதிய பாடம்
- அழகிய கவிதை

**வினையெச்சம் – விளக்கம்:**

வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சச்சொல், **வினையெச்சம்** எனப்படும். அது வினைப்பகுதி, காலம் காட்டும் இடைநிலை, வினையெச்ச விகுதி ஆகியவற்றைக் கொண்டிருக்கும். வினையெச்சம் காலமும் செயலும் உணர்த்தும்.

**(எ.கா)**

**ஓடி** வந்தான்

**கிழித்துக்** கொடுத்தான்

**வினையெச்சம் மூவிடங்களிலும் இடம்பெறல்**

வினையெச்சம் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்.

(எ.கா)

- தன்மை ஒருமை - உண்டு **வந்தேன்**
- தன்மைப் பன்மை - உண்டு **வந்தோம்**
- முன்னிலை ஒருமை - உண்டு **வந்தாய்**
- முன்னிலைப் பன்மை - உண்டு **வந்தீர்**
- படர்க்கை ஆண்பால் - உண்டு **வந்தான்**
- பெண்பால் - உண்டு **வந்தாள்**
- பலர்பால் - உண்டு **வந்தார்**

- ஒன்றன்பால் - உண்டு **வந்தது**
- பலவின்பால் - உண்டு **வந்தன**

**வினையெச்ச வகைகள்:**

- வினையெச்சம், காலம் காட்டும் முறையின் அடிப்படையில் **தெரிநிலை வினையெச்சம்**, **குறிப்பு வினையெச்சம்** என இரு வகைப்படும்.

**தெரிநிலை வினையெச்சம்:**

- வினைப்பகுதி, காலங்காட்டும் இடைநிலை, வினையெச்ச விகுதி ஆகியவற்றை உடையதாய் வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சச்சொல் **தெரிநிலை வினையெச்சம்** எனப்படும். காலத்தை வெளிப்படையாகக் காட்டுவதால் தெரிநிலை வினையெச்சம் எனப்பட்டது.
- **(எ.கா) வந்து** நின்றான் - இறந்தகாலம் காட்டியது.

**குறிப்பு வினையெச்சம்:**

- காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், ஏதேனும் ஒரு வினைமுற்றுச் சொல்லைக் கொண்டு முடிவது, **குறிப்பு வினையெச்சம்** எனப்படும்.
- **(எ.கா) மெல்ல** வந்தான் **விரைவாக** வந்தான்.

## இரண்டு வினைச்சொற்களின் வேறுபாடு அறிதல்

**வினைச்சொல்:**

ஒரு தொழிலை உணர்த்தி வரும் சொல் வினைச்சொல் எனப்படும்.

**வினைச்சொல்லின் பண்புகள்:**

- காலம் காட்டும், வேற்றுமை ஏற்காது.
- திணை, பால், எண், இடங்களை உணர்த்தி வரும்

**இரு வினைகளின் வேறுபாடு சொற்கள் சில எடுத்துக்காட்டு:-**

1. **அடங்கு – அடக்கு**

   ஆசிரியர் அடக்க, மாணவர்கள் அடங்கினர்

2. **அறிவது – அரிது**

   இலக்கணத்தை அறிவது மிகவும் அரிது

3. **நிறைந்த – நிறைத்த**

   பழக்கலவை நிறைந்த ஜாடியில் தண்ணீரை நிறைத்தனர்

4. **விளித்து – விழித்து**

   அம்மா விளித்ததும், கண் விழித்தான்

5. **குவிந்து – குவித்து**

   பள்ளியில் குவிந்த குப்பைகளை அள்ளி வண்டியில் குவித்து வைத்தனர்

6. **பரந்து – பறந்து**

   விதைகள் பரந்து கிடப்பதை உண்ண பறவைகள் பறந்து வந்தன.

7. **மாறு – மாற்று**

   நேர்மையானவனாக மாறு, மற்றவரையும் மாற்று.

8. **உண்ணு – உன்னு**

   உணவை உண்ணும்போது உழவர்களை உன்னுதல் வேண்டும்.

9. **கலைத்தல் – களைத்தல்**

   மாணவர்கள் கலைத்த படங்களை ஒட்டி களைத்துப் போயினர்.

10. **பெரு – பெரு**

    பெருமை மிகுந்த செயல்களை செய்வதால், மதிப்புபெறுகின்றனர்.

11. **உரி – உறி**

    கிழங்கை தோல் உரித்து தூக்கி (உறித்து) போட்டனர்

12. **சீரிய – சீறிய**

சீரிய (உயர்ந்த) பெருமை வாய்ந்த பாண்டிய மன்னனை சீறிய (கோபம்) கண்ணகி.

**13.ஈந்தாள் – ஈன்றாள்**

தன் உயிரைக் கொடுத்து (ஈந்து) பிள்ளையை பெற்றெடுத்தாள் (ஈன்றாள்).

**14.உணர்ந்த – உணர்த்தி**

கல்வியின் சிறப்பை உணர்ந்த மாணவன், சக மாணவர்களுக்கும் உணர்த்தி சென்றான்.

**15.பொருந்து – பொருத்து**

படங்களை பொருத்தி சரியாக பொருந்தியுள்ளதா எனப் பார்த்தான்.

**16.கலைத்தல் – களைத்தல்**

அவன் அடிக்கிவைத்த எல்லாவற்றையும் கலைத்ததால் களைப்பாக காணப்பட்டான்.

**17.பணிந்து – பணித்து**

தலைவர் தொண்டர்களை வேலை செய்ய பணித்தார். தொண்டர்கள் தலைவருக்குப் பணிந்தனர்.

**18.குவிந்து – குவித்து**

அமைச்சர் பதவியேற்றவுடன் பாராட்டுகள் குவிந்தன. ஆதரவாளர்கள் பரிசுப் பொருட்களை குவித்தனர்.

**19.பரி – பறி**

பாரி பழங்களை பறித்து கொண்டு பரியில் சென்றான்.

## மாதிரி வினாக்கள்

**1. சரியான இணையைக் கண்டுபிடி.**

a) அன்பகத்து இல்லா = அன்பகத்து + இல்லா

b) இயல்பீராறு = இயல்பு + ஈராறு

c) நின்னடி =நில் + அடி

d) ஈண்டினியான் = ஈண்டு + இனியான்

e) விடை தெரியவில்லை

Ans: c

**2. சரியான இணையைத் தேர்ந்தெடு:**

I. உடற்குண்டாம் = உடற்கு + உண்டாம்

II. சீரிளமை = சீர்மை + இளமை

III. நீலவான் = நீலம் + வான்

a) I மட்டும்

b) II மற்றும் III மட்டும்

c) I மற்றும் II மட்டும்

d) I மற்றும் III மட்டும்

e) விடை தெரியவில்லை

Ans: b

**3. பொருந்தாததைக் கண்டுபிடி**

a) முன்றிலோ = முன்று + இலோ

b) நன்னாற்றல் = நல்ல + ஆற்றல்

c) எளிதாகும் = எளிது + ஆகும்

d) அடிக்குமலை = அடிக்கும் + அலை

e) விடை தெரியவில்லை

Ans: b

**4. தவறான இணையைக் கண்டறிக.**

I. ஐயைந்தாய் = ஐந்து + ஐந்தாய்

II. அஞ்செவி = அம் + செவி

III. ஊற்றுக்கோல் = ஊற்று+ கோல்

IV. கரணத்தேர் = கரணத்து + ஏர்

a) I, II மற்றும் III

b) I மற்றும் II

c) II மற்றும் III

d) அனைத்தும் தவறானவை

e) விடை தெரியவில்லை

Ans: c

**5. சரியான இணையைத் தேர்ந்தெடு.**

I. கற்றார் = கல் + தார்

II. அரியாசனமுனக்கே = அரி + ஆசனம் + உனக்கே

III. நாண்மலர் = நாண்+ மலர்

IV. முண்ணன்று = முண் + அன்று

a) I மற்றும் II சரி

b) II மற்றும் III சரி

c) I மற்றும் III சரி

d) II மற்றும் IV சரி

e) விடை தெரியவில்லை

Ans: a

**6. பின்வரும் கூற்றுகளில் சரியில்லாததைத் தேர்வு செய்க.**

I. கற்றூணன்று = கல் + தூண் + நன்று

II. பனாட்டு = பனை + ஆட்டு

III. பாசிலை = பசுமை + இலை

a) I மட்டும்

b) II மட்டும்

c) III மட்டும்

d) அனைத்தும்

e) விடை தெரியவில்லை

Ans: b

**7. தவறாக பொருந்தியுள்ளது எது?**

a) எண்கினங்கள் = எண்கு + இனங்கள்

b) தீந்தமிழ் = தீ + தமிழ்

c) தேவாரம் = தே + ஆரம்

d) நாண்மதி = நாள் + மதி

e) விடை தெரியவில்லை

Ans: b

**8. சரியான கூற்று/ கூற்றுகளைத் தேர்வு செய்யவும்:**

I. புன்கண்ணஞ்சும் = புன்மை + கண் + அஞ்சும்

II. உடற்குண்டாம் = உடல்கு + உண்டாம்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை, IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

Ans: a

**9. தவறாக பொருந்தியுள்ளது எது?**

I. நிலத்தினிடையே = நிலத்தின் + இடையே

II. தற்குறிப்பேற்ற அணி = தன் + குறிப்பு + ஏற்ற + அணி

III. உழவன் = உழவு + அன்

a) II மற்றும் III மட்டும்

b) II மட்டும்

c) I மட்டும்

d) I மற்றும் III மட்டும்

e) விடை தெரியவில்லை

Ans: b

**10.சரியான விடையைத் தேர்ந்தெடுக்க**

அங்கயற்கண்ணி - பிரித்தறிக

a) அம் + கயல் + கண்ணி

b) அங்+ கயல் + கண்ணி

c) அங்+ கயற் + கண்ணி

d) அம் + கயற் + கண்ணி

e) விடை தெரியவில்லை

Ans: a

**11.சரியான இணையைக் கண்டுபிடி.**

a) சிறுமை + அடி = சிற்றடி

b) வெண்மை + எயிறு = வெள்ளெயிறு

c) தெள் + நீர் = தென்னீர்

d)அன்பு + என + படுவது = அன்பெனப்படுவது

e) விடை தெரியவில்லை

Ans: b

**12.சரியான இணையைத் தேர்ந்தெடு:**

I. முந்தைய + நாள் = முந்தையநாள்

II. வடக்கு + மேற்கு = வடமேற்கு

III. யாது + ஒன்றும் = யாதொன்றும்

a) I மட்டும்

b) II மற்றும் III

c) I மற்றும் II

d) I மற்றும் III

e) விடை தெரியவில்லை

Ans: b

**13.பொருந்தாததைக் கண்டுபிடி.**

a) தன் + நாடு = தன்னாடு

b) கண்டு + அறி = கண்டறி

c) கதிர் + சுடர் = கதிர்சுடர்

d) ஒத்து + ஆங்கு = ஒத்தாங்கு

e) விடை தெரியவில்லை

Ans: c

**14.தவறான இணையைக் கண்டறிக.**

I. நீள் + உழைப்பு = நீண்ட உழைப்பு

II. சிறுமை + தொகை = சிறுதொகை

III. வெறுமை + இலை = வெற்றிலை

IV. இனிமை + அன் = இனியன்

a) I, II மற்றும் III

b) I மற்றும் II

c) II மற்றும் III

d) அனைத்தும் தவறானவை

e) விடை தெரியவில்லை

Ans: b

**15.சரியான இணையைத் தேர்ந்தெடு.**

I. மேன்மை + தகு = மேதகு

II. நம்பர்க்கு + அங்கு = நம்பர்க்காங்கு

III. கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன = கண்டெடுக்கப்பட்டுள்ளன

IV. பாகு + கல் + காய் - பாகற்காய்

a) I மற்றும் II சரி

b) II மற்றும் III சரி

c) I மற்றும் III சரி

d) II மற்றும் IV சரி

e) விடை தெரியவில்லை

Ans: c

**16.பின்வரும் கூற்றுகளில் சரியில்லாததைத் தேர்வு செய்க.**

I. நன்கு + அணியர் = நன்கணியர்

II. தன் + நூல் = தன்னூல்

III. நா + தொலைவு + இல்லை = நாத்தொலைவில்லை

a) I மட்டும்

b) II மட்டும்

c) III மட்டும்

d) அனைத்தும்

e) விடை தெரியவில்லை

Ans: b

**17.தவறாக பொருந்தியுள்ளது எது?**

a) நடுவு + இகந்து + ஆம் = நடுவிகந்தாம்

b) தாய்மை + அன்பின் + தனை = தாய்மையன்பிறனை

c) பாடு + ஆண் + திணை = பாடாண்திணை

d) நேற்று + பொழுது = நேற்றுப்பொழுது

e) விடை தெரியவில்லை

Ans: d

